

# வார்த்தைகளின் ஜீவன் மற்றும் வல்லமை

கான்ராட் எல். டிபிரீஸ்

# வார்த்தைகளில் ஜீவன் மற்றும் வல்லமையும்



கோன்ரேட் எல். டிபிரீஸ்

# வார்த்தைகளில் ஜீவன் மற்றும் வல்லமையும்

கோன்ரேட் எல். டிபிரீஸ்

CONRAD DEFRIESE MINISTRIES

P.O. Box 2627

LaGrange, GA 30241

<u>ஒப்புரை</u>

என் மனைவி லிண்டாவின் பங்களிப்பை நான் ஒப்புக்கொள்கிறேன். மற்றும் எங்கள் நண்பர் டெப்பி போவ்வர், இந்த கையேட்டில் தங்கள் பல மணி நேர வேலை, அவற்றின் பரிந்துரைகள் மற்றும் சேர்த்தல்கள் மற்றும் அதன் முடிவிற்கு பெரிதாக பங்களித்திருக்கின்றன.

கோனர்ட் . எல் டிபிரீஸ்

## வார்த்தைகளின் ஜீவன் மற்றும் வல்லமை

## பொருளடக்கம்


பாடம் 1 வார்த்தைகளின் முக்கியத்துவம் மற்றும் வல்லமை

பாடம் 2 வாாத்தைகள் விதைகள்

பாடம் 3 விசுவாச அறிக்கைகளின் முக்கியத்துவம்

பாடம் 4 விசுவாச அறிக்கை எவ்வாறு செயல்படுகின்றன?

பாடம் 5 கர்த்தருடைய வார்தைக்கு குரல் கொடுப்பது

பாடம் 6 கர்த்தருடைய வார்தை

பாடம் 7 முறுமுறுப்பில்லாமல் எல்லாவற்றையும் செய்யுங்கள்

பாடம் 8 வார்த்தையை பேசு

பாடம் 9 அறிக்கை துணுக்குகள்

## *வார்த்தைகளின் ஜீவனும் வல்லமையும்*

## பாடம் 1

### வார்த்தைகளின் முக்கியத்துவம் மற்றும் வல்லமை

வார்த்தைகள் மிகவும் முக்கியம். கர்த்தர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்த மற்றும் உங்களைத் திட்டமிட செய்வதற்கும் வார்த்தை முக்கிய வழியமுறையாவும். வார்த்தைகள் அதிகாரத்தை வெளியிடும் வழிமுறையாகும். வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்கை வாழ்வதற்கு வார்த்தைகளின் முக்கியத்துவத்தை அறிந்துக்கொள்வது அவசியம்.

1.மரணமும் ஜீவனும் உன் நாவின் பலத்தில் இருக்கிறது.

வார்த்தைகள் விதைகள் போல. விதைகளை நிலத்தில் விதைக்கையில், அறுவடைக்கு தேவையானவற்றை உற்பத்தி செய்ய அது வேலை செய்கிறது. வார்தைகளை பேசப்படும் போது, அந்த வார்தைகளின் அதிகாரம் அறுவடைக்கு தேவையான வேலை செய்கிறது. விசுவாசம் மற்றும் அன்பின் வார்த்தைகள் வாழ்கையை உருவாக்குகின்றன. சந்தேகம் மற்றும் பயத்தின் வார்தைகள் மரணத்தை உருவாக்குகின்றன.

> *<u>நீதிமொழிகள் 18:21</u> மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள்.*

***<u>Moffat Translation:</u>***

> *<u>நீதிமொழிகள் 18:21</u> மரணமும் ஜீவனும் நாவினால் தீர்மானிக்கப்படுகிறது. பேசுகிறவனே அதின் விளைவையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

***<u>Knox Translation:</u>***

> *<u>நீதிமொழிகள் 18:21</u> மரணம் மற்றும் ஜீவனின் திறவுகோல் நாவு: அன்பாக பயன்படுத்தினால், நல் ஈடுசெய்யும்.*

உன் நாவை ஞானமாய் பயன் படுத்துவது உன் விருப்பமாகும்.

***<u>New American Bible</u>***

*<u>நீதிமொழிகள் 18:21</u> நாவின் வல்லமையில் மரணமும் ஜீவனும் இருக்கிறது: அதை நண்பனாக்குகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.*

உங்கள் நாவை உங்கள் நண்பனாக ஆக்கிக்கொள்ள வாய்ப்புகளை உருவாக்குங்கள். உங்கள் நாவு ஜீவன் அல்லது மரணத்தை உண்டாக்கும். அதின் பயன் உன் கையில் இருக்கிறது.

***<u>Amplified Bible</u>***

*<u>நீதிமொழிகள் 18:21</u> மரணமும் ஜீவனும் நாவின் வல்லமையில் இருக்கிறது: அதின் படி நடக்கிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள் (மரணம் மற்றும் ஜீவனிற்காக).*

2. நீ பேசுகிற வார்த்தைகளினாலே நீ நியாயம் தீர்க்கப்படுகிறாய் அல்லது கண்டிக்கப்படுகிறாய்.

உங்கள் சொந்த வார்த்தைகளே உங்களை விடுவிக்கும் அல்லது கண்டிக்கும்

*<u>மத்தேயு 12:34</u> விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் கொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.*

*35 நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்.*

*36. மனுஷர் பேசும் வீணான வார்த்தைகளை யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*37. ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்: அல்லது என்ன வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.*

வார்த்தைகளின் வல்லமை இருக்கிறது. வார்த்தைகளை பேசுவது நீங்கள் செய்யும் மிக வல்லமை வாய்ந்த செயலாகும். வார்த்தைகளை பேசுவது நீங்கள் செய்யும் காரியங்களில் வல்லமை நிறைந்த ஒன்றாகும்.

***Amplified Bible***

*மத்தேயு 12:37 உன் வார்த்தைகளினாலே நீ நீதிமானாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டாய், மேலும் உன் வார்த்தைகளினாலே நீ நியாயம் தீர்க்கப்பட்டு தண்டிக்கப்படுவாய்.*

கர்த்தருடைய வார்த்தைகளை தியானிப்பது உன் இருதயத்தில் மிகுதியான நல் வார்த்தைகளை உருவாக்கும்.

*மத்தேயு 15:11 ஒருவன் வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.*

3. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளினாலே சிக்கிக்கொள்ளலாம்.

| |
|---|
| சிக்கிக்கொள்வது |
| வலை அல்லது பொறி |

*நீதிமொழிகள் 6:2 நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிப்பட்டாய்.*

மற்றவர்கள் சொல்வதைவிட நீங்கள் சொல்வதையே நீங்கள் நம்புகிறீர்கள். எதிர்மறையான சொற்களைப் பேசுவதின் மூலம் நீயே சிக்கிக்கொள்கிறாய்.

***Amplified Bible***

*நீதிமொழிகள் 6:2 உன் உதடுகளின் வார்த்தைகளினாலே சிக்குண்டாய். உன் வாயின் வார்த்தைகளினாலே பிடிப்பட்டாய்.*

நீங்கள் சொல்வதை கவனியுங்கள்! பிசாசு உங்களை தவறான காரியத்தைச் சொல்லச் செய்து, அவன் உங்களை சிக்க வைப்பான். தவறான வார்த்தைகளை பேசுவதின் மூலம் உங்கள் வாழ்க்கையில்

ஒரு பிடிப்பு அல்லது கையாளுதலை பிசாசுக்கு கொடுக்காதே. நீங்கள் கொடுக்காவிட்டால் பிசாசு ஒரு பிடியையும் எடுக்க முடியாது.

நீங்கள் மறுபடியும் பிறந்ததினால், நீங்கள் இந்த உலகத்ததை விட்டு வெளியேறும் போது பரலோகத்திற்கு செல்வதை உறுதிப்படுத்துகிறீர்கள். எனினும், இந்த உலகில் வெற்றி உள்ள வாழ்க்கை வாழ கர்த்தருடைய வார்த்தை உங்களுக்குள் நிலைத்திருக்க வேண்டும். அவருடைய வார்த்தை உங்கள் இருதயத்திலும் வாயிலும் வைக்கப்பட வேண்டும்.

4. தன் வாயை காக்கிறவன் தன் ஜீவனை காக்கிறான்.

நீங்கள் சொல்வதைக் கட்டுப்படுத்துவது உங்கள் கைகளில் உள்ளது. உங்கள் வார்த்தைகளை கட்டுப்படுத்துங்கள். உங்கள் வார்த்தைகளைக் காத்துக்கொள்வதன் மூலம் உங்கள் உயிரை காத்துக்கொள்ளுகிறீர்கள்.

*நீதிமொழிகள் 13:3*

*தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்: தன் உதடுகள விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.*

***New International Version***

*நீதிமொழிகள் 13:3 தன் நாவைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான், ஆனால் கடுமையாக பேசுபவன் அழிந்துபோவான்.*

5. இனிமையான பேச்சு கற்றுக்கொள்வதை அதிகரிக்கும்.

ஞானமுள்ள ஒருவன் தனது உதடுகளை அன்பான இனிமையான மற்றும் உற்சாகமான வார்தைகளை பேசுவதற்கு பயிற்சி செய்வான். மற்றவர்களுக்கும் உங்களுக்கும் உதவும் படியாக உங்கள் வார்த்தைகளை உபயோகிக்க கற்றுக்கொள்ளுங்கள். கடுமையான, அக்கறையற்ற, சிந்திக்காமல் பேசப்படும் வார்தைகள் மற்றவர்களை ஆசீர்வதிப்பதில்லை மாறாக அவர்களுக்கு தீங்கு விளைவிக்கிறது. உங்கள் வாய் ஞானமாய் பேசுவதற்கு நீ போதிப்பது உங்கள் கையில் இருக்கிறது.

## New American Standard

*<u>நீதிமொழிகள் 16:21</u> இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகியென்னப்படுவான்: உதடுகளின் மதுரம் கல்வியைப் பெருகப்பண்ணும்.*

## Amplified Bible

*<u>நீதிமொழிகள் 16:21</u> இருதயத்தில் ஞானமுள்ளவன் நிதானிக்கிறவனாக அழைக்கப்படுவான். பேச்சின் மதுரம் செயல்நோக்கத்தை அதிகரிக்கும்.*

*<u>நீதிமொழிகள் 16:23</u> இருதயத்தில் ஞானமுள்ளவன் விவேகி, அறிவும் புத்தியுள்ளவனாகவும் அழைக்கப்படுவான், மேலும் மகிழ்சியளிக்கிற பேச்சு கல்வியைப் பெருக பன்னும் (பேசுபவருக்கும் கேட்பவருக்கும்)*

## New American Standard

*<u>நீதிமொழிகள் 16:23</u> ஞானமுள்ளவனின் இருதயம் அவனுடைய வாயைப் போதிக்கும், அவன் உதடுகளுக்கு கல்வியைப் பெருகப்பன்னும்.*

## Amplified Bible

*<u>நீதிமொழிகள் 16:23</u> ஞானமுள்ளவனின் இருதயம் அவனுடைய வாயைப் போதிக்கும், அவனுடைய உதடுகளுக்கு செயல் நோக்கத்தை அதிகரிக்கும்.*

உங்களுடைய வார்தைகளையும், உங்கள் குரலின் தொனியையும் ஞானமாய் பயன்படுத்த நீங்கள் தேர்ந்தெடுத்தால் உங்களுக்கும் நீங்கள் பேசும் நபருக்கும் அது பிரயோஜனமாயிருக்கும். உன் வாய்க்கும் போதிப்பது உன் கையில் இருக்கிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதற்கும் எப்படி சொல்கிறீர்கள் என்பதற்கும் நீங்கள் தான் பொறுப்பாவீர்கள். கர்த்தருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிவது வெற்றிக்கும் விழி!

6.இனிமையான வார்த்தைகள் எலும்புகளுக்கு ஆரோக்கியமாயிருக்கிறது.

இனிமையான வார்த்தைகள் உங்கள் மனதில் ஸ்திரத் தன்மையையும் சமாதானத்தையும் கொண்டுவருகின்றன. அத்துடன் உங்கள் உடலுக்கு ஆரோக்கியத்தையும் சுகப்படுத்துதலையும் வழங்குகின்றன.

*நீதிமொழிகள் 16:24 இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவிற்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமாகும்.*

***Amplified Bible***

*நீதிமொழிகள் 16:24 இனிய சொற்கள் தேன்கூடு போல் சிந்தைக்கும் மதுரமும் சரீரத்திற்கு சுகமுமாகும்.*

ஞானத்தோடு பேசப்படும் வார்த்தைகள் ஔஷதத்தையும் சுகத்தையும் கொடுக்கும்.

*நீதிமொழிகள் 12:18 பட்டயகுத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு: ஞானமுள்ளவர்களுடைய நாவோ ஔஷதம்.*

***Amplified Bible***

*நீதிமொழிகள் 12:18 பட்டயகுத்துகள் போல் கடினமாக பேசுகிறவர்கள் உண்டு, ஞானமுள்ளவனின் நாவு ஔஷதம்.*

7.ஞானமுள்ளவன் தன் வார்த்தைகளை கட்டுப்படுத்துகிறான்.

மிக விரைவாக பேச வேண்டாம். உங்கள் வார்த்தைகளை ஞானமாய் தேர்ந்தெடுங்கள். உங்கள் மனதில் வரும் எதையும் சொல்வதை கட்டுப்படுத்துங்கள். ஞானமுள்ளவர்கள் வார்த்தைகளை கவனமாய் தேர்வு செய்கிறான், ஏனென்றால் அந்த வார்த்தைகளைக் கேட்ட அனைவருக்கும் பெரும் தாக்கத்தை ஏற்ப்படுத்த முடியும் என்பதை அறிந்திருக்கிறான்.

*நீதிமொழிகள் 17:27 அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான்: விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்.*

**Amplified Bible**

*நீதிமொழிகள் 17:27 அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான், விவேகி குளிர்ந்த ஆவியுடையவன்.*

**New International Version**

நீதிமொழிகள் 17:27 அறிவுடையவன் தன் வார்த்தைகளை அடக்குகிறான், விவேகி சீரான மனமுடையவன்.

**New American Standard**

*நீதிமொழிகள் 17:27 தன் வார்த்தைகளை அடக்குகிறவன் அறிவுடையவன், குளிர்ந்த ஆவியுடையவன் விவேகி.*

*சங்கீதம் 141:3 கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும், என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.*

8. மாறுபாடான பேச்சுகளை உங்களை விட்டு தூரமாக்குங்கள்.

கர்த்தருடைய வார்த்தை, நீங்கள் ஜெபிக்கிற காரியங்கள் மற்றும் உங்கள் விசுவாசத்திற்கு விரோதமான காரியங்களைச் சொல்ல உங்களை நீங்கள் அனுமதிக்காதீர்கள்.

*நீதிமொழிகள் 4:24 வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்கு தூரப்படுத்து.*

**Amplified Bible**

*நீதிமொழிகள் 4:24 தவறானதும் உண்மையற்றதுமான பேச்சை உன்னை விட்டகற்றி, திட்டமிட்டதும் மாறுபாடான பேச்சை உனக்கு தூரப்படுத்து.*

9. மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும்.

சாத்தியமில்லாத சூழ்நிலையைப் போல காணப்பட்டாலும் மெதுவான பதில் ஜெயத்தை கொண்டுவர முடியும். கோபமாய் இருக்கிறவனிடத்தில் கோபம் கொள்ள வேண்டாம்.

*நீதிமொழிகள் 15:1 மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்: கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.*

*<u>நீதிமொழிகள் 25:15</u> நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம், இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்.*

*<u>நீதிமொழிகள் 25:15</u> நீண்ட பொறுமையினாலும் ஆவியின் அமைதலினாலும் பிரபு அல்லது நீதிபதியை சம்மதிக்கப்பண்ணலாம், இனிய நாவு தடைபன்னும் நாவையும் நொறுக்கும்.*

10.ஆரோக்கியமான நாவு ஜீவவிருட்சம்.

மேன்மையான பேச்சு குணப்படுத்துவதை ஊக்குவிக்கிறது. தவறான மற்றும் மாறான வார்த்தைகள் நீங்கள் பெற்றுள்ள வந்துள்ள வலிமை மற்றும் சுகத்தை இழக்க செய்யும்

*<u>நீதிமொழிகள் 15:4</u> ஆரோக்கியமான நாவு ஜீவ விருட்சம்: நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்.*

## Amplified Bible

*<u>நீதிமொழிகள் 15:4</u> கனிவான நாவு (அதின் சுகம் கொடுக்கும் வல்லமையோடு) ஜீவ விருட்சம், ஆனால் அதில் உள்ள முரண்பாடு ஆவியை நொறுக்கும்.*

11.தன் நாவைக் காக்கிறவன் தன் ஆத்துமாவை துன்பத்திலிருந்து காக்கிறான்.

| |
|---|
| ஆத்துமா –சிந்தை, விருப்பம் மற்றும் உணர்வுகள் |

நீங்கள் சொல்வதைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமை.

*<u>நீதிமொழிகள் 21:23</u> தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கி காக்கிறான்.*

நீங்கள் உங்கள் வார்த்தைகளை பாதுகாக்கும் போது, உங்கள் மனதும் உணர்ச்சிகளும் கலக்கமடையாது.

## New International Version

*<u>நீதிமொழிகள் 21:23</u> தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் இடுக்கண்ணிலிருந்து தன்னை விலக்குகிறான்.*

12. பரியாசமுள்ள வார்த்தைகளை பேசுவதை நிறுத்தும்போது சண்டைகள் நிறுத்தப்படும்.

| |
|---|
| பரியாசக்காரன் - வெளிப்படையாக அவமதிப்பதும் விரும்பாததும். முன்னோரின் பராம்பரியங்களை தகுதியற்றதும் என்றும் வெறுக்கதக்கது என்று தள்ளுகிறவன் ஆல்லது ஒதுக்குகிறவன். |

மற்றவர்களை அவமதிப்பாக பேசுவதை நிறுத்தும் போது, மோதல்கள், சண்டையிடுதல் மற்றும் விவாதங்கள் நிறுத்தப்படும்.

*<u>நீதிமொழிகள் 22:10</u> பரியாசக்காரனைத் துரத்திவிடு: அப்பொழுது வாது நீங்கும், விரோதமும் அவமானமும் ஒழியும்.*

*<u>நீதிமொழிகள் 26:20</u> விறகில்லாமல் நெருப்பு அவியும்: கோள் சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்.*

13. வார்த்தைகளை பேசுவதற்கு அவசரப்பட வேண்டாம்.

நீங்கள் விரைவாகப் பேசினால் தவறாக பேசுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. நீங்கள் என்ன பேசப் போகிறீர்கள் என்றும் அந்த வார்த்தைகளின் தாக்கத்தை பற்றியும் பேசுவதற்கு முன் சிந்தித்து பாருங்கள்.

*<u>நீதிமொழிகள் 29:20</u> தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப் பார்க்கிலும் மூடனை நம்பலாம்.*

14. அடக்கப்படாத நாவு உங்கள் இருதயத்தை வஞ்சிக்கும்.

*<u>யாக்கோபு 1:26</u> உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.*

## *Amplified Bible*

*யாக்கோபு 1:26 தன்னை தேவபக்தியுள்ளவன் என்று யாராகிலும் எண்ணினால் (தன் விசுவாசத்தின் வெளிப்புற கடமைகளை வெறித்தனமாக கைக்கொண்டு) ஆனால் தன் இருதயத்தை வஞ்சித்து தன் நாவை அடக்காமல் இருப்பவனுடைய ஆராதனை பிரயோஜனமற்றதாயிருக்கும் (பயனற்ற, கணியற்ற).*

நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அதுவே உங்கள் விருப்பம் என்று உங்கள் இருதயம் நம்புகிறது. நீங்கள் பேசும் போது நல்லதை மட்டும் இல்லாமல் கேட்டதையும் அது ஏற்றுக்கொள்கிறது. அதிகமான தவறான காரியத்தை பேசுவதினால் உங்களை தவறானவைகளை நம்ப செய்யும். அது போல சரியான காரியத்தைச் பேசுவதினால் சரியானவைகளை நம்ப செய்யும்.

15. தவறான காரியத்தை ஒருபோது சொல்லாத நபர் முதிர்ச்சியான மனிதனாக இருக்கிறார்.

சரியானதை பேசி, மனதை புண்படுத்தாமல் இருப்பது ஆவிக்குரி முதிர்ச்சியை காட்டுகிறது. தாலந்துகள், திறமைகள் மற்றும் மத நடவடிக்கைகள் ஆகியவை ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளம் அல்ல.

*யாக்கோபு 3:2 நாம் எல்லாரும் அனேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல் தவறாதவனானால், அவன் பூரண புருஷனும், தன் சரீரமுழுவதையும், கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.*

உங்கள் நாவை அடக்குதல் முதிர்ச்சியை ஏற்படுத்தும்

## *Amplified Bible*

*யாக்கோபு 3:2 நாமெல்லாரும் அனேக விஷயங்களில் தடுமாறி விழுந்து இடறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால் (ஒருபோது தவறாக பேசாதவன்), அவன் முழுவதும் வளர்ந்த குணமும் பூரண புருஷனும், தன் சரீரமுழுவதையும் அடக்குபவனும் தன் முழு குணத்தையும் அடக்கிக்கொள்பவனுமாயிருக்கிறான்.*

*யாக்கோபு 3:3* பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாயிகளில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழு சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.

யாக்கோபு 3:3 –ல் குறிப்பிடப்பட்டுள்ள "குதிரைகள்" உங்களை குறிக்கிறது. "கடிவாளம் போட்டு" என்றால் உங்கள் நாக்கை கட்டுப்படுத்துவதன் மூலம் நீங்களே உங்களை கட்டுப்படுத்துகிறீர்கள்.

*யாக்கோபு 3:4* கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங் காற்றுகளால் அடிப்பட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பபடும்.

*யாக்கோபு 3:4 –ல் "கப்பல்கள்" சூழ்நிலையை குறிக்கிறது. உங்கள் சூழ்நிலையை உங்கள் நாக்கை கொண்டு மாற்றலாம். நீங்கள் சூழ்நிலைகளை மாற்றுவதை விட விரைவாக உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ளலாம். கடிவாளம் மற்றும் சுக்கானை காண முடியாது. ஆனால், அவர்கள் காணக்கூடியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. வார்த்தைளும் கண்ணுக்கு தெரியாதவை. காணமுடியாது: ஆனால், அவைகள் காணக்கூடியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. கர்த்தரின் வார்த்தையை உன்னில் வேலை செய்வதை நீங்கள் அதிகமாய் அனுமதித்தால், உங்கள் நாக்கு அதிகமாய் கட்டுப்பாட்டில் இருக்கும்.*

16. கர்த்தருடைய வார்த்தையை தியானியுங்கள்.

*யோசுவா 1:8* இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். அப்பொழுது புத்துமானாயும் நடந்துக்கொள்ளுவாய்.

*சங்கீதம் 1:2* கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

*3 அவன் நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.*

| |
|---|
| தியானம் - மெதுவான குரலில் முனுமுனுப்பது |

கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பதினால் அழிவில்லாத வித்து நல்ல நிலமாகிய உங்கள் இருதயத்தில் விளைச்சல் உண்டாகதக்கதாக உருவாகும். படிப்பதும் கேட்பதும் மாத்திரம் எப்பொழுதும் போதாது. தேவனுடைய வார்த்தையை தியானிப்பதே பலன் தரும்!

17. ஒரு காரியத்தை ஆணையிடு அது உறுதிப்படும்.

நீங்கள் தேவனிடத்தில் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைத் தீர்மானித்து, நீங்கள் விரும்புவதை உறுதிப்படுத்துகிற வேதவாக்கியங்களைக் கண்டுபிடியுங்கள். பின்பு அதை உங்களுடையதென்று ஆணையிட்டு விசுவாசத்தினால் அறிக்கை செய்யுங்கள்.

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும் உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.*

## Amplified Bible

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை தீர்மானித்து நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்: உன் பாதைகளில் வெளிச்சம் (தேவனுக்கு பிரியமானவர்களிடத்தில்) பிரகாசிக்கும்.*

*ஏசாயா 43:26 நாம் ஒருவரோடொருவர் வழக்காடுபடி எனக்கு நினைப்பூட்டு, நீ நீதிமானாக விளங்கும் படி உன் காரியத்தை சொல்.*

18. சந்தேகப்படாமல் மலையிடம் பேசுங்கள்.

மலையாகிய உங்கள் பிரச்சனையை பார்த்துப் பேசுங்கள். நீங்கள் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டும். நீங்கள் உங்கள் மலைகளை குறித்து தேவனிடத்தில் பேசவேண்டும் என்று வேதம் கூறவில்லை. பிரச்சனைகளை தேவனுடைய வார்த்தைக்கு எடுத்து செல். மலையினிடத்தில் தேவனுடைய வார்த்தை பேசி அறிவியுங்கள், நீங்கள் பேசும் வார்த்தைகளை நம்புங்கள்.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*சகரியா 4:7 பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய். தலைக்கல்லை அவன் கொண்டு வருவான். ஆதற்கு கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்.*

*மத்தேயு 17:20 அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான், கடுகிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம், உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

19. நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை ஜெபிக்கும் போது, அதை பெற்றுக் கொண்டீர்கள் என்று நம்புங்கள்.

நீங்கள் ஜெபம் செய்து கர்த்தரிடத்தில் எதையாகிலும் கேட்கும் போது அதை ஜெபம் செய்யும்போதே பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசியுங்கள். உங்கள் இயற்கையான உணர்வுகள் வெளிப்படுத்துவதற்கு முன் விசுவாசம் பதிலை பெறுகிறது.

*மாற்கு 11:24 ஆதலால் நீங்கள் ஜெபம் பன்னும்போது எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப்*

*பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

***Weymouth Translation***

*<u>மாற்கு 11:24</u> அதனாலேயே உங்களுக்கு சொல்கிறேன், எதையாகிலும் நீங்கள் ஜெபித்து கேட்கும்போது, நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்று விசுவாசித்தால் - அவைகள் உங்களுக்கு உண்டாகும்.*

*<u>நீதிமொழிகள் 7:5</u> ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தான் என்று சொல்வாயாக.*

*<u>யோவேல் 3:10</u> உங்கள் மண்வெட்டிகளை பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்: பலவீனனும் தன்னை பலவான் என்று சொல்வானாக.*

20. நீங்கள் பேசுகிற மற்றும் உன் இருதயத்தில் நம்புகிற தேவனுடைய வார்த்தைகளை செயல் படுத்துவதற்காக தேவதூதர்கள் அனுப்பப்படுகிறார்கள்.

*<u>சங்கீதம் 103:20</u> கர்த்தருடைய வார்த்தையை கேட்டு, அவருடைய வசனத்தின் படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்.*

தேவனுடைய வார்த்தைக்கு குரல் கொடுங்கள். நீங்கள் பேசுகிற மற்றும் உன் இருதயத்தில் நம்புகிற தேவனுடைய வார்த்தையை செயல் படுத்த தேவதூதர்கள் உனக்கு பதிலாக கிரியை செய்கிறார்கள்.

21. தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்.

உன் வாயில் தேவனுடைய வார்த்தையை வைத்து அதை பேசு.

*<u>சங்கீதம் 119:172</u> உமது கற்பனைகள் எல்லாம் நீதி உள்ளவைகள்: ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விசரித்துச் சொல்லும்.*

நீங்கள் விசுவாசிக்கிறவைகளை சொல்லுங்கள்

*சங்கீதம் 91:2* நான் கர்த்தரை நோக்கி: நீ என் அடைக்கலம்: என் கோட்டை , என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

*எபேசியர் 6:17* இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

எபேசியர் 6:17 –ல் "வார்த்தை" (ரேமா, கிரேக்க வார்த்தை) என்ற வார்த்தைக்கு சொல்லப்பட்ட வார்த்தை என்றும் பொருள்.

கர்த்தருடைய வார்த்தையை பேசுவதின் மூலம் நீங்கள் ஆவியின் பட்டயத்தை உபயோகிக்கிறீர்கள். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து பேசும்போது அதில் உள்ள வல்லமை கிரியை செய்கிறது.

*கொலோசேயர் 3:16* கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக. சுங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி,

*யோவான் 15:7* நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.

தேவனுடைய வார்த்தையை உங்கள் வாயில் வையுங்கள்

*ரோமர்10 :6* விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?

*7* அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி:

*8* இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.

*9 என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*

*10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாகவாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*

*2கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து உன் வாயினாலே அறிக்கை செய்.

22. தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்யுங்கள்.

உன் நிஜ வாழ்கையில் உண்மையாகுவதற்கு கர்த்தருடைய வார்த்தையை அறிக்கை செய்வது முக்கியமாகும். கர்த்தருடைய வார்த்தையை நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு அறிக்கை செய்கிறீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அது உயிருள்ளதாகவும் உண்மையுள்ளதாகவும் இருக்கும். உங்கள் வாழ்கையிலும் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருடைய வார்த்தையை ஒப்புக்கொண்டு அறிக்கை செய்யுங்கள்.

வேலை – அறிக்கையிடுதல்

*எபிரேயர் 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்.*

*எபிரேயர் 4:14 வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரணாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால், நாம் பண்ணின அறிகையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்ககடவோம்.*

*<u>எபிரேயர் 10:23</u> அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கடவோம்: வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.*

*<u>பிலமோன் 1:6</u> உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்தியாந்நியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன் படவேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.*

*<u>தீத்து 3:8</u> இந்த வார்த்தை உண்மையுள்ளது: தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளை செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளை குறித்துத் திட்டமாய் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்: இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.*

23. உன் வாயினாலே வாழ்க்கையின் விதிமுறைகளை செயல்ப்படுத்து.

தேவனுடைய வார்த்தையை பேசுவதினாலும் விசுவாசிப்பதினாலும் அதில் உள்ள வல்லமையை செயல் பட வைக்கிறது.

*<u>ரோமர் 8:2</u> கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின பிரமாணம் என்னை பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*

*<u>நீதிமொழிகள் 10:11</u> நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று: கொடுமையோ துன்மார்க்கனுடைய வாயை அடைக்கும்.*

நீதிமொழிகள் 10:11 –ல "ஊற்று" என்பது ஆதாரம் என்பதாகும்

24. இயேசு உன் வார்த்தைகளை கவனிக்கிறார்.

நீங்கள் சொல்பவைகள் உன் விசுவாசத்தை வளர்க்கலாம் அல்லது இடையூராகவும் இருக்கலாம்.

*<u>மாற்கு 9:22</u> இவனைக் கொல்லும்படிக்கு அது அநேகந்தரம் தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று. நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்றான்.*

23. இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்ககூடுமானால் ஆகும், விசுவாசிக்கறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.

## Wuest Translation

*மாற்கு 9:22 …ஆனால் உங்களால் எல்லாம் செய்யக்கூடுமானால், எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.*

*23 இயேசு அவனை நோக்கி, உன் வார்த்தைகளின் படியே, உண்னால் முடியுமானால்: விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.*

25. உன் வார்த்தையினாலே கட்டவும் கட்டவிழ்க்கவும் முடியும்.

*மத்தேயு 16:19 பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்: பூலோகத்திலே நீ கட்டுகறது எதுவோ அது பரலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

*உங்கள் வார்த்தையினால் பரலோகத்தில் கட்டப்பட்டிருக்கிறவைகள் எவைகளோ பூலோகத்திலும் கட்டப்பட முடியும். பரலோகத்தில் ஏற்கனவே கட்டவிழ்க்கப்பட்டிருப்பவைகளை எவைகளோ பூமியில் கட்டவிழ்க்கப்படும்.*

## Amplified Bible

*மத்தேயு 16:19 பரலோக ராஜ்ய்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்: நீ எவைகளை பூமியில் கட்டுகிறாயோ (ஒழுங்கற்றவைகளும் ஒழுக்கமற்றவைகளுமாயிருப் 21 கைவள்) அவைகள் பரலோகத்திலே கட்டப்படும்: பூமியலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ (ஒழுக்கமுள்ளவைகள்) அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்.*

26. உங்கள் வார்த்தைகளுக்கு ஏற்ப கர்த்தர் கிரியை செய்கிறார்.

தேவன் சொன்னவைகளை குறித்து இஸ்ரவேல் புத்திரர் சந்தேகித்தனர். பணிரெண்டு வேவுக்காரர்களில் பத்து பேர் தீமையான செய்தியை, சந்தேகமும் பயமுள்ள அறிக்கையை கொண்டு வந்தார்கள்.

*<u>எண்ணாகமம் 13:32</u> நாங்கள் போய்ச் சுற்றிப்பார்த்து வந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்: நாங்கள் அதிலே கண்ட ஜனங்கள் எல்லாரும் மிகவும் பெரிய ஆட்கள்.*

*<u>33</u> அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்: நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல இருந்தோம். அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி , இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றி பார்த்து வந்த தேசத்தைக்குறித்து துர்ச்செய்தி பரம்பச்செய்தார்கள்.*

*<u>எண்ணாகமம் 14:1</u> அப்பொழுது சபையார் எல்லாரும் கூக்குரலிட்டு புலம்பினார்கள்: ஜனங்கள் அன்று இராமுழுவதும் அழுதுக்கொண்டிருந்தார்கள்.*

*<u>2</u> இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். சபையார் எல்லாரும் அவர்களை நோக்கி: எகிப்து தேசத்திலே செத்துப்போனோமானால் நலமாயிருக்கும்: இந்த வனாந்திரத்தில் நாங்கள் செத்தாலும் நலம்.*

*<u>எண்ணாகமம் 14:28</u> நீ அவர்களோடு சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்கு செய்வேன் என்பதை என் ஜீவனை கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.*

27. பிசாசானவன் இயேசுவிற்கு விரோதமாக பேசும் எந்த வார்த்தையையும் இயேசு உபயோகிக்கவில்லை.

*<u>யோவான் 14:30</u> இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.*

சரியான வார்த்தை கர்த்தர் கிரியை செய்ய ஏதுவாக இருக்கிறது. தவறான வார்த்தைகள் பிசாசு வேலை செய்ய ஏதுவாக இருக்கிறது.

*எபேசியர் 4:27* பிசாசிற்கு இடம் கொடாதிருங்கள்

எபேசியர் 4:27 –ல் உள்ள “இடம்” என்பது கைப்பிடி அல்லது கால் மிதியை குறிக்கிறது.

28. கர்த்தர் உங்களுக்காக செய்ய வேண்டிய கரியங்களை நீங்கள் தேவனிடத்தில் கேட்க வேண்டும்.

உன்னுடைய தேவைகளை தேவன் அறிந்து வைத்திருக்கிறார்: ஆனாலும், நீங்கள் கேட்க வேண்டும்.

> *மத்தேயு 6:8* அவர்களைப் போல் நீங்கள் செய்யாதிருங்கள்: உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

> *யாக்கோபு 4:2* நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை: நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்: நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்கு சித்திக்கிறதில்லை.

> *யோவான் 15:7* நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.

சரியானதை தேர்வு செய்யும் சுதந்திரமான ஒழுக்கமுடைய முகவர் நீங்கள். உன் விருப்பத்தின் படி தேவனிடத்தில் கேட்பது உன் விருப்பமாகும்.

29. தேவனுடைய வார்த்தையை பேசி இல்லாதவைகளை இருப்பவைகளாக்குங்கள்.

தேவனுடைய வார்த்தை நம்புவதின் மூலமும் விசுவாசிப்பதின் மூலமும் இல்லாதவைகளை கொண்டு வருவதற்கான வழியாகும்.

> *ரோமர் 4:17* அனேக ஜாதிகளுக்கும் உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல்

*அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.*

## Amplified Bible

*ரோமர் 4:17 அனேக ஜாதிகளுக்கும் உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் (நம்முடைய தகப்பனாக ஏற்படுத்தப்பட்டார்) அவன் விசுவாசித்த தேவனுக்கு முன்பாக, மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை (முன்குறித்து வாக்கு பன்னினவைகள்) இருக்கிறவைகளைப்போல் (ஏற்கனவே) அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானார்.*

## New American Standard

*ரோமர் 4:17 ("அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்ப்படுத்தினேன்" என்று எழுதியிருக்கிறபடி) அவன் விசுவாசித்த தேவனுக்கு முன்பாக, மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கற தேவன்.*

30. சரியான வார்த்தைகளை பேசுவதினால் மகிழ்ச்சி உண்டாகும்.

*நீதிமொழிகள் 15:23 மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்: ஏற்றக்காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!*

## Amplified Bible

*நீதிமொழிகள் 15:23 மனுஷனுக்குத் தன் சரியான வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும், ஏற்றக்காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!.*

31. தன்னம்பிக்கையுடைய முட்டாளின் வாய் அவனுடைய அழிவு.

*நீதிமொழிகள் 18:6 மூடனுடைய உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வர வழைக்கும்.*

*7 மூடனுடைய வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக் கண்ணி*

## Amplified Bible

*நீதிமொழிகள் 18:6*

*மூடனுடைய (சுய நம்பிக்கை) உதடுகள் விவாதத்தில் நுழையும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும்.*

*7 மூடனுடைய (சுய நம்பிக்கை) உதடுகள் அவனுக்கு கேடு, அவனுடைய உதடுகள் அவனுக்கு கண்ணி.*

32. சரியான வார்த்தைகளை கேட்பது இரட்சிப்பின் வழியை காட்டும்.

*அப்போஸ்தலர் 11:13 அவனோ தன் வீட்டிலே ஒரு தேவ தூதன் நிற்கிறதைக் கண்டதாகவும், யோப்பா பட்டணத்திலிருக்கற பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனுஷரை அவ்விடத்திற்கு அனுப்பு.*

*14 நீயும் உன் வீட்டாரானைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்.*

*15 நான் பேசத்தோடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள் மேலும் இறங்கினார்.*

33. உன் வாயிலிருந்து எந்த தீய அல்லது கெட்ட வார்த்தைகளும் புறப்பட அனுமதிக்காதே.

## Amplified Bible

*எபேசியர் 4:29 தீமையான அல்லது தீட்டான மொழிகள், அல்லது தீமையான வார்த்தை மற்றும் முழுமையல்லாத அல்லது உபயோகமற்ற பேச்சு (ஒருபோதும்) உன் வாயிலிருந்து புறப்படவேண்டாம், கேட்கிறவர்களுக்கு பக்தி விருத்தி உண்டாகும்*

*வார்த்தைகளையும், ஏற்றக்காலத்திலும் தேவையுள்ள இடத்தில் பொருந்தும், அதை கேட்கிறவர்களுக்கு ஆசீர்வாதமும் தேவனுடைய கிருபையையும் ( தேவனுடைய அன்பு) இருப்பதாக.*

34. உன் வாயில் இருந்து எந்த விதமான இழிவான வேடிக்கையான அல்லது பாசாங்குத்தனமான பேச்சையும் அனுமதிக்காதே.

*<u>எபேசியர் 5:4</u> அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்: ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.*

***<u>Amplified Bible</u>***

*<u>எபேசியர் 5:4</u> அப்படியே வம்பும் (நயமற்ற, இழிவான) புத்தியீனமான பேச்சும் (மதியீனம் மற்றும் கெடுதல் உடைய) பரியாசமும் தகாதவைகள்: (தேவனுக்கு) ஸ்தோத்திரம் செய்தலே தகும்.*

35. உங்கள் பேச்சு எப்பொழுதும் கருணையுள்ளதாகவும், இனிமையானதாகவும் இருக்கட்டும். அப்பொழுது மற்றவர்களுடைய கேள்விகளுக்கு நீங்கள் அதற்கேற்ப பதில் சொல்ல முடியும்.

*<u>கொலோசேயர் 4:6</u> அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும் படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக.*

***<u>Amplified Bible</u>***

*<u>கொலோசேயர் 4:6</u> அவனவனுக் இன்னின்னபடி உத்தரவு (உங்களை கேள்வி கேட்கிறவர்களிடத்தில்) சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும் படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை (மகிழ்வளிக்கிற மற்றும் தன் வசப்படுத்துகிற) பொருந்தினதாயும் (இருந்தது போல்) உப்பால் (நீங்கள் எப்பொழுதும் தொலைந்து போகாதபடிக்கு) சாரமேறினதாயும் இருப்பதாக.*

36. தேவனுடைய வார்த்தையை சத்துருவின் வார்த்தையோடு கலக்காதே.

| ஓன்று கலந்த –மரபியல் கலப்பு |
|---|

*<u>லேவியாராகமம்</u> கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக: உன் மிருக ஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக: உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளை கலந்து விதையாக: சணல்நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக.*

கலப்பட விதைகளை விதைக்கவேண்டாம். கர்த்தர் சொல்வதை மட்டும் சொல். கர்த்தருடைய வார்த்தையோடும் சந்தேகத்தையும் பயத்தையும் கலக்காதீர்கள்.

37. உங்கள் நாவு உங்கள் வாழ்கையை வழிநடத்துகிறது.

*<u>யாக்கோபு 3:2</u> நாமெல்லாரும் அனேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.*

*3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்டியும் படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்*

*4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிப்பட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.*

*5 அப்படியே, நாவானதும் சிறிய அவயவயமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பும் எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது!*

*6 நாவும் நெருப்புதான், அது அநீதி நிறைந்த உலகம்: நம்முடை அவயவங்கிளில் நாவானது முழுச்சரீரத்தை்யும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படகிறதாயும் இருக்கிறது.*

*7 சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு.*

*8 நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது: அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.*

*9 அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம் தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.*

*10 துத்தித்தலும் சபித்தலும் ஒலே வாயிலிந்து புறப்படுகிறது: என் சகோதரரே இப்படியிருக்கலாகாது.*

*11 ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?*

*12 என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப் பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது.*

உங்கள் வார்த்தைகள் உங்களை ஆதிக்கம் செலுத்துகின்றன. தேவன் உங்களுக்காக கிரியை செய்ய அல்லது பிசாசு உங்களுக்கு எதிராக கிரியை செய்வதற்கு வார்த்தை வல்லமை அளிக்கிறது. நீங்கள் பேசும் வார்த்தைகள், விசுவாசம் அல்லது பயத்தை வரவழைக்கும். உங்கள் உதடுகள் பரலோகத்திலிருந்து கர்த்தரின் விடுதலையை இந்த பூமியில் உங்கள் தேவைக்காக கொண்டு வரக்கூடிய வழியாக இருக்கிறது. நீங்கள் யாரென்றும் கிறிஸ்துவிற்குள் உங்களுடையது எது என்றும் அறிக்கை செய்யும் போது வெற்றி கிடைக்கும். அறிக்கை செய்யாமல் எதையும் உரிமையாக்கிக் கொள்ள முடியாது.

<u>அறிக்கை</u>

நான் பேசும் ஒவ்வொரு வார்த்தையின் மகத்துவத்தை நான் அறிவேன். என் வார்த்தைகளை நான் ஞானமாக கர்த்தருடைய வார்த்தையோடு ஒத்துப்போகும்படி உபயோகிப்பேன். என் வார்த்தை கர்த்தரின் வார்த்தையோடு கூட ஒத்துப் போகிறது. ஆகையால் சத்துருவிற்கு இடம் இல்லை.

## வார்த்தையின் ஜீவனும் வல்லமையும்

### பாடம் 2

### <u>வார்த்தைகள் விதைகள் ஆகும்</u>

வார்த்தைகளை பேசுவது விதைகளை விதைப்பது போலாகும். நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் விதையாகும். அது நல்லதோ கெட்டதோ சரியான வார்த்தைகளை பேச தெரிந்துக்கொள்வதன் மூலம் நீங்கள் எவ்விதமான அறுவடையை பெற்றிக்கொள்வீர்கள் என்பதை அறிந்துக்கொள்வீர்கள்.

1.எல்லாம் விதையில் ஆரம்பமாகிறது.

*ஆதியாகமம் 8:22 பூமியில் உள்ள விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடை காலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.*

| |
|---|
| விதை |
| நிலைநாட்டுதல் |
| உள்வைத்தல் |
| நிலையாய் வைத்தல் |

2.நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதை அறுவடை செய்கிறீர்கள்.

*<u>கலாத்தியர் 6:7</u> மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம பண்ணவொட்டார்: மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.*

*8 தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.*

*9 நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம்.*

***<u>Amplified Bible</u>***

*<u>கலாத்தியர் 6:7</u> நீங்கள் வஞ்சிக்கப்பட்டு மற்றும் மோசம்போக்கப்பட்டு அல்லது தவறாக வழி நடத்தப்படாதிருங்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார் (பரியாசம், ஏளனம் அல்லது வெறும் பாசாங்கோடு மற்றும் நெறியோடு, அல்லது வைக்கப்பட்டுள்ள அவருடைய பிரமாணத்தைக் கொண்டு கிண்டல் செய்குதல்). (தேவனை வஞ்சிக்க நினைக்கிறவன் அவனை அறியாமல் தன்னைத்தானே வஞ்சித்துக் கொள்கிறான்). மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.*

*8 தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் (தாழ்ந்த சுபாவம், சிற்றின்பம்) மாம்சத்தினால் அழிவை அறுப்பான், ஆனால் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.*

*9 நன்மை செய்வதில் மனந்தளராமல் சோர்ந்து போகாமல் உண்மையாய் செய்வதில் தளர்வாகாமல் சரியானதை, சரியான நேரத்தில் நம்முடைய தைரியத்தையும் இழக்காமல் செய்யும் போது ஏற்றக்காலத்தில் அறுப்போம்.*

மாம்சத்திற்கென்று விதைத்தால் அது சீர்கேட்டை கொண்டுவரும். ஆவிக்கு விதைத்தால் ஜீவனையும் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் கொண்டு வரும்.

நீங்கள் ஒரு காரியத்தை விதைத்து, வேறு ஏதாவது ஒன்றை அறுவடை செய்யலாம் என்று நினைக்காதீர்கள். இயற்கை சட்டங்கள் மற்றும் ஆவிக்குரிய சட்டங்கள் மிகவும் ஒத்திருக்கிறது. கர்த்தர் உங்களுக்குத் தேவை என்று நினைப்பவைகளை மாத்திரம் கொடுப்பதில்லை. உங்கள் சொந்த முடிவுகளையும் விருப்பங்களையும் தேர்ந்தெடுக்கும் உரிமையும் உடைய சுதந்திரமான மனிதர் நீங்கள். தேவனுடைய ஆவிக்குரிய பிரமாணங்கள் நீங்கள் விதைதற்கு ஏற்ப விதைக்கவும் அறுக்கவும் அனுமதிக்கிறது. தேவனுடைய வார்த்தை வல்லமையுடையது. வார்த்தைகள் அறுவடை தரக்கூடிய தன்மையுள்ள விதைகள்.

3.எந்த விதையை விதைத்தாலும் அது அதே ஜாதியான விதையை பிறப்பிக்கும். ஆதியாகமத்தின் பிரமாணம் இது. விதை முழுமையானது.

*<u>ஆதியாகமம் 1:11</u> அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையை பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின் படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்ககடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

ஒவ்வொரு விதையும் தன் தன் ஜாதியின் படி முளைப்பிக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்காக பயிரிடப்பட்டு வளர்க்கப்பட்டால் ஒரு விதை தன் ஜாதியின் படி ஒரு அறுவடையை கொடுக்க வல்லமையுள்ளதாக இருக்கிறது. எப்படி பட்ட அறுவடை வரும் என்பதை விதை தான் நிர்ணயம் செய்யும். நிலம் அல்ல, வார்த்தை விதை என்பதை மறந்துவிடாதீர்கள். ஒவ்வொரு விதையும், நல்லதோ அல்லது கெட்டதோ தன்னை போல அதிக அளவில் விதைகளை பிறப்பிக்கும் அளவிற்கு வல்லமை உள்ளது.

4.உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற ஜெபம் (பேசுங்கள்) செய்யுங்கள். உங்கள் விருப்பத்தின்படி ஜெபத்தினால் விதையை விதையுங்கள்.

*<u>மத்தேயு 17:20</u> அதற்கு இயேசு : உங்கள் அவிசுவாசத்தினாலே தான்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போகும்: உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

*<u>மாற்கு 11:24</u> ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

***Weymouth Translation***

*மாற்கு 11:24 அதனலாலேயே உங்களுக்கு சொல்லுகிறேன், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என்று நீங்கள் விசுவாசித்தால் - அது உங்களுடையதாகும்.*

நீங்கள் ஜெபிக்கும் போது நீங்கள் பேசுகிறீர்கள். நீங்கள் விரும்புகிறவைகளை உங்களுக்கு கொடுக்கும் தேவனுடைய வாக்குத்தங்களை வைத்து ஜெபியுங்கள். பிரச்சனைகளை ஜெபிக்காதீர்கள்! தேவனுடைய வாக்குத்தங்களில் கொடுக்கப்பட்ட பதில்களை ஜெபியுங்கள்!!

5. தேவனுடைய வார்த்தை அழிவில்லாத வித்து. அது ஜீவனுடையதும் நிலைத்திருக்கிறதுமாயிருக்கிறது.

*1பேதுரு2:3 நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்.*

6. வேதாகம் விசுவாசம் சொல்வதினால் விதையை (தேவனுடைய வார்த்தையை) விதைக்க முடியும்.

*லூக்கா 17:5 அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும் என்றார்கள்.*

*6 அதற்கு கர்த்தர்: கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்த காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்கு கீழ்ப்படியும்.*

*எபேசியர் 6:17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

எபேசியர் 6: 17 சொல்லப்பட்ட "வார்த்தை" என்பதின் பொருள் சொல்லப்பட்ட வார்த்தை என்பதாகும்.

தேவனுடைய வார்த்தை உனக்கு என்ன வாக்கு பண்ணுகிறதோ அதை பேசி விசுவாசி. உன் பிரச்சனைகளுக்கு தேவன் என்ன சொல்கிறாரோ அதை சொல். அவர் சொல்வதையே நீ சொல்லும் போதும் சந்தேகமின்றி விசுவாசிக்கும் போதும் அவர் சொல்லியவைகளை செய்து முடிப்பார்.

7. தேவன் தம்முடைய வார்த்தைகளை விதைகளாக விதைக்கிறார்.

விதைக்கிறவனுடைய உவமையில், நீங்களே விதைக்கிறவர்கள். தேவனுடைய வார்த்தையே விதை.

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

*15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துக் போடுகிறான்: இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.*

*16. அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும்,*

*17 தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள: இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்ட்டவர்கள்.*

*18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப் போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.*

*19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.*

20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள்: இவர்களோ நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.

மாற்கு 4:24 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்ஈ எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் அளக்கப்படும்: கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.

25 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்: இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து:

27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.

28 எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாக தானாய்க் கொடுக்கும்.

29 பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான் என்றார்.

30 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதை திருஷ்டாந்தப்படுத்துவோம்?

31 அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது: அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறியதாயிருக்கறது.

32 விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும் என்றார்.

## Amplified Bible

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

*15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் (இருதயங்களில்) விதைக்கப்பட்ட வசனத்தை (கட்டாயப்படுத்தி) எடுத்துக் போடுகிறான்: இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.*

*16 அப்படியே வசனத்தைக் கேட்டவுடன் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்வதும் பெற்றுக்கொள்வதும் ,*

*17 தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் கண்டவுடனே இடறலடைகிறார்கள் ( மனம்வருந்தி, எரிச்சலடைந்து, ஆத்திரடைகிறார்கள்). இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.*

*18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், சிற்றின்பமும் தவறான இச்சைகளின் சந்தோஷமும் ஐசுவரியத்தின் மயக்கமும் மற்றவைகளைப் பற்றி உண்டாயிருக்கிற இச்சைகளும் பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப் போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.*

*19 இவர்களோ முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.*

*20 வசனத்தை கேட்டு ஏற்றுக்கொண்டு அதை வரவேற்று ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் (நன்கு பதப்படுத்தப்பட்ட) விதைக்கப்பட்டவர்கள் என்றார்.*

## Amplified Bible

*மாற்கு 4:24 பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள்: எந்த அளவினால் (என்னங்களும் அறிவும்) அளக்கிறீர்களோ (நீங்கள் கேட்ட சத்தியத்திற்கு), அந்த அளவினால் (நேர்மையும் சத்தியமும்) உங்களுக்கு அளக்கப்படும் - (மேலும்) கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும்.*

*25 உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்: இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் (கட்டாயப்படுத்தப்பட்டு) என்றார்.*

*26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து:*

*27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்கு தெரியாதவிதமாய், விதை முறைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.*

*28 எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிலிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் (கிரியை) கொடுக்கும்.*

*29 பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தவுடனே, அறுக்கிறதற்கு ஆட்களை (அறுக்கிறவர்கள்) அனுப்புகிறான் என்றார்.*

*30 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவதையினாலே அதை திருஷ்டாந்தப்படுத்துவோம்?*

*31 அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது: அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறியதாயிருக்கிறது:*

*32 விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும் என்றார்.*

நீங்கள் தேவனுடைய வார்த்தையை கேட்டு புரிந்துக்கொண்டு அதை நடைமுறைப்படுத்தும் போது, தேவனுடைய வார்த்தையை புரிந்துக்கொள்ளும் அறிவை தேவன் உங்களுக்கு கொடுக்கிறார். தேவனுடைய வார்த்தையை அறிந்தும் நடைமுறைப்படுத்த வில்லை என்றால், நீங்கள் புரிந்துக்கொண்டிருக்கிறவைகளையும் இழப்பாய்.

8. அறுவடைக்கு முன்பாகவே விட்டுவிடாதீர்கள்.

*மாற்கு 11:22 இயேசு அவர்களை நோக்கி : தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.*

*23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

நீங்கள் உங்களுடையதாக்கி கொண்ட தேவனுடைய வாக்குத்தங்களை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள்.

*எபிரேயர் 4:14 வானங்களின் வழியாய் பரலோகத்திற்கு போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால், நாம் பன்னின அறிக்கையை உறுதியாய் பற்றிக் கொண்டிருக்கடவோம்.*

*கலாத்தியர் 6:9 நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றக்காலத்தில் அறுப்போம்.*

நீங்கள் விரும்புவது நிறைவேறும் மட்டும் நீங்கள் விசுவாசத்தோடு பேசிக்கொண்டே இருக்க வேண்டும். பேசப்படாத எண்ணங்கள் பிறக்காமலேயே மரித்துவிடும்.

9. நீங்கள் அறுவடை செய்ய விரும்பும் விதைகளை விதைக்க (பேச) வேண்டும். உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற அறுவடையை செய்வதற்கு குறிப்பிட்ட ஜாதியான விதையை விதையுங்கள்.

*லூக்கா 6:38 கொடுங்கள் , அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும் என்றார்.*

*நீதிமொழிகள் 18:24 சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்: சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனுமுண்டு.*

*நீதிமொழிகள் 15:1 மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்: கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.*

*மத்தேயு 7:1 நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்.*

*2. ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற திறப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்: நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின் படியே உங்களுக்கும் அளக்கப்படும்.*

10. நீங்கள் அறுவடை செய்ய விரும்பாத விதையை விதைக்காதீர்கள்.

தேவனுடைய வார்த்தையை விதைக்கும் நிலம் உங்கள் இருதயமாகும்.

*லூக்கா 17:2 தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்திரமாக: தேவனுடைய ராஜயம் பிரத்தியட்சமாய் வராது.*

*21 இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது: இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.*

புதிதாய் பிறந்த ஆவி (இதயம்) நல்ல நிலமாகும். தேவனுடைய வார்த்தையே நல்ல விதை. தேவனுடைய வார்த்தையை உன் இருதயத்தில் விசுவாசிப்பது (விதைப்பது) நல்ல அறுவடையை கொடுக்கும். சந்தேகம், பயம், வெறுப்பு, மன்னிக்காத தன்மை மற்றும் இது போன்ற கற்கள் மற்றும் முட்களை உங்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுங்கள். உங்கள் இருதயத்தில் கர்த்தருடைய வார்த்தையை விதைப்பதும், நீர்ப்பாய்ச்சுவதும், வளர்ப்பதும் கர்த்தருடைய வேலை அல்ல, அது உங்கள் பொறுப்பு!

11. ஒரு மனிதனுடைய வாழ்கையில் அறுவடை என்பது அவன் விதைப்பதிலேயே முழுவதும் சார்ந்திருக்கிறது.

*1 கொரிந்தியர் 3:6* *நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார்.*

*7.அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்.*

*8.மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்: அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.*

*9.நாங்கள் தேவனுக்கு உடன்வேலையாட்களாயிருக்கிறோம்: நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.*

| பண்ணை |
|---|
| சாகுபடி செய்யப்படும் ஒரு நிலம் |
| கர்த்தர் கையில் இருக்கும் ஒரு உழவு நிலம் |
| கர்த்தரின் தோட்டமும் திராட்சை தோட்டமும் |

நீங்கள் விரும்பும் அறுடையை பெற விதை விதைக்கும் பொறுப்பு உன்னுடையதாகும். தேவன் அதை விளைய செய்வார்.

12. தரிசு நிலத்தை பண்படுத்தவேண்டும்.

*எரேமியா 4:3 யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தை பண்படுத்துங்கள்.*

| தரிசு நிலம் |
|---|
| விளைச்சல் இல்லாத நிலம் |
| பருவத்திற்கு பன்படுத்தாத நிலம் |

தேவனுடைய வார்த்தையாகிய விதைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி, அறுவதை செய்ய முடியாதபடி இருக்கும் உங்கள் இருதயத்தின் கடினத்தை மாற்றுவது உன் கடமையாகும்.

தரிசு நிலமானது:

1. தேவ வார்த்தைளை குறித்த அறியாமை
2. காயப்பட்டதை மறவாமல் பிடித்துக்கொள்வது
3. கீழ்படியாமை
4. கர்த்தரை உங்கள் முழு மனதோடு விசுவாசியாமல் இருப்பது
5. மன்னிக்காத தன்மை
6. சந்தேகம் மற்றும் பயம்

தரிசு நிலத்தை ஜெபம், துதி, தேவனுடைய வார்த்தையின் படி நடந்து, பிரச்சனைகளை பேசுவதை விட தேவனுடைய வார்த்தையை பேசி, தரிசு நிலத்தை பண்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

13. மாம்சத்திற்குரிய விஷயங்களைப் பார்த்து நீங்கள் ஆவிக்குரிய விஷயங்களை புரிந்துக்கொள்ளலாம்.

*ரோமர் 1:20 எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பகைவள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்: ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.*

மாம்சத்திற்குரிய பிரமாணங்களும் ஆவிக்குரிய பிரமாணங்களும் ஒன்று போல் இருக்கின்றன. ஆவிக்குரிய விதையையும் மாம்சத்திற்குரிய விதையையும் விதைப்பது ஒரே விதத்தில் கிரியை செய்கின்றது.

14. விதைப்பதற்கான ஒரு காலம் உண்டு.

*பிரசங்கி 3:1 ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு: வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.*

*2 பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு.*

சில விதைகள் மற்றவைகளை விட சீக்கிரத்தில் அறுவடை செய்யப்படுகிறது. சரியான நேரத்தில் விதையை விதைப்பது அறுவடையை தீர்மானிக்கும்.

*நீதிமொழிகள் 15:23 மனுஷனுக்குத் தன் வாய் மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்: ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!*

சரியான நேரத்தில் சொல்லப்பட்ட நல் வார்த்தை நல்ல அறுவடையை கொடுக்கும்.

15. தேவனுடைய வார்த்தை விதையாகும்.

தேவன் அவர் சொன்ன வார்த்தையை தவிர ஒன்றும் செய்வதில்லை.

லூக்கா 8:11 அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்.

*சங்கீதம் 107:20 அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார்.*

*மத்தேயு 8:8 நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரம் அல்ல: ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காலன் சொஸ்தமாவான்.*

*யோவான் 8:32 சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.*

தேவனுடைய வார்த்தையாகிய விதையை விதைக்க அது:

அறிந்திருக்கப்பட வேண்டும்

பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்

விசுவாசிக்கப்பட வேண்டும்

உறுதியோடு விசுவாசித்து விதைக்கப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சின தேவனுடைய வார்த்தை நல்ல அறுவடையை கொடுக்கிறது. நீங்கள் விரும்பும் அறுவடைக்கு விதையை விதைக்க வேண்டும். இரட்சிப்பு விதை இரட்சிப்பை கொண்டு வருகிறது. குணப்படுத்தும் விதை குணப்படுத்துகிறது. ஞான விதை ஞானத்தை கொடுக்கிறது.

16. வியாதியஸ்தனை சுகமாக்குகிற விசுவாச ஜெபத்தை தொடர்ந்து (முன்பதாக அல்ல) விசுவாசத்தின் அடித்தளமாயிருக்கிற விதை (தேவனுடைய வார்த்தை) நாட்டப்பட வேண்டும்.

*1 பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கு நிற்கிறதும் ஜீவனுள்ளமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிபிக்கப் பட்டிருக்கிறீர்கள்.*

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

லூக்கா 8:11 அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்.

தேவனுடைய வார்த்தை தேவனை நம்புவதற்கு அனுமதிக்கிறது. தேவனுடைய வார்த்தை நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு, முளைத்து, வளர்ந்து, கனி தரும் நோக்கத்துடனே தேவன் விதைகளை (வார்த்தை) உருவாக்கினார். நாட்டப்படாத விதைகள் பலனற்றதாகும். தேவனுடைய சகல மகத்தான கிரியைகள் எல்லாம் விதையில் இருக்கிறது.

விதைகள் நல்ல நிலத்தில் இல்லாதவரை தேவனுடைய கிரியைகள் தடுக்கப்படுகின்றன. கர்த்தருடைய வார்த்தையாகிய அழியாத விதை முளைத்து வளரும் சாத்தியத்தை உங்கள் வாழ்க்கையை செலவழிக்க வேண்டும். இது தேவனுடைய வடிவமைப்பாகும். விதையின் இடத்தை எதுவும் எடுக்க முடியாது, ஜெபம் கூட.

17. தேவனுடைய வாக்குத்தங்களின் நிறைவேறுதலே அவைகளின் நோக்கமாகும்.

*2 கொரிந்தியர் 1:20 எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்று இருக்கிறதே.*

*2 பேதுரு 1:4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

வார்த்தைகள் போல வாக்குத்தங்களும் மாற்ற முடியாதவை. அவைகள் எந்த நேரத்திலும் எந்த தோட்டத்திலும் தங்கள் அற்புதமான முடிவுகளை சாதிக்கின்றன. வாக்குத்தத்தங்களை உங்களுடையதாகிக் கொண்டு, விதைத்து ஜெபத்தில் வைத்து பண்படுத்த வேண்டும். தேவனுடைய வாக்குத்தங்களின் மேல் நிற்பது என்பது அவைகள் நிறைவேற விசுவாசத்தின் ஜெபத்தை ஜெபிப்பதாகும்.

18. விதையானது முளைத்து சரியாக வளரவேண்டுமானால் நிலமானது ஈரமாக இருப்பதற்கு தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

*சங்கீதம் 119:14 திரளான செல்வத்தில் களி கூறுவது போல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூறுகிறேன்.*

*15 உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்.*

*16 உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்: உமது வசனத்தை மறவேன்.*

*சங்கீதம் 119:24 உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது.*

*சங்கீதம் 119:44 நான் எப்பொழுதும் என்றைக்கும் உமது வேதத்தைக் காத்துக்கொள்வேன்.*

*45 நான் உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறபடியால், விசாலத்திலே நடப்பேன்.*

*46 நான் உம்முடைய சாட்சிகளைக்குறித்து, ராஜாக்களுக்கு முன்பாகவும் வெட்கப்படாமல் பேசுவேன்.*

*47 நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின் பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்.*

விதைக்கிறதை போல நீர்பாய்ச்சலும் முக்கியமானது! தேவனே விதையை விளையச்செய்கிறார். விதையானது விதைக்கப்பட்டு நீர்ப்பாய்ச்சப்படுகிறபோது தேவனுடைய நீதி தேவையான படியால் அவர் அதை விளையச் செய்கிறார். நாட்டப்பட்டதும் நீர்ப்பாய்ச்சப்பட்டதுமான விதை வளரும். விவசாயியை போல விதை அறுவடை காலத்திற்கு முன்னே விதைப்பது கடந்த காலத்தில் இருக்கவேண்டும். தேவன் வாக்கு பண்ணியிருக்கிறவைகளை பெற்றுக் கொள்கிற வழியும் இதுவே. அவருடைய வாக்குத்தங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அவைகளை செய்ய அது அவருடைய கடமை அல்ல. அவர் கொடுத்தவைகளை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்வது உன் கையில் இருக்கிறது!

19. தேவனுடைய வார்த்தையை தியானிக்கும்போது ஆவிக்குரிய ஆகாரத்தை அசைப்போட்டு அதின் சத்தை உன் இருதயத்திலும் வாழ்கையிலும் பெற்றுக் கொள்கிறது.

தியானம் செரீமான வல்லமையுடையதும் சத்தியத்தை ஆவிக்குரிய போஷாக்காகவும் மாற்றும்.

*சங்கீதம் 1:1 துன்மார்க்கருடைய் ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,*

*2 கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*3 அவன் நீர்க்கால்களின் ஓலமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்: அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.*

*யோசுவா1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துக்கொள்வாய்.*

20. அறுவடையின் காலத்தில் தளராதிருங்கள்.

*நீதிமொழிகள் 10:4 சோம்பற்கையால் வேலை செய்கிறவன் ஏழையாவான்: சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.*

*5 கோடைக்காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன்: அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.*

## ***Amplified Bible***

*நீதிமொழிகள் 10:5 கோடைக்காலத்தில் சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன்: அறுப்புக்காலத்தில் தூங்குகிறவனோ இலச்சையை உண்டாக்குகிற மகன்.*

விதைப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் வாய்ப்புகள் உங்கள் வழியே வரும்பொழுது அதை விடாமுயற்சியோடு பயன்படுத்திக்கொள்ளுங்கள். வாய்ப்புகள் தேவனிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதங்கள். அவைகள் கிடைக்கும் போது சிறப்பாக பயன்படுத்தவேண்டும்.

*லூக்கா 6:38 கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்: அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.*

*மல்கியா 3:10 என் ஆலயத்தில் ஆகாலம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்: அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமாற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்து பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*11 பூமியின் கனியை பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்: அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள நிலத்தின் பலனை அழிப்பதில்லை. வெளியிலுள்ள திராட்சக்கொடி*

*பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.*

*நீதிமொழிகள் 20:4 சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான், அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு அன்றுங்கிடையாது.*

21. இயேசு ஸ்திரீயின் வித்து.

*ஆதியாகமம் 3:15 உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்: அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.*

தேவன் தமக்கு ஒரு அறுவடையை கொடுக்கும்படியாகவும் தமக்கென்று ஒரு விசுவாசக் குடும்பத்தை தம்மோடு எப்பொழுது வாழும்படியாகவும் தம்முடைய குமாரனின் ஜீவனை விதைத்தார்.

22. செழிப்பு விதையை விதைக்கவேண்டும்.

*பிரசங்கி 11:6 காலையிலே உன் விதையை விதை: மாலையிலே உன் கையை நெகிழவிடாதே: அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்று நீ அறியாயே.*

<u>Good News Bible</u>

*பிரசங்கி 11:1 உன் செல்வத்தை மற்ற தேசங்களோடு வணிகம் செய்: அனேக நாட்களுக்கு பின்பு அதின் பலனை காண்பாய்.*

*2 உன் முதலீட்டை அனேக இடங்களில்-பல இடங்களில் கொடு: இந்த உலகத்தில் உனக்கு என்ன தீமை வரும் என்று நீ அறியாயே.*

*3 மரம் எந்த பகுதியில் விழுந்தாலும் , விழுந்த இடத்திலேயே மரம் இருக்கும். மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின் மேல் பொழியும்.*

*4 காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்: மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.*

*5 கர்ப்பவதியின் வயிற்றில் புது ஜீவன் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிக்கிறது போலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்.*

*6 காலையில் உன் விதையை விதை: மாலையில் உன் கையை நெகிழவிடாதே: அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே.*

23. விதையின் சிறிய அளவு அறுவடைக்கு இடையூறு இல்லை.

*மத்தேயு 13:41 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.*

*32 அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும் போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்த அடையத்தக்க மரமாகும் என்றார்.*

விதையின் அளவு விஷயமல்ல. விதையின் தரமே விஷயமாகும். விசுவாசத்தினாலே விதை விதைக்கப்படவேண்டும்.

24. விதைக்கப்பட்ட விதையை தேவன் பெருக செய்வார்.

*2 கொரிந்தியர் 9:10 விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்க செய்வார்.*

விசுவாசத்துடன் விதையை விதைப்பது உன் பொறுப்பு. தேவனே விளையச் செய்கிறவர்.

25. மறுபடியும் பிறந்தவர்கள் தேவனால் நாட்டப்பட்டவர்கள்.

*ஏசாயா 6:13 சியோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும்,*

*துயரத்துக்கு பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும் அவர் என்னை அனுப்பினார்: அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.*

26. சத்துருக்களை தோற்கடிக்க தேவன் தம்முடைய வார்த்தையை பயன்படுத்துகிறார்.

*மத்தேயு 4:4 அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

*எபேசியர் 6:17 இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

27. தேவனுடைய வார்த்தையை பேசு (விதை)

*மத்தேயு 8:8 நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல: ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.*

*ரோமர் 10:8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

28. கிறிஸ்துவிற்குள் நீங்கள் யார் என்பதை அறிக்கை செய்யும் போது உங்கள் விசுவாசம் பயனுள்ளதாக இருக்கும்.

*<u>பிலமோன் 1:6</u> உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோன்னியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.*

ஒவ்வொரு வார்த்தையும் விதையாகும். தேவனுடைய வார்த்தையாகிய விதையை உங்கள் இருதயங்களில் விதைத்து கிறிஸ்துவிற்குள் நீங்கள் யாரென்றும் உங்களுக்கு சொந்தமானவைகள் இன்னதென்றும் தொடர் அறிக்கை செய்து நீர்பாய்ச்சி காத்துக்கொள்ளுங்கள்.

| அறிக்கை |
|---|
| நான் விரும்பும் அறுவடைக்கு ஏற்ப கர்த்தருடைய வார்த்தைகளை பேசுவேன். நான் விரும்பாத அறுவடைக்காக வார்த்தைகளை பேசவோ விதைக்கவோ மாட்டேன் |

## தேவனுடைய வார்த்தைகளின் ஜீவனும் வல்லமையும்

### பாடம் 3

### அறிக்கை செய்வதின் முக்கியத்துவம்

வார்த்தைகள் முதலில் பேசப்படாமல் ஒன்றும் நடைபெறாது. இயேசு கிறிஸ்து தீர்க்க தரிசனங்களின் வார்த்தைகள் நிறைவேறுதலாக வருவதற்கு முன்பதாகவே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிகள் இயேசு கிறிஸ்துவின் வருகையை தீர்க்கதரிசனமாக பேசுவது அவசியமாயிற்று. தேவனுடைய வார்த்தையை பேசுவது, அறிக்கையிடுதல், தேவன் பூமியில் கிரியை செய்வதற்கு அது மிகவும் அவசியமாயிருக்கிறது. அறிக்கையிடுதல் சொந்தமாகுதலுக்கு முன் செல்கிறது!

1.அறிக்கை/அறிக்கையிடுதல் என்பதின் பொருள் என்ன?

தேவன் சொன்னவைகளை அப்படியே சொல்லுதல்
தேவன் தம்முடைய வார்த்தையில் சொன்னவைகளை உறுதிப்படுத்துல்
தேவனுடைய வார்த்தையை அறிவித்தல்
தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை சாட்சியாக வெளிப்படுத்துல்

2.மன்னிப்பை பெற்றுக்கொள்வதற்காக மட்டுமே எதிர்மறையான பாவ அறிக்கையை விசுவாசி செய்யவேண்டும்.

*1 யோவான் 1:9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுள்ளவருமாயிருக்கிறார்.*

இந்த பாவ அறிக்கை பாவிகள் இரட்சிக்கப்படுவதற்கு அல்ல. இந்த அறிக்கை தங்கள் குறியை (பாவம் செய்து) தவறவிட்டு இயேசுகிறிஸ்துவோடு மறுபடியும் ஐக்கியமாகுவதற்கு விரும்பும் கிறிஸ்தவர்களுக்காகும்.

3.தேவனுடைய வார்த்தை நிறைவேறும் வரை அதை அறிக்கையிட்டு உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள்.

*எபிரேயர் 10:23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கைய அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்: வாக்குத்தத்தம்பன்னினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.*

தேவனுடைய வார்த்தையோடு உடன்படிக்கை செய்து அது வெளிப்படும் வரை விசுவாசத்தோடு பேசுங்கள்.

*வெளி 12:11 மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

உங்கள் இருதயத்தில் நீங்கள் விசுவாசிக்கும் வரை பல முறை அவசியமாக தேவனுடைய வார்த்தையை சொல்லவேண்டும். அறிக்கையிடுதல் இல்லாமல் சொந்தமாக்குதல் இல்லை! சூழ்நிலைகளும் சூழலும் மாறும் போது தேவனுடைய வார்த்தையை அதிகமாக அறிக்கை செய்யவேண்டும்.

4.நீங்கள் எதை அறிக்கை செய்ய வேண்டும்?

1. தேவன் எதை உங்களுக்காக சிருஷ்டித்திருக்கிறார்.
2. வார்தையினாலும் ஆவியினாலும் தேவன் உனக்குள் செய்தவைகள்
3. கிறிஸ்துவிற்குள் பிதாவிற்கு நீங்கள் என்னவாய் இருக்கிறீர்கள்
4. தேவன் உங்கள் மூலமாய் என்ன செய்ய முடியும்
5. நீங்கள் தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்யும் போது அது உங்களுக்கு என்ன செய்யும்

5.கர்த்தருடைய வார்த்தை கிரியை செய்வதற்கான காரணங்கள்.

அறிக்கை செய்வது தேவனுடைய ராஜ்யத்தை உங்கள் இருதயத்தில் விதைக்கிறது.

*<u>மாற்கு 4:26</u> பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து:*

அறிக்கை விசுவாசத்தை வரவழைக்க காரணமாயிருக்கிறது.

*<u>ரோமர் 10:17</u> ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

பயம் நிறைந்த வார்த்தைகளை பேசி உங்கள் இருதயத்திலும் சிந்தையிலும் நேர்மாறான உருவத்தை சித்திரிக்கவேண்டாம்.

*<u>யோபு 3:25</u> நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது: நான் அஞ்சினது எனக்கு வந்தது.*

*<u>உபாகமம் 30:19</u> நான் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன்: ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும் படிக்கு, நீ ஜீவனை தெரிந்துக்கொண்டு*

*மத்தேயு 12:37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்: அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.*

***<u>Amblified Bible</u>***

*மத்தேயு 12:37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் மற்றும் குற்றப்படுத்தப்படுவாய், உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் மற்றும் தண்டிக்கப்படுவாய்.*

அறிக்கையிடுதல் தேவனுடைய வார்த்தைக்கு நேராய் உங்கள் மனதை புதிதாக்குகிறது.

*ரோமர் 12:2 நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திறகு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*

*கொலோசேயர் 3:10 தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்க் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.*

அறிக்கையிடுதல் பிரச்சனையில் கவனம் செலுத்துவதை காட்டிலும் பதிலில் கவனம் செலுத்த உதவுகிறது.

*நீதிமொழிகள் 4:20 என் மகனே, என் வார்த்தைகளை கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.*

*21. அவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக: அவைகளை உன் இருதயத்ததுக்குள்ளே காத்துக்கொள்.*

*22. அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.*

*ஏசாயா 43:26 நாம் ஒருவரோடொருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு: நீ நீதிமானாக விளங்கும் படி உன் காரியத்தைச் சொல்.*

அறிக்கையிடுதல் உங்கள் இருதயத்தை மாற்றுகிறது.

*மத்தேயு 12:34 விரியம் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.*

*நீதிமொழிகள் 4:20 என் மகனே, என் வார்த்தைகளை கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.*

*21. அவைகள் உன் கண்களை விட்டு பிரியாதிருப்பதாக: அவைகளை உன் இருதயத்ததுக்குள்ளே காத்துக்கொள்.*

*22. அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.*

*23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.*

*24 வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து.*

அறிக்கையிடுதல் விசுவாசத்தின் நியதியை இயக்குகிறது.

விசுவாசம் ஆவிக்குரிய பிரமாணம்.

*ரோமர் 3:27 அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியையின் பிரமாணத்தினாலேயா? அல்ல: விசுவாசப்பிரமாணத்தினாலேயே.*

*ரோமர் 8:1 ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.*

*2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*

அறிக்கையிடுதல் தேவதூதர்களை உனக்காக் கிரியை செய்ய வைக்கும்.

*சங்கீதம் 103:19 கர்த்தர் வானங்களில் தம் சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார்: அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது.*

*20 கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்.*

*எபிரேயர் 1:13 மேலும், நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வதைக்கும் நீ என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?*

*14 இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ் செய்யும் படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கறார்களல்லவா?*

6.விசுவாசம் எப்பொழுதும் நம்புவதையே பேசும்

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின்*

*ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

*மத்தேயு 12:34 விரியன் பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படி பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்.*

நீங்கள் பேசவில்லையென்றால் விசுவாசிக்கவில்லை. உங்கள் அறிக்கையை தாண்டி உங்கள் விசுவாசம் வளருவதில்லை. உங்கள் வாயின் வார்த்தைகளை விட உங்கள் விசுவாசம் மேலே எழும்புவதில்லை. உன்னை அறிக்கை செய்யும் வரை உங்களால் ஜெயிக்க முடியாது. உங்கள் அறிக்கையின் அடிச்சுவட்டில் உங்கள் விசுவாசம் தொடர்கிறது. அறிக்கையிடுதல் சரக்குகளை இழுக்கும் விசுவாசத்தின் சாலையை கட்டும். தேவனுடைய வார்த்தையை பேசி நீங்களே உங்கள் விசுவாசத்தை கட்டுகிறவராகுங்கள்.

தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயத்தில் விசுவாசித்து உங்கள் வாயில் பேசும் வரை அவைகள் செயலற்றதாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தை அழியாத வித்து: ஆனால், உன் வாழ்க்கையில் அதின் வல்லமையை கிரியை செய்வதற்கு நீ அவைகளை பேசி விசுவாசிக்கவேண்டும்.

7.கர்த்தருடைய வார்த்தையை பேசி விதையுங்கள்.

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

விதைக்கப்பட்ட விதையின் அறுவடையே அறுவடையில் வெளிப்படும். தேவனுடைய வார்த்தையை குறித்து நீங்கள் பேசுவதின் அடிப்படையிலேயே தேவன் உங்களோடு கிரியை செய்கிறார். தேவனுடைய வார்த்தையை பேசுவதின் மூலம் அதை விதைத்து நீர்ப்பாய்ச்சுங்கள். அதை வைத்து என்ன செய்கிறாய் என்பது உன் விருப்பம். அதை விதைப்பதும் உன் விருப்பம் ஆகும்.

*லூக்கா 17:5 அப்பொழுது அப்பேஸ்தலர் கர்த்தரை நோக்கி: எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்றார்கள்.*

*6 அதற்குக் கர்த்தர்: கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி :*

*நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்படியும்.*

நீங்கள் எவ்வளவு அதிகமாக அல்லது கொஞ்சமாக அவருடைய வார்த்தையை விதைக்கிறீர்களோ அதற்கேற்ப அறுவடை இருக்கும்.

8. மறுபடியும் பிறந்த ஆவி வார்த்தை என்னும் விதையை விதைக்க நல்ல நிலமாக இருக்கிறது.

*லூக்கா 17:21 இதோ, இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படகிறதற்கும் ஏதுவிராது: இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது என்றார்.*

*மாற்கு 4:26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து,*

*27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.*

*28 எப்படியென்றால், நிலமானது முன்பு முறையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய் கொடுக்கும்.*

பலனை பெறுவதற்கு விசுவாசம் விதையைப்போல் விதைக்கப்பட வேண்டும். வார்த்தையை பேசுங்கள், எதை பேசுகிறீர்களோ அதை விசுவாசிப்பது போல் நடவுங்கள். நீங்கள் விரும்பும் அறுவடையைப் பெற நல்ல நிலமாகிய உங்கள் இருதயத்தில் விதையுங்கள். நிலம் (உங்கள் இதயம்) முதலாவது முளை, பின்பு கதிர், பின்பு தானியத்தைக் கொடுக்கும். நீங்கள் பேசின உங்கள் விசுவாசத்தின் வார்த்தைகளும் உங்கள் கிரியைகளும் எப்பொழுதும் ஏற்றவாறு இருக்கவேண்டும்: எப்படியாயினும், அறுவடைக் காலம் வரை நீங்கள் முழுமையான நடவடிக்கை எடுக்க கூடாது. கதிர்கள் தானியத்தைக் கொடுக்கும் முன்பாக அறுவடைக்கு கத்தியை வைக்கவேண்டாம். முழுமையான பலனைப் பெற்றுக்கொள்வதற்கு கதிர்கள் முழுமையாக வளர்ந்திருக்க வேண்டியது முக்கியமாகும்.

அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் இயேசுவின் சீஷர்களும் அவரை பின்பற்றினவர்களும் வெளியே சென்று பிரசிங்கிப்பதற்கு பரிசுத்த

ஆவியின் வல்லமையால் நிரப்பபடும் வரை காத்திருந்தார்கள். இயேசு சொன்னதை செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் பெலன் கொடுக்கும் வரை முன்கூட்டியே போகாதது மிக முக்கியமாகும்.

9. நல்லதானாலும் கெட்டதானாலும் உங்கள் இதயம் நீங்கள் பேசுவதை நம்பி பெலனை தருவதற்கு கிரியை செய்ய ஆரம்பிக்கிறது.

*நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.*

*யாக்கோபு 1:26 உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்.*

உங்கள் இருதயம் நல்ல நிலம், நீங்கள் சொல்வதை நீங்கள் விரும்புகிறீர்கள் என்று அது நினைக்கும். தாவரங்களை வேகமாக வளர்ப்பதுபோல் களைகளையும் வேகமாக வளர்க்கும். பேசுவதினிமித்தம் எப்படிப்பட்ட விதை என்பதை நிர்ணயம் செய்ய வேண்டியது நீங்கள். உங்கள் வாயில் அறிக்கை செய்வது உங்கள் இருதயங்களில் கிரியை செய்கிறது. உங்கள் அறிக்கை உங்கள் உள்ளான மனுஷனை ஆளுகை செய்கிறது! உங்கள் வார்த்தைகளின் பாதிப்பை உங்கள் இருதயத்திலும் உங்கள் சத்துருக்களின் மேலும் நடக்கிறதை நீங்கள் உணருவது அவசியமாகும்.

10. நீங்கள் பேசும் எல்லா வார்த்தைகளிலும் உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்.

நீங்கள் விசுவாசிக்காதவைகளை சொல்லாதிருங்கள்! நீங்கள் விசுவாசிக்காதவைகளை சொன்னீர்களானால், உங்கள் வார்த்தைகளினாலே விசுவாசத்தை வெளிப்படுத்தாமல் இருக்க பழகிக்கொள்வீர்கள். விசுவாசம் நிரம்பிய வார்த்தைகளை பேச பழகிக்கொள்ளுங்கள். நீங்கள் விசுவாசிப்பது நடக்கும் என்பதை விசுவாசிக்க பழகுங்கள்.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி,*

*தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

பூமியிலே உன் தேவைகளை பரலோகத்திலிருந்து தேவன் விடுவிக்க உன் உதடுகளே போக்குவரத்தின் வழியாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையோடு உடன்படிக்கையாயிருக்கிற வார்த்தைகளை மட்டுமே பேச உன் உதடுகளை காத்துக்கொள்.

11. விசுவாசம் கிரியை செய்வதற்கு சுத்த மனசாட்சி உடையவர்களாயிருக்க வேண்டும்.

*1 தீமோத்தேயு 3:9 விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.*

*1 யோவான் 3:20 நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும்அறிந்திருக்கிறார்.*

12. தேவனுடைய வார்த்தை வெறுமையாய் திரும்புவதில்லை.

*ஏசாயா 55:11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்தில் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

*எரேமியா 1:12 அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே: என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.*

தேவனுடைய எந்த வார்த்தையும் வல்லமை இல்லாதது அல்ல. விசுவாசியாதபோது பேசப்படாதபோது மட்டுமே வல்லமையற்றதாகிறது.

13. சரியான அறிக்கை தேவனுடைய வார்த்தை செய்வதைப் போல் செய்வது பேசுவதிலும் (அழைப்பு) அதோடு ஒப்புக்கொள்ளுதலிலும் இருக்கிறது.

*ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு என்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான்*

*விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனான்.*

***Wuest Translation***

*ரோமர் 4:17 … இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

***New American Standard***

*ரோமர் 4:17 (அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

***Amplified Bible***

*அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, (நம்முடைய பிதாவை ஏற்படுத்தினார்) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன் (அவர் முன்னறிவித்து வாக்குப்பன்னியிருக்கிறார்).*

உங்களுடைய உணர்வுகள் இன்னும் கவனியாத ஜெபத்தின் பதில்களுக்காக உங்கள் உதடுகளை துதியினால் நிரப்புங்கள். தேவனுடைய வார்த்தையின் யதார்த்தத்தை அறிக்கை செய்யும்போது மட்டுமே அது நிஜமாகிறது.

14. கர்த்தருடைய வார்த்தையை ஆணையிட்டு அறிக்கை செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு.

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம் பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்: உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.*

**_Amplified Bible_**

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம் மற்றும் முடிவு பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்: உம்முடைய பாதைகளில் வெளிச்சம் ( தேவனுடைய அனுக்கிரகம்) பிரகாசிக்கும்.*

**_New International Version_**

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை முடிவு பன்னினால், அது உமக்கு நிலைவரப்படும், உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.*

*ஏசாயா 43:26 நாம் ஒருவரோடு ஒருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு: நீ நீதிமானாக விளங்கும் படி உன் காரியத்தை சொல்.*

உன் வார்த்தைகள் உன் விசுவாசத்தை தீர்மானிக்கின்றன! வார்த்தைகளை பேசும் போது விசுவாசம் செயல்படுகிறது. உன்னுடையவைகள் என்று தேவன் ஏற்கனவே சொன்னவைகளை தேவனிடத்தில் கேட்பது அவிசுவாசம். தேவனுடைய வார்த்தையை அறிக்கையிட்டு அறிவி. நீங்கள் யாரென்று தேவன் உங்களை சொல்லியிருக்கிறதையும் அவர் உங்களுக்காக வைத்திருக்கிறவைகளை சொந்தமாக்கி கொண்டாய் என்பதையும் அவரோடு ஏற்றுக்கொள்.

15. தேவனுடைய வார்த்தையை உன் வாயில் வைத்துக்கொள்.

*யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.*

கேட்பது (கிரேக்க பொருள்)

நீங்கள் விரும்பும் வழியில் வெற்றிக் கொள்ளாதபடி தவறான பேச்சு வலை போல் உங்களை மாட்டிவிடலாம்.

16. இயேசு கிறிஸ்து உங்கள் பணியின் (அறிக்கை) பிரதான ஆசாரியன்.

*எபிரேயர் 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்.*

*எபிரேயர் 4:14 வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரரானாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கடவோம்.*

*எபிரேயர் 10:23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்ககடவோம்: வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.*

உங்கள் அறிக்கையில் நிலையற்றவர்களாயிருப்பதின் தண்டனை என்னவென்றால் நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் அதின் கிரியைகளையும் நிராகரிக்கிறீர்கள். நிலை தன்மையில் வல்லமை உள்ளது.

உங்களுடையதாக நீங்கள் அறிக்கை செய்கிற வார்த்தையை மட்டுமே தேவன் செயல்படுத்தமுடியும், அது நிறைவேறும் வரை தேவன் அதை விட்டுவிடமாட்டார்.

17. கிறிஸ்து உங்களுக்குள் யாரென்று ஒப்புக்கொள்ளுங்கள்.

*பிலமோன் 1:6 உங்களிலுள்ள சகல நன்மைகளும் தெரியப்படுகிறதினாலே உம்முடைய விசுவாசத்தின் அந்நியோன்னியம் கிறிஸ்து இயேசுவுக்காகப் பயன்பட வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்.*

கிறிஸ்து உங்களுக்குள் யாரென்று ஒப்புக்கொண்டும் பேசும் போதும் உங்கள் விசுவாசம் பலன் உள்ளதாக காரணமாயிருக்கும்.

*தீத்து 3:8 இந்த வார்த்தை உண்மையுள்ளது: தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும் படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமுமானவைகள்.*

18. விசுவாசப் பிரமாணத்தை உங்கள் வாயில் செயல் படுத்துங்கள்.

உங்கள் வாயின் வார்த்தையினாலே மரணம் அல்லது ஜீவனை செயல் படுத்துகிறீர்கள்.

*நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.*

*ரோமர் 8:2 கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.*

*நீதிமொழிகள் 10:11 நீதிமானுடைய வாய் ஜீவ ஊற்று: கொடுமையோ துன்மார்க்கனுடைய வாயை அடைக்கும்.*

*நீதிமொழிகள் 10:11 –ல் உள்ள "ஊற்று" என்றால் ஆதாரம் என்று பொருள். உன் வாயை ஜீவனின் ஆதாரமாக மாற்ற முடியும்.*

19. பிதா என்ன சொல்லவேண்டும் என்று போதித்தவைகளையே இயேசு பேசினார்.

*யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு: நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்கு போதித்தபடியே இவைகளை சொன்னேன் என்று அறிவீர்கள்.*

*யோவான் 12:49 நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது*

*இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.*

## New International Version

*யோவான் 12:49 நான் என் சுயமாய் பேசவில்லை, ஆனால் நான் பேச வேண்டியது இன்னதென்றும் எப்படி பேசவேண்டும் என்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.*

தன்னைக் குறித்தவைகள் நிறைவேறும் படியாக இயேசு வார்த்தைகளை பேசினார். நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பு வார்த்தைகள் பேசப்பட வேண்டும்.

20. இயேசு நிறைவேற்றும் படியாக தீர்க்கதரிசிகள் ஆவியினாலே வார்த்தைகளை பேசினார்கள்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து அவருடைய பிறப்பு, கிரியைகள், மரணம், உயிர்த்தெழுதல், மேலும் பல காரியங்களை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஆவியினாலே பேசினார்கள். இவைகள் நடப்பதற்கு முன்பாகவே பேச வேண்டியதாயிருந்தது. நீங்கள் அறியாமல் இருந்தாலும் வார்த்தைகள் இல்லாமல் ஒன்றும் நடக்காது.

21. தேவனுடைய பேசப்பட்ட வார்த்தையினால் உலகம் சிருஷ்டிக்கப்பட்டது.

*எபிரேயர் 11:3 விசுவாசத்தினாலே நாம் உரகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய் காணப்படுகிறவைகள் தோன்றப்படகிறவைகளால் உண்டாகவில்லை என்றும் அறிந்திருக்கிறோம்.*

*ஆதியாகமம் 1:3 தேவன் வெளிச்சம் உண்டாகக்கவடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.*

*ஆதியாகமம் 1:6 பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.*

*ஆதியாகமம் 1:9 பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

*ஆதியாகமம் 1:11 அப்பொழுது தேவன் பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

*ஆதியாகமம் 1:14 பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்.*

*ஆதியாகமம் 1:20 பின்பு தேவன்: பூமியானது ஜாதிஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும் ஜாதிஜாதியாகப் பிறப்பிக்ககடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

*ஆதியாகமம் 1:24 பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளிளையும், காட்டு மிருகங்களையும் ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

*ஆதியாகமம் 1:26 பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக: அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*

22.இயேசு பேசின வார்த்தைகள் நிறைவேறும்படியாக பழைய ஏற்பாட்டு ஜனங்களிடத்தில் தோன்றி பேசினார்.

தேவன் மோசேயோடு எரியும் புதரில் இருந்து பேசினார்.

*யாத்திராகமம் 3:10 நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்.*

23. தேவன் செயல் படுவதற்காக தேவதூதர்கள் கர்த்தரிடத்தில் இருந்து வார்த்தையை ஜனங்களுக்கு பெற்றுக் கொடுத்தார்கள்.

*லூக்கா 1:30- தேவதூதன் அவளை நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபைப் பெற்றாய்.*

*31. இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்: அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.*

*32. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்: கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்கு கொடுப்பார்.*

24. அநேக வியாதியஸ்தர்கள் இயேசுவின் ஊழியத்தில் வார்த்தையினாலே சுகப்படுத்தப்பட்டார்கள். வார்த்தையினாலே லாசரு உயிரோடு எழுப்பப்பட்டான்.

*யோவான் 11:43 இவைகளைச் சொன்ன பின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.*

*44. அப்பொழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்.*

25. உங்கள் அறிக்கையின் அடிச்சுவடுகளை உங்கள் விசுவாசம் பின் தொடருகிறது.

உங்கள் விசுவாசம் அல்லது அவிசுவாசம் உங்கள் அறிக்கையினாலே தீர்மானிக்கப்படுகிறது.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுப்போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில்*

*சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

26. இயற்கை, உணர்வு அறிவினால் கூடாதது என்று தோன்றும் போது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை செயல் படுத்த தைரியம் கொள்ளுங்கள். விசுவாசிப்பதை விட அதிகமாய் செய்யுங்கள். தேவனுடைய வார்த்தையில் கிரியை செய்யுங்கள்! சூழ்நிலையினிமித்தம் தனிப்பட்ட முறையில் அல்லது உங்கள் ஐந்து இயற்கை உணர்வுகள் ( கேட்பது, பார்ப்பது, நுகர்வது, தொடுவது மற்றும் சுவைப்பது) மூலம் தேவனுடைய வார்த்தையின் மேல் விசுவாசம் கிரியை செய்யும்.

தைரியம், உறுதியுடனான தேவனுடைய வார்த்தையின் அறிக்கை புதிய தைரியத்தைக் கொடுக்கும்.

*யாக்கோபு 1:25 சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

27. உங்கள் வார்த்தை உங்களை ஆதிக்கம் செலுத்தும்.

*நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.*

28. தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்து அதின் படி செயல்படுங்கள். உங்கள் செயல் உங்களுக்கு ஜெயம் அல்லது தோல்வியை கொடுக்கும். உங்கள் செயலின் படியே நீங்கள் ஒரு வேலை பெற்றுக்கொள்ளலாம், பெறவேண்டியதை பெறாமல் இருக்கலாம் அல்லது தோற்கடிக்கப்பட்டிருக்கலாம்.

*யாக்கோபு 2:21 நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்?*

*22. விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.*

29. மற்றொருவரின் விசுவாத்தின் படி அல்லது மனநிலைப்பாட்டின் படி செயல் பட வேண்டாம். வேதாகம விசுவாசம் உன் இருதயத்தில் இருந்தே கிரியை செய்யும் சிந்தையில் இருந்து அல்ல.

*ரோமர் 10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.*

30. விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலே வரும்: ஆனால், உன்னுடைய வாழ்கையில் வெளிப்படுவதற்கு அது தேவனுடைய வல்லமையின் மேல் செயல்படுத்தப்படவேண்டும்.

நீங்கள் தேவனுடைய வார்த்தையின் மேல் செயல்படும் போது விசுவாசம் வெளிப்பட்டு பெலன் கொடுக்கும்.

*யாக்கோபு 2:17 அப்படியே விசுவாசமும், கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.*

**Amplified Bible**

*யாக்கோபு 2:17 அப்படியே விசுவாசமும், கிரியைகளில்லாதிருந்தால் (கீழ்படிதலுடன் உள்ள கிரியைகளும் செயல்களும்), தன்னிலே தானே வல்லமையற்றதாயிருக்கும் (செயலற்ற, மரித்த).*

31. ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான வளர்ச்சி படியில் உங்கள் நாவை கட்டுப்படுத்துவதே மிகப்பெரிய படியாகும் (ஈவுகள், தாளந்துகள், கூச்சல்கள், துதிப்பது, போதிப்பது அல்லது மற்ற கிறிஸ்தவ செயல்களைவிட).

*யாக்கோபு 3:2 நாமெல்லாரும் அனேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்.*

*3 பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்டியும் படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்*

*4 கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிப்பட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.*

*5 அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பும் எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது!*

***Amplified Bible***

*யாக்கோபு 3:2 நாமெல்லாரும் அனேக விஷயங்களில் தவறுகிறோம்: ஒருவன் சொல்தவறாதவனானால் (தீமையானவைகளை ஒருபோதும் சொல்லாதவன்), அவன் முழுவதுமாய் சுபாவத்தில் வளர்ந்தவனும் பூரணபுருஷனும், தன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக் கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.*

தேவனுடைய வார்த்தையின் உண்மையை அறிக்கை செய்யும் போது அது உண்மையாகிறது. தேவன் யாரென்பதையும், அவருக்குள் நீங்கள் யாரென்பதையும் அவர் உனக்காக என்ன செய்திருக்கிறார் என்பதையும் அறிக்கை செய்வது அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு முன்பாக வருகிறது. தேவனோடு ஒத்துப்போங்கள். உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் வெளிப்படும் வரை மறுபடியும் மறுபடியும் அவர் சொன்னவைகளை சொல்லுங்கள்.

<u>அறிக்கை</u>

நான் தேவனுடைய வார்த்தையை வாசிப்பதும் யோசிப்பதும் மட்டுமல்லாமல, கிறிஸ்து இயேசுவிற்குள் தேவன் எனக்கு சொந்தமாகிக் கொண்டிருக்கிற வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் பேசி அறிக்கை செய்கிறேன்.

## வார்த்தையின் ஜீவனும் வல்லமையும்

### பாடம் 4

### விசுவாச அறிக்கைகள் எப்படி கிரியை செய்கிறது

விதைகளின் புஸ்தகங்களோடு வேதாகமம் ஒப்பிடப்படலாம். அறுவடையை பெற்றுக்கொள்ள விதைகள் விதைக்கப்படவேண்டும். விதைப்பிற்கும் அறுப்பிற்கும் இயற்கை விதிமுறைகள் இருப்பது போல, விதைப்பதற்கும் அறுப்பதற்கும் ஆவிக்குரிய விதிமுறைகளும் உண்டு. தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமையை செயல்ப்படுத்தி உங்களுக்காக கிரியை செய்ய வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தையை எப்படி பேச வேண்டும் என்பதை கற்றுக்கொள்வது அவசியம். பல சம்பவங்களில், வார்த்தையை ஆரம்பபிப்பதும் அதின் வல்லமையை செயல்ப்படுத்த செய்வதும் உன் கையில் இருக்கிறது.

1.உன் இருதயத்திலும் சிந்தையிலும் தேவனுடைய சாயலின் வரை படத்தை அறிக்கை வண்ணம் பூசுகிறது.

தேவன் உன்னை குறித்து என்ன சொல்கிறார் என்பதை நீ கேட்டறிந்துக்கொள்வதற்கு அறிக்கை உதவுகிறது. உன் இருதயத்திலும் சிந்தையிலும் நீ யார் என்று அவர் கூறிய சாயலை உன்னால் உருவாக்கமுடியும்.

> *2 தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடுக்காமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.*

2.கிறிஸ்துவின் சாயலை உனக்குள் அறிக்கை செய்வதினால் அந்த சாயலுக்கு ஒப்பாகுவதற்கு உதவும்.

> *ரோமர் 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரர்களுக்குள்ளே முதற்பேறானவராக இருப்பதற்காக, தேவன் எவர்களை முன் குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்.*

***Amplified Bible***

*ரோமர் 8:29 தம்முடைய குமாரன் அநேக சகோதரர்களுக்குள்ளே முதற் பேறானவராக இருப்பதற்காக, தேவன் எவர்களை முன் குறித்தாரோ (எவர்களை குறித்து அறிந்து முன்பாகவே அன்பு செலுத்தினாரோ), அவர்களை ஆதியில் இருந்தே குறித்திருக்கிறார் (அவர்களை தெரிந்துக்கொண்டிருக்கிறார்) தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக இருப்பதற்கு (அவருடைய சாயலை தனக்குள்ளாக பகிர்ந்துக்கொள்ள) முன் குறித்திருக்கிறார்.*

உங்களை குறித்த சாயல் உங்களுக்குள் மாறும் போது, அது வெளியே தெரிய ஆரம்பிக்கும். விசுவாசம் நிறைந்த வார்த்தைகளை நீங்கள் பேசும் பொழுது உங்களுக்காகவும் உங்களுக்குள்ளும் தேவனுடைய வார்த்தையின் வல்லமை கிரியை செய்ய வெளிப்படுத்துகிறது.

3.உங்களை குறித்து தேவன் வைத்திருக்கும் இலக்கையும் நோக்கத்தையும் அடைவதற்கான சிறந்த விழியும் அவருடைய சாயலிற்கு ஒப்பாகவும் தேவன் மாற்ற விரும்புகிறார்.

*ரோமர் 12:2 நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுருபமாகுங்கள்.*

நீங்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருப்பதை விட தேவன் அதிகமாக அறிவார். உங்களை குறித்ததான அவருடைய வார்த்தையை பேசுங்கள். உலகமோ அல்லது சூழ்நிலைகளோ உங்களை குறித்து பேசுவதை நோக்காமல் அவருடைய வார்த்தை உங்களை குறித்து சொல்வதை தொடர்ந்து நோக்குங்கள்.

*யாக்கோபு 1:23 எனென்றால், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின் படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் முகத்தைப் பார்க்கிற மனிதனுக்கு ஒப்பாக இருப்பான்.*

*24 அவன் தன்னைத் தானே பார்த்து, அந்த இடத்தைவிட்டுப் போனவுடனே, தன் சாயல் என்னவென்பதை மறந்துவிடுவான்.*

*25. சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

4.கிறிஸ்துவிற்குள் நீங்கள் யாரென்பதை பார்க்காமல் இருப்பதற்கு சாத்தான் தடுக்கிறான்.

*2கொரிந்தியர் 4:4 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்.*

***Amplified Bible***

*2 கொரிந்தியர் 4:4 தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் (மேசியா) மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு (சத்தியத்தை நிதானிக்ககூடாதபடிக்கு) இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்கினான்.*

தேவனுடைய வார்த்தையின் ஒளியானது உன் ஜீவியத்தின் இருளான பகுதியில் ஒளி தந்து நீங்கள் எந்த இடத்தில் மாறவேண்டும் என்று காட்டுகிறது.

5.அறிக்கையிடுதல் என்ன செய்கிறது?

1. தேவன் சொன்னவைகளையே அறிக்கையிடுதலும் சொல்லும்.

2. தேவன் உன்னைக் குறித்து சொன்னவைகளுக்கு அறிக்கையிடுதல் எஜமானாக்கும்.

3. அறிக்கையிடுதல் தேவனுடைய வார்த்தையை உங்களுடையதாக்குகிறது.

4. தேவனுடைய வார்த்தையை உரிமையாக்கி உங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ள அறிக்கையிடுதல் செய்கிறது.

5. தேவனுடைய வார்த்தை நீங்கள் யார் என்று எதை சொல்லுகிறதோ அவைகளை ஏற்றுக்கொள்ள அறிக்கையிடுதல் ஒப்புக்கொள்கிறது.

6. தேவன் என்ன சொல்லுகிறாரோ அதையே அறிக்கை அறிவிக்கிறது.

7. அறிக்கையிடுதல் தன்னை வெளிப்படுத்துகிறது.

6.தேவன் பேசுவதின் மூலம் மனிதனை சிருஷ்டிக்கும் செயலை ஆரம்பித்தார்.

*ஆதியாகமம் 1:26 பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக: அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருக ஜீவகன்களையும், பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*

உங்கள் சூழ்நிலைகளிலும் வாழ்க்கையிலும் என்ன நடக்கவேண்டும் என்று நீங்கள் விரும்பும் சாயலை வார்த்தையினால் உருவாக்க முடியும்.

7.தேவனுடைய வார்த்தையை அறிக்கையிடுங்கள்.

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

8.தேவன் பேசுகிற அதே விஷயங்களை பேசுங்கள்.

*1 கொரிந்தியர் 1:10 சகோதரரே, நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகிளில்லாமல் ஏகமனதும் எக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.*

9. கர்த்தருடைய வார்த்தை உண்மை என்று அறிக்கை ஒத்துக்கொள்கிறது.

*ரோமர் 3:4 அப்படியாகமாட்டாது: நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று என்று*

*எழுதியிருக்கிறபடி, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷன் பொய்யன் என்று சொல்வோமாக.*

10. சத்தியத்திற்கு விரோதமாக பொய் சொல்லாதிருங்கள்.

*யாக்கோபு 3:14 உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்: சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலிருங்கள்.*

***Amplified Bible***

*யாக்கோபு 3:14 உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் (பொறாமை) விரோதத்தையும் (போட்டி, சுய புகழ்ச்சி), நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்: சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமிலிருங்கள்.*

11. கர்த்தருடைய வார்த்தையை அறிக்கை செய்வதினால் எதை அறிக்கையிடுகிறதோ அவைகள் அதற்கு சொந்தமாகவும் தனித்தன்மையுடையதாகவும் உரிமை கொண்டாடுகிறது.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

12. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிதலும் ஒத்துப்போகுதலும் தேவனை உங்கள் மேல் ஆசீர்வாதத்தை கட்டடைளயிடசெய்யும்.

*ஏசாயா 45:11 இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கின வருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்: என் பிள்ளைகளைக் குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்.*

*உபாகமம் 28:1 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாயச்*

*செவி கொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.*

*2.நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிக்கொடுக்போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்குப் பலிக்கும்.*

*உபாகமம் 28:8 கர்த்தர் உன் களஞ்சியங்களிலும், நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார்: உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்.*

13. தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்தல் கிரியை செய்யும்.

தேவனுடைய ராஜ்யத்திற்குள் விதையை விதைப்பதற்கான வழி அறிக்கையிடுதல் ஆகும்.

*ஏசாயா 55:10 மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முறை கிளம்பி விளையும்படிச்செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,*

*11.அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

***Amplified Bible***

*ஏசாயா 55:11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் (பலனை கொடுக்காமல், பிரயோஜனமில்லாமல்), அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும் படி வாய்க்கும்.*

*1பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிபிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

14. பிதா தன்னை குறித்து சொன்னவைகளையே இயேசு தொடர்ந்து பேசினார் (அறிக்கை).

*யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தன பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.*

*29. என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார். பிதாவுக்கு பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.*

*30. இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.*

*31. இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்.*

*32. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.*

இயேசுவே உங்களுக்கு முன் மாதிரி. அவர் பிதாவின் வார்த்தையில் தொடர்ந்து பேசியபோதும் பிதா சொன்னதையே சொன்ன போதும், தாம் சொன்னவைகளை பின்பற்றும்படி அவரோடு இருந்தவர்களுக்கு கூறினார். நீங்கள் அவருடைய வார்த்தையில் நிலைத்திருந்தால் அவர் பேசினவைகளையே நீங்கள் பேசினால் அவரை விடுதலையாக்கின சத்தியம் உங்களையும் விடுதலையாக்கும். உங்கள் இருதயத்திலும் சிந்தையிலும் புதிதான சாயலை உருவாக்கவும் உங்கள் மனதை புதிதாக்கவும் அவகாசம் எடுக்கும். தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்!

*யோவான் 12:44 அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை அனுபப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கறான்.*

*45. என்னை காண்கிறவன் என்னை அனுப்பினவதைக் காண்கிறான்.*

*46. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.*

*47. ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமறபோனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை: நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன்.*

*48. என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது: நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீக்கும்.*

*49. நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.*

*50. அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்: ஆகையால் நான் பேசுகிறவைகளை பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.*

இயேசு விரும்பிய எதையும் பேசவில்லை. அவர் பிதாவின் வார்த்தைகளையே பேசினார்!

*யோவான் 5:30 நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை: நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்: எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.*

*யோவான் 15:5 நானே திராட்சச் செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.*

*யோவான் 8:54 இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா*

*என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.*

*55. ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கிறேன்: அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்களைப் போல நானும் பொய்யனாயிருப்பேன்: அவரை நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்.*

15. தேவன் தாம் பேசின வார்த்தைகளில் அவருடைய விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார்.

*ஆதியாகமம் 1:3 தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று.*

*எபிரேயர் 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.*

16. கோலியாத்தை தன்னுடைய கரத்திலே கொடுப்பார் என்று தன்னுடைய வார்த்தைகளின் மூலம் தாவீது தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தினார்.

*1 சாமுவேல் 17:36 அந்தச் சிங்கத்தையும் அந்தக் கரடியையும் உம்முடைய அடியானாகிய நான் கொன்றேன்: விருத்தசேதனமில்லாத இந்தப் பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப் போல இருப்பான்: அவன் ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்தித்தானே என்றான்.*

*37. பின்னும் தாவீது: என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்த பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்: அப்பொழுது சவுல் தாவீதைப் பார்த்து: போ, கர்த்தர் உன்னுடனே இருப்பாராக என்றான்.*

17. தேவனுடைய வார்த்தையை பேசி விசுவாசியுங்கள்.

*மத்தேயு 17:20 அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்: கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து,*

*இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம் போம்: உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*மாற்கு 11:3 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*24. ஆதலால், நீங்கள் ஜெபம் பன்னும் போது எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

*Weymouth Translation*

*மாற்கு 11:24 ஆதலால், நீங்கள் ஜெபம் பன்னும்போது எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசித்தீர்களானால் - அவைகள் உங்களுடையதாகும்.*

*லூக்கா 17:6 அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டமத்திரத்தை நோக்கி: பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்கு கீழ்ப்படியும்.*

*ரோமர் 10:8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

18. இல்லாதவைகளை இருக்கிறவைகளாக விசுவாசம் பேசுகிறது.

*ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு என்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனான்.*

*Amplified Bible*

*ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு என்னைத் தகப்பனாக ஏற்ப்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி (நம்முடைய தகப்பனை நியமித்திருக்கிறார்) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் (ஏற்கனவே) போல் அழைக்கிறவருமாயிருக்கிற (அவர் முன்னறிந்து வாக்குப்பன்னினவைகள்) தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனான்.*

**New American Standard**

*ரோமர் 4:17 (அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

19.பெரும்பாடுள்ள ஸ்திரீ தன் விசுவாசத்தை தன்னுடைய வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தினாள்.

*மாற்கு 5:28 ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தை தொட்டாள்.*

*மாற்கு 5:34 அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.*

20. தேவனை துதிப்பதினாலும் மகிமைப்படுத்துவதினாலும் விசுவாசம் வளருகிறது.

*ரோமர் 4:20 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல்,*

*Amplified Bible*

*ரோமர் 4:20 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறிந்து அவிசுவாசமாகவோ அவநம்பிக்கையாகவே தடுமாறாதல் (சந்தேகத்திற்குரிய கேள்விகள்), தேவன் வாக்குப்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனான்.*

விசுவாசம் கேள்வியினால் வருகிறது, அதன் மேல் நாம் செயல் படும்போது கர்த்தருடைய வல்லமை நம் வாழ்க்கையில் செயல்படும். தேவனுடைய வார்த்தையின் மேல் செயல் படுவதற்கு தைரியமாயிருங்கள். உங்கள் செயல்களினாலே உங்களுக்கு வெற்றியோ அல்லது தோல்வியோ அல்லது வெற்றியை பெறுவதற்கு தடையோ ஏற்படலாம். சூழ்நிலைகளும் உங்கள் உணர்வுகள் உங்களுக்கு சொல்லுகிறவைகளிலும் உங்கள் அறிக்கையில் உறுதியாய் இருங்கள். தேவனுடைய வார்த்தைகள் மற்றும் செயல்கள் இல்லாமல் விசுவாசம் இல்லை அல்லது அது மரித்ததாயும் பலனற்றதாயும் இருக்கிறது. உங்கள் அறிக்கைக்கு மேலாக உயரவோ அல்லது அது வளராது. உங்கள் விசுவாசம் அல்லது அவநம்பிக்கை உங்கள் அறிக்கையினாலே தீர்மானிக்கப்படுகிறது.

அறிக்கை

நான் உறுதியான மற்றும் நிலையான அறிக்கையின் மூலம் தேவனுடைய வார்த்தையில் எனக்கு சொந்தமான வாக்குறுதிகள் மற்றும் நன்மைகளை செயல் படுத்துகிறேன்.

## பாடம் 5

## தேவனுடைய வார்த்தைக்கு செவிக்கொடுத்தல்

தேவனுடைய வார்த்தையானது அழியாத வித்தும் வல்லமை உடையதுமாய் இருக்கிறது. தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்தி உங்களில் கிரியை செய்வதற்கு எப்படியாயினும், அது நாட்டப்பட்டு நீர்பாயச்சிடப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ள விதை, ஆனால் அதை நீங்கள் செயல் படுத்தாத வரை அது செயல் அற்றதாயிருக்கும். தேவனுடைய வார்த்தையை உங்கள் வாழ்க்கையில் செயல் படுத்தும் சிறந்த வழி அவைகளை பேசுவதுதான்.

1.உங்கள் விருப்பத்தின் படி கேளுங்கள்.

கேட்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது

*யோவான் 15:7 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.*

"உங்கள்" மற்றும் "நீங்கள்" என்ற வார்த்தைகள் யோவான் 15:7 –ல் ஐந்து முறை கூறப்பட்டுள்ளது. இதில் நீங்கள் எதை கேட்கிறீர்களோ என்பதற்குதான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

| <u>கேளுங்கள்</u> |
|---|
| தேவை |
| அழைப்பு |
| உரிமையோடு கேட்பது |

<u>*Amplified Bible*</u>

*யோவான் 15:7 நீங்கள் என்னிலும், (என்னோடு அடிப்படையாக நிலைத்திருந்தால்) என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், தொடர்ந்து உங்கள் இருதயங்களில்*

*வாழ்ந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.*

நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது, நீங்கள் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்கிறீர்கள். நீங்கள் வெற்றிக்கொள்வதற்கு, அவருடைய வார்த்தைகள் தொடர்ந்து உங்களுக்குள் நிலைத்திருக்க வேண்டும். சந்தேகம் மற்றும் பயத்தின் வார்த்தைகளை பேசினால் தேவனுடைய வார்த்தை உங்கள் வாயிலிருந்து விலகிற்கு என்று பொருள். சந்தேகம் மற்றும் பயத்தின் வார்த்தைகள் இரண்டையும் பேசினால் இருமனமுள்ளவர்களாய் இருப்பீர்கள். இருமனமுள்ளவர்களாய் இருந்தால் தோற்கடிக்கப்பட்டவர்களாய் நடப்பீர்கள்.

*யாக்கோபு 1:6 ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்: சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிப்பட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.*

*7.அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.*

*8.இருமனமுள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.*

2. உங்கள் வாயில் தேவனுடைய வார்த்தை இருக்கிறது.

*ரோமர் 10:6 விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கி வரப்பன்னும் படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?*

*7.அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்த ஏறிவரப்பன்னும் படி பாதாளத்துக்க இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி:*

*8.இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

*9.என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து*

எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

10.நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

**Amplified Bible**

*ரோமர் 10:8 இந்த வார்த்தை (கிறிஸ்துவிற்கு தேவனுடைய செய்தி) உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை (செய்தி, அடிப்படை மற்றும் குறிக்கோள்) நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

*9. என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் (அவரில் நம்பிக்கை, சத்தியத்தை சார்ந்து இருத்தல்) இரட்சிக்கப்படுவாய்.*

*10.நீதியுண்டாக (நீதிமானாக அறிவித்தல், தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதல்) இருதயத்தில் விசுவாசிக்கப்படும் (கிறிஸ்துவை சார்ந்திருத்தல் மற்றும் நம்புதல்), (அவனுடைய) இரட்சிப்புண்டாக வாயினாலே (வெளிப்படையாக அறிக்கை செய்து அவனுடைய விசுவாசத்தை விடுதலையோடு பேசுவது) அறிக்கைப்பண்ணப்படும்.*

உங்கள் வாயினாலே பேசி இருதயத்தில் விசுவாசிக்கும் போது தேவனுடைய வார்த்தையில் உள்ள வல்லமை செயல்படும்.

3.விசுவாசம் இருக்கிறவைகளாக அழைக்கிறது (பேசுகிறது)

*ரோமர் 4:16 ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது: நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்தியாருக்குமாத்திரமல்ல, நாமெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது.*

*17. அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல் அழைக்கிறவருமாய் இருக்கிற தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனானான்.*

## ***Amplified Bible***

*ரோமர் 4:16 ஆதலால், (உடைமையாகுதல்) சுதந்தரமானது கிருபையினால் (அளவில்லாத அன்பு) உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது: நியாப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய (முழுவதுமாய்) சந்தியாருக்குமாத்திரமல்ல, நாமெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கு மட்டுமல்ல பிரமாணத்தை பின்பற்றுகிறவர்கள் மற்றும் அதோடு இருப்பவர்கள் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது.*

*ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு என்னைத் தகப்பனாக ஏற்ப்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி (நம்முடைய தகப்பனை நியமித்திருக்கிறார்) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் (ஏற்கனவே) போல் அழைக்கிறவருமாயிருக்கிற (அவர் முன்னறிந்து வாக்குப்பன்னினவைகள்) தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனான்.*

## ***New Revised Standard Version***

*ரோமர் 4:17 "அநேன ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன்" என்று எழுதியிருக்கிறபடி அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

***New American Standard***

*ரோமர் 4:17 (அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

உங்களுடைய வாயினாலே ஜீவனுள்ள பிரமாணத்தை செயல்படுத்துங்கள். உங்கள் வாயினாலே பேசி உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கப்படும் வரை தேவனுடைய வார்த்தை பிரயோஜனமற்றதாயிருக்கும். தேவன் உங்கள் தேவைகளை கவனித்துக்கொள்வார். அதினாலேயே தேவன் நீங்கள் விசுவாசிப்பதற்கும் பேசுவதற்கும் அவருடைய வார்த்தையை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

ஏனென்றால் மனிதன் பாவம் செய்து அவனுடைய அதிகாரத்தை இழந்துப்போனான், பிசாசானவன் தற்பொழுது இப்பிரபஞ்சத்தின் தேவனாயிருக்கிறான். இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் தேவன் அந்த அதிகாரத்தை புதுப்பித்தார். எனினும், பூமியில் உள்ளவர்கள் அவரிடம் கேட்கும் வரை அவரால் எதையும் செய்ய சட்டபூர்வமான அதிகாரம் அவரிடம் இல்லை.

4.பெலவீனன் பெலவான் என்று சொல்வானாக.

*யோவேல் 3:10 உங்கள மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்: பலவீனனும் தன்னை பெலவான் என்று சொல்வானாக.*

சூழ்நிலையையோ அல்லது நிகழ்கால காரியங்களை குறித்தோ பேசுவதும் அறிவிப்பது மாற்றத்தை கொடுக்காது. சூழ்நிலைக்கு பதிலாக அல்லது நேராக தேவனுடைய வாக்குத்தத்தங்களை பேசுவதினால் அவை மாறுவதற்கு தேவனுடைய வல்லமையை கிரியை செய்ய உதவும். சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் கர்த்தரின் வார்த்தைகளோடு ஒத்துப்போவதினாலோ அல்லது அதை பேசுவதினாலோ நாம் பொய் சொல்லுகிறவராகவோ உண்மைக்கு

மாறாக பேசுகிறவராக இருக்கிறவர் இல்லை. தேவனுடைய வார்த்தை உண்மையானது!

5.தேவன் உங்கள் வார்த்தைகளுக்குட்ப்பட்டவர்.

*எண்ணாகமம் 14:28 நீ அவர்களோடே சொல்வ வேண்டியது என்ன வென்றால: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.*

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை கொடுக்க விரும்பினார்: ஆனால் இருபது வயதுடையவர்களும் முதியோரும் வனாந்திரத்திலே மரித்தார்கள். அவருக்கு அவர்களுடைய வார்த்தைகளை புறக்கணிக்க முடியவில்லை. அவர்கள் பேசின சந்தேகம் மற்றும் பயத்திற்குரியவைகளுக்கான விளைவுகளை பெற்றுக்கொண்டார்கள்.

6.பரிசுத்த ஆவியானவர் உங்களோடு கிரியை செய்வார்.

*ரோமர் 8:26 அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்.*

| <u>உதவி</u> |
| --- |
| உங்களோடு கூட இருந்து அதற்கு எதிராக கிரியை செய்வது |

ஏதாகிலும் இருந்தால் மட்டுமே பரிசுத்தாவியானவர் உங்களை பிடித்துக்கொள்வார். நீங்கள் பேசும் தேவனுடைய வார்த்தையை மட்டுமே அவர் பிடித்துக்கொள்வார். உங்களுக்காக பரிசுத்த ஆவியானவர் பேச முடியாது: ஆனால், நீங்கள் பேசுவதற்கு அவர் உதவுவார்.

*எபிரேயர் 13:6 அதினாலே நாம் தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.*

7.நீங்கள் விசுவாசிப்பவைகளை பேசுங்கள்.

*ஏசாயா 43:26 நாம் ஒருவரோடு ஒருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு: நீ நீதிமானாக விளங்கும் படி உன் காரியத்தை சொல்.*

***<u>Amplified Bible</u>***

*ஏசாயா 43:26 நாம் ஒருவரோடு ஒருவர் வழக்காடும்படி எனக்கு நினைப்பூட்டு (உங்கள் நன்மைகளை எனக்கு நினைப்பூட்டுங்கள்): நீ நீதிமானாக (சரியென்று நிருபி) விளங்கும் படி உன் காரியத்தை சொல்.*

உன் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தை பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் நீங்கள் விசுவாசிப்பதை பேச வேண்டும்.

*மாற்கு 11:23 ல் குறிப்பிட்டபடி நீங்கள் விசுவாசிக்கிறதை போல மூன்று முறைக்கு அதிகமாக பேசவேண்டும்.*

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுவேன்.*

உங்கள் இருதயத்தில் விசுவாசிப்பது அவசியம்: ஆனால் சொல்லுவதும் அவசியமாகும். பெரும்பாலோனோர் விசுவாசத்தில் குறைந்தவர்கள் அல்ல. அவர்கள் குறைவு அவர்கள் பேசுவதில் இருக்கிறது. நீங்கள் பேசுவதே உங்களுக்கு கிடைக்கும், மற்றவர்கள் பேசுவது அல்ல.

*யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம் பன்னினால், அது உமக்கு நிலைவரப்படும்: உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.*

***New International Version***

*யோபு 22:28 நீர் நிருணயம் பன்னுகிறதெதுவோ அது நிலைவரப்படும், உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.*

***Amplified Bible***

*யோபு 22:28 நீரும் ஒரு காரியத்தை முடிவெடுத்து நிருணயம் பன்னலாம், அது உமக்கு நிலைவரப்படும்: உம்முடைய பாதைகளில் வெளிச்சம் (தேவனுடைய அன்பு) பிரகாசிக்கும்.*

8.தேவனுடைய வார்த்தைக்கு தேவதூதர்கள் செவிக்கொடுக்கிறார்கள்.

*சங்கீதம் 103:20 கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின் படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்.*

9.தேவனுடைய வார்த்தையை பேசுவதினால் பரிசுத்த ஆவியானால் நிரப்பப்படுங்கள்.

*எபேசியர் 5:18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிக்கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து:*

*19.சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பன்னி.*

எபேசியர் 5:18 ல் “நிறைந்து” (கிரேக்க பொருள்) என்றால் நிரப்பப்படுகிற செயல்.

மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களோடு பரிசுத்தாவியானவர் எப்பொழுதும் இருக்கிறார்: ஆனால், அவர்கள் எப்பொழுதும் ஆவியினாலே நிறைந்தவர்களாயிருப்பதில்லை. நீங்கள் ஆவியினாலே நிறைந்து மறுமடியும் நிறைந்து இருப்பது அவசியம். பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை பேசுவதும் பாடுவதும், நிறையப்பட உதவும்.

*கொலோசேயர் 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி:*

10. விசுவாசம் பேசுகிறது

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

விசுவாசம் பலன் கொடுக்க வேண்டுமென்றால அதற்கு தேவையான செயல் இருக்க வேண்டும். விசுவாசத்தை செயல் பட வைக்கும் மிகவும் பயனுள்ள வழி பேசுவதாகும்.

உங்கள் இயற்கையான கண்கள் பார்க்கும் முன்பதாகவே ஆவிக்குரிய கண்களால் விசுவாசம் காண்கிறது.

*2 கொரிந்தியர் 4:17 மேலும் காணப்படுகிறவைகளல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமாக நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.*

*18. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்.*

11. பிதா கற்பித்தவைகளையே இயேசு பேசினார்.

*யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.*

*யோவான் 12:49 நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது*

*இன்னதென்றும் என்னை என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.*

*50. அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்: ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.*

***New International Version***

*யோவான் 12:49 நான் என் சுயமாய் பேசவில்லை, ஆனால் என்னை அனுப்பின பிதா நான் என்ன சொல்வேண்டும் என்றும் எப்படி சொல்ல வேண்டும் என்றும் கட்டளையிட்டார்.*

இயேசு இந்த உலகத்தில் ஊழிய செய்தபோது பிதா என்ன பேச சொன்னாரோ அவைகளையே பேசினார். பிதா கட்டளையிட்டபடி நடந்து வெற்றி பெற்றார்.

தேவனுடைய வார்த்தை விசுவாசத்தினாலும் ஜெயத்தினாலும் நிறைந்தவைகள். தேவனுடைய வார்த்தை தொடர்ந்து உன்னில் நிலைக்குமானால் (யோவான் 15:7), உனக்கு விருப்பமானவைகளை நீங்கள் கேட்கும் பொழுது அது உங்களுக்கு கொடுக்கப்படும்.

12. தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்.

*சங்கீதம் 119:172 உமது கற்பனைகள் எல்லாம் நீதியுள்ளவைகள்: ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச் சொல்லும்.*

நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையில் விசுவாசத்தை அல்லது பயத்தை கொண்டுவரும்.

13. இயேசு தம்முடைய வாயினால் யுத்தம் பன்னுகிறார்.

*வெளி 19:15 புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது: இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்: அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*

பூமியில் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயமாயிருக்கிறீர்கள். தேவனுடைய வார்த்தையை பேசி வெற்றிகளை பெறுகிறீர்கள்!

14. தானியேலின் வார்த்தையினிமித்தம் தேவன் தேவதூதனை அனுப்பினார்.

*தானியேல் 10:2 அப்பொழுது அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே: நீ அறிவை அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது: உன் வார்த்தைகளினிமித்தம் நான் வந்தேன்.*

வார்த்தைகள் இல்லாமல் ஒன்றும் நடப்பதில்லை. வார்த்தைகள் வல்லமையுள்ளவைகள்!

15. யோசுவா சூரியனிடம் பேசினார்.

*யோசுவா 10:12 கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தலை நோக்கி பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கிலும் , தரித்து நில்லுங்கள் என்றான்.*

யோசுவா இஸ்ரவேல் புத்திரரை யுத்தத்தில் நடத்தினார். வெற்றி பெருவதற்கு கூடுதலாக பகலின் வெளிச்சம் தேவைப்பட்டது. யோசுவா தேவனிடத்தில் பேசினான் (ஜெபித்தான்). அப்பொழுது தான் தான் என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரைகளை பெற்றார். தேவன் சூரியனிடம் பேசவில்லை என்பதை கவனிக்கவும். அவர் யோசுவாவை சூரியனிடம் பேச சொன்னார். தேவன் ஜெயத்தை கொடுக்கிறார்: ஆனால், நீங்கள் பேசுவதையும் விசுவாசிப்பதையும் செய்ய வேண்டும்.

16. உங்கள் பிரச்சனைகளுக்கு மேலாக தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்.

*யாத்திராகமம் 14:13 அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்: நீங்கள் நின்றுக்கொண்டு இன்றைக்குக்*

*கர்த்தருடைய ,கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பை பாருங்கள். இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.*

*14 கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பன்னுவார்: நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.*

*15 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு.*

*16 நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தை பிளந்துவிடு: அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள்.*

மோசே தேவனிடத்தில் உதவிக்காக அழுதான். தேவன் மோசேயிடம் பிரச்சனையோடு பேசவும் பேசினபடி கிரியை செய்யவும் சொன்னார். மோசே இஸ்ரவேல் புத்திரரை முன்பதாக கடந்து போக சொல்லி, சமுத்திரத்தின் மேல் தன் கோலை நீட்டினான். தேவனுடைய வார்த்தையை மோசே பேசி அதை செயல் படுத்தினபோது இஸ்ரவேல் புத்திரர் செங்கடலில் நடுவில் வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்.

17. தேவனுடைய வார்த்தை அக்கினியை போன்றது.

*எரேமியா 5:14 ஆகையால் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்ன வென்றால்: நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்னபடியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன். அது இவர்களை பட்சிக்கும்.*

*எரேமியா 23:29 என் வார்த்தை அக்கியைப் போலும், கன்மலையை நெறுக்கும் சம்மட்டியைப் போலும், இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

*வெளி 11:5 ஒருவன் அவர்களைச் சேதப்படுத்தமனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்: அவர்களைச் சேதப்படுத்த*

*மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்பட வேண்டும்.*

தேவனுடைய வல்லமையை வார்த்தை வெளிப்படுத்துகின்றன.

18. உங்கள் விருப்பத்தின் படி ஜெபியுங்கள்.

*மாற்கு 11:24 ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

**Weymouth Translation**

*மாற்கு 11:24 ஆதலால், நீங்கள் ஜெபம் பன்னும்போது எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளை பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

| |
|---|
| பெற்றுக்கொள்ளுதல் |
| எடுத்து |
| உடைக்கமுடியாத படி உறுதியாய் எடுத்துக்கொள்ளுதல் |

உங்கள் பிரச்சனையை ஜெபிக்காதீர்கள் (சொல்லாதீர்கள்). பிரச்சனைகளை தீர்க்கும் தேவனுடைய வாக்குத்தங்களை ஜெபியுங்கள் (சொல்லுங்கள்). இருளை எதிர்த்து போராட வேண்டாம். வெளிச்சத்தை வெளிப்படுத்தினால் இருள் அகன்றுவிடும்.

19. தேவனுடைய சித்தத்தின் படி கேளுங்கள்.

*1 யோவான் 5:14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.*

*15. நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால்,*

*அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.*

தேவனுடைய சித்தம் அவருடைய வார்த்தையாகும். அவர் எப்பொழுதும் அவருடைய வார்த்தையோடு கிரியை செய்கிறார்.

20.தேவன் அவருடைய வார்த்தையை செயல்ப்படுத்துகிறார்.

*எரேமியா 1:12 அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே: என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.*

நீங்கள் அறிக்கை செய்து விசுவாசிக்கும் வார்த்தையை தேவன் தீவிரமாய் நிறைவேற்றுவார்.

21. விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதினால் வரும்.

ரோமர் 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

விசுவாசம் தேவனுடைய வார்த்தையிலிருந்து வரும், ஒருவருடைய எண்ணங்களினாலோ அல்லது கருத்தினாலோ அல்ல. தேவனுடைய வார்த்தை இல்லாமல் ஜெபித்தாலோ, பாடினாலோ, கொடுத்தாலோ அல்லது எந்த வித செயலாக இருந்தாலும் விசுவாசம் வராது. தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலே விசுவாசம் உள்ளது!

22. உங்களை குறித்து தேவன் சொன்னவைகளை சொல்லுங்கள்.

*ஆதியாகமம் 17: இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் என்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும்.*

ஆபிராம் என்றால் உயர்த்தப்பட்ட தகப்பன். ஆபிரகாம் என்றால் திரளானவர்களின் தகப்பன். தேவன் ஆபிரகாமை திரளானவர்களின் தகப்பனாக்கினார் என்றார். தேவன் ஆபிராம் என்ற பெயரை ஆபிரகாம் என்று மாற்றினத்திற்கு காரணம் தேவன் சொன்னவைகளையே அபிர்காம் சொல்ல வேண்டும் என்பதற்காக. தேவன் ஆபிரகாமை சாராள் கர்ப்பம் ஆகும் முன்னதாகவே திரளானவர்களின் தகப்பன் என்று அழைத்தார். 17. அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான்

விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல் அழைக்கிறவருமாய் இருக்கிற தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனானான்.

*Amplified Bible*

*ரோமர் 4:16 ஆதலால், (உடைமையாகுதல்) சுதந்தரமானது கிருபையினால் (அளவில்லாத அன்பு) உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது: நியாப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய (முழுவதுமாய்) சந்தியாருக்குமாத்திரமல்ல, நாமெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கு மட்டுமல்ல பிரமாணத்தை பின்பற்றுகிறவர்கள் மற்றும் அதோடு இருப்பவர்கள் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது.*

23. தேவனுடைய வார்த்தையை பேசுவதினால் விதையுங்கள்.

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

நீங்கள் விதைக்கிறவர்கள். தேவனுடைய வார்த்தை விதையாகும்.

24. தேவனுடைய வார்த்தை விதையை போல் ஜீவன் உள்ளது.

*1 பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, எனறென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

தேவனுடைய வார்த்தையானது அழிவில்லாததும் எப்பொழுதும் ஜீவனுள்ளதுமாயிருக்கிறது. நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு முறையாக பராமரிக்கப்பட்டால் நல்ல பலனை எப்பொழுதும் கொடுக்கும். உங்கள் மறுபடியும் பிறந்த ஆவி நல்ல நிலம்.

25. தேவனுடைய வார்த்தையை தியானியுங்கள்.

*யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயகாக: அப்பொழுது நீ உன்*

*வழியை வாய்க்கபண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துக்கொள்வாய்.*

*சங்கீதம் 1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*3.அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்: அவன் செய்தெல்லாம் வாய்க்கும்.*

| <u>தியானம்</u> |
|---|
| சிந்திப்பது |
| ஆழ்ந்து யோசிப்பது |
| குரல் குறைந்த தொனியில் முனுமுனுப்பது |

26. தேவனுடைய வார்த்தையை பேசுவதன் மூலம் உங்கள் இருதயத்தில் எழுதுங்கள்.

*நீதிமொழிகள் 3:3 கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக: நீ அவைகளை உன் கழுத்திலே புண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்.*

*சங்கீதம் 45:1 என் இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்குகிறது: நான் ராஜாவைக் குறித்துப் பாடின கவியைச் சொல்லுகிறேன்: என் நாவு விரைவாய் எழுதுகிறவனுடைய எழுத்தானி.*

தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயங்களில் சிந்தைசெய்யும் திறனே விசுவாசம். உங்கள் நாவுகளாலே உங்கள் இருதயங்களில் தேவனுடைய வார்த்தையை எழுதுங்கள்! நன்மையானாலும் தீமையானாலும் உங்கள் இருதயம் நீங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அதை கவனித்து நீங்கள் சொல்லுகிறவைகளே உங்கள் விருப்பம் என்று நம்புகிறது. நீங்கள் சொல்லுகிறவைகள் எவைகளோ அவைகளை உங்கள் இருதயம் நடைமுறைப்படுத்துகிறது.

27. தேவனுடைய வார்த்தையில் ஜீவன் உள்ளது.

*நீதிமொழிகள் 4:21 அவைக்ள உன் கண்களை விட்டுபிரியாதிருப்பதாக: அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.*

*22. அவைகளைக் கண்டு பிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.*

நீதிமொழிகள் 4:22-ல் "ஆரோக்கியம்" என்றால் மருந்து.

தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு அதிகமாக கவனமும் சிந்தனையும் செலுத்துகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அதில் உள்ள ஜீவனையும் வல்லமையையும் பெறுவீர்கள். உங்கள் வாழ்கையில் தேவனுடைய வார்த்தைக்கு முதலிடம் கொடுங்கள். உங்கள் கண்கள், காதுகள், மனம், இதயம் கர்த்தருடைய வார்த்தையால் நிறைந்திக்கட்டும். நீங்கள் அவைகள் சொல்கிறவைகளை செய்தால் அது வாக்குப்பண்ணினதை உங்களுக்கு செய்யும்.

*யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது: நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

ஜென்ம சிந்தையோடு தேவனுடைய வார்த்தையின் எழுத்துக்களை படித்தால் பலன் கொடுக்காது. தேவனுடைய வார்த்தையின் எழுத்துக்களுக்கு பின்னால் இருக்கும் தேவனுடைய ஆவியே அதற்கு ஜீவனையும் வல்லமையையும் கொடுக்கும்.

28. உங்கள் வார்த்தையை காத்துக்கொள்ளுங்கள்.

*சங்கீதம் 15:1 கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பர்வதத்தில் வாசம் பன்னுவான்?*

*2.உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதார சத்தியத்தை பேசுகிறவன் தானே.*

*3.அவன் தன் நாவினால் புறங்கூறாமலும் தன் தோழனுக்குத் தீங்கு செய்யாமலும், தன் அயலான் மேல் சொல்லப்படம் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.*

*4. ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன்: கர்த்தருக்குப் பயந்தவர்களை கனம் பன்னுகிறான்: ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.*

*5. தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.*

***Moffat Translation***

*சங்கீதம் 15:4 ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன் அல்லது முரடன், நித்தியத்திற்கு பயந்தவர்களை கனம் பன்னுகிறான். ஆணையிட்டதில் இழப்பு வந்தாலும் தவறாதிருக்கிறான்.*

***Jerusalem Bible***

*சங்கீதம் 15:4 ...தான் ஆணையிட்டதில் என்ன நடந்தாலும் தவறாதிக்கிறான்.*

***Psalms for Today***

*சங்கீதம் 15:4 .... தனக்கு என்ன சேதம் வந்தாலும் தான் ஆணையிட்டதில் பின்வாங்குவதில்லை.*

***Amplified Bible***

*சங்கீதம் 15:4 ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன், கர்த்தருக்கு பயந்தவர்களை (தேவனை கனம் பன்னி ஆராதனை செய்கிறவர்கள்) கனம் பன்னுகிறான்: ஆணையிட்டதில் நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.*

தேவனுடைய வார்த்தையை காத்துக்கொள்கிற நபராக இருங்கள். நீங்கள் சொன்னவைகளை செய்வதற்கு என்ன இழப்பு வந்தாலும் நீங்கள் சொல்வதையே செய்யுங்கள். நீங்கள் வார்த்தையை

காத்துக்கொள்ளவில்லை என்றால், தேவன் அவருடைய வார்த்தையை காத்துக்கொள்வார் என்று நம்புவதில் சந்தேகப்படுவீர்கள். தேவனுடைய வார்த்தையை காத்துக்கொள்ளாதது விசுவாசத்திற்கு இடையூறாகும். வார்த்தைகள் மிகவும் வல்லமையும் முக்கியமும் வாய்ந்தது. உங்களால் வைத்துக்கொள்ள முடியாவிட்டால் வாக்கு பண்ணாதீர்கள். வார்த்தைக்கு மரியாதையை வளர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் அவைகளை சரியாக (முறையாக) பயன் படுத்தினீர்களானால் அவைகள் உங்களை ஆசீர்வதிக்கும்.

29. உலர்ந்த எலும்புகளிடம் பேசுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் உலர்ந்த மற்றும் ஜீவனற்ற காரியங்களோடு தேவனுடைய வார்த்தையை பேசினால் அவைகள் ஜீவனுள்ளவைகளாக மறுபடியும் வாழ்வதைக் காணலாம். தேவனுடைய வார்த்தையில் ஜீவன் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்! ஜீவனை பேசுங்கள்!

*எசேக்கியேல் 37:1 கர்த்தருடைய கை என் மேல் அமர்ந்து, கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி,*

*2.என்னை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பன்னினார்: இதோ, பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகா திரளாய்க் கிடந்தது: அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது.*

*3.அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்: அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன்.*

*4.அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையை கேளுங்கள்.*

*5.கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கபன்னுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்.*

*6.நான் உங்கள் மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்: அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்துக்கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல் என்றார்.*

*7.எனக்குக் கட்டளையிட்டபடியே நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்: நான் தீர்க்க தரிசனம் உரைக்கையில் ஒரு இரைச்சல் உண்டாயிற்று: இதோ, அசைவுண்டாகி, ஒவ்வொரு எலும்பும் தன்தன் எலும்போடே சேர்ந்துக்கொண்டது.*

*8.நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, அவைகள் மேல் நரம்புகளும் மாம்சம் உண்டாயிற்று, மேற்புறமெங்கும் தோலினால் மூடப்பட்டது: ஆனாலும் அவைகளில் ஆவி இல்லாதிருந்தது:*

*9. அப்பொழுது அவர் என்னைப் பார்த்து: நீ ஆவியை நோக்கித் தீர்க்க தரிசனம் உரை: மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, ஆவியை நோக்கி: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், ஆவியே, நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்து வந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும் படிக்கு இவர்கள் ஊது என்கிறார் என்று சொல் என்றார்.*

*10. எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன்: அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள்.*

*11. அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே: இதோ அவர்கள் எங்கள் எலும்புகள் உலர்ந்து போயிற்று: எங்கள் நம்பிக்கை அற்றுப் போயிற்று: நாங்கள் அறுப்புண்டு போகிறோம் என்கிறார்கள்.*

*12. ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து, அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால், கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், இதோ, உன் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளை திறந்து, உங்களை உங்கள்*

*பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரப்பன்னுவேன்.*

*13. என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உய்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பன்னும் போது, நான் கர்த்தர் என்று அறிந்துக்கொள்வீர்கள்.*

*14. என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்: நீங்கள் உயிரடைவீர்கள்: நான் உங்களை உங்கள் தேசத்திலே வைப்பேன்: அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துக்கொள்வீர்கள்: இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றாா.*

30. கட்டுகிறதற்கும் கட்டவிழ்ப்பதற்கும் உங்களுக்கு அதிகாரம் உண்டு. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

*மத்தேயு 16:19 பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன்: பூலோகத்தில் நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்தில் கட்டபட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

***Amplified Bible***

*மத்தேயு 16:19 பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன்: பூலோகத்தில் நீ கட்டுகிறது (முறையற்றதும் ஒழுங்கற்றதும்) எதுவோ அது பரலோகத்தில் கட்டபட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது (ஒழுங்குள்ளது) எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

கட்டுகிறதும் கட்டவிழ்க்கிறது தேவனுடைய கையில் அல்ல, உன் கையில் இருக்கிறது.

31. மரணமும் ஜீவனும் வார்த்தையின் வல்லமையில் இருக்கிறது.

*நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள்.*

***Amplified Bible***

*மத்தேயு 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் ஈடுப்படுத்திக் கொள்கிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள் (மரணத்திற்கும் ஜீவனுக்கும்).*

***New American Stnadard***

*நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் வல்லமையிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள்.*

வார்த்தை வல்லமையுள்ளது! நீங்கள் பேசும் வார்த்தைகளின் பலனை நீங்கள் புசிப்பீர்கள். பலருடைய வாழ்கையில் அவர்கள் தொடர்ந்து மரண வார்த்தைகளை பேசுவதால் அவர்களுடைய சூழ்நிலைகளும் செத்ததாயிருக்கும். ஜீவனுடைய வார்த்தைகளை பேசு அதின் பலனை அனுபவியுங்கள்.

32. வார்த்தைகள் கண்ணியை கொண்டுவரலாம்.

*நீதிமொழிகள் 6:2 நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்.*

*Amplified Bible*

*நீதிமொழிகள் 6:2 நீ உன் வாய் மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் பேச்சினால் பிடிப்பட்டாய்.*

*எண்ணாகமம் 14:28 நீ அவர்களோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்கு செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.*

இருபது வயதுடையவர்களும் அதற்கு மேலுள்ள இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் வனாந்திரத்திலேயே மாண்டுப்போனார்கள். தங்களை வெட்டுக்கிளிகளாக எண்ணி இராட்சதற்களை தோற்கடிக்க கூடாமற் போனார்கள். அவர்கள் எதை சொன்னார்களோ, அவைகளே அவர்களுக்கு நேரிட்டது.

நீங்கள் பேசுவதைக் கவனியுங்கள்! தேவன் என்ன சொல்கிறார் என்பதை அறிந்து அவர் சொல்கிறவைகளையே சொல்லுங்கள்.

*யோபு 3:25 நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது.*

*எபேசியர் 4:27 பிசாசிற்கு இடம் கொடாதிருங்கள்.*

| |
|---|
| <u>இடம்</u> |
| காலடி |
| கைப்பிடி |

*யோவான் 14:30 இனி நான் உங்களுடனே அதிகமாய் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.*

பிதா சொன்னவைகளையே இயேசு சொன்னார்: ஆதலால், பிசாசிற்கு அவரிடத்தில் பிடிப்பதற்கு இடமில்லை. தவறான வார்த்தைகள் பிசாசு கிரியை செய்வதற்கு இடம் கொடுக்கிறது. சரியான வார்த்தைகள் தேவன் கிரியை செய்வதற்கு இடம் கொடுக்கிறது.

33. பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் பேச (கேட்க) வேண்டும்.

*மத்தேயு 6:8 அவர்களை போல நீங்கள் செய்யாதிருங்கள்: உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.*

நீங்கள் கேட்கிறதற்கு முன்னதாகவே உங்கள் தேவைகளை தேவன் அறிந்திருக்கிறார்: ஆனால், நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு கேட்கவேண்டும்.

*யாக்கோபு 4:2 நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை: நீங்கள் கொலை செய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக் கூடாமற் போகிறீர்கள்: நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.*

ஏனென்றால் மனிதன் பாவம் செய்து தேவன் கொடுத்த அதிகாரத்திலிருந்து விலகிவிட்டான், சாத்தான் நிகழ்காலத்தில் இப்பிரபஞ்சத்தின் தேவன். பூமியில் உள்ளவர்கள் அவரிடம் கேட்கும் வரை அவர் எதையும் செய்ய சட்டப்படி அதிகாரம் இல்லை.

34. தம்முடைய ஊழியக்காரின் வார்த்தையை தேவன் உறுதிப்படுத்துகிறார்.

*ஏசாயா 44:26 நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாதிபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி: குடியேறுவாய் என்று எருசலேமுக்கும், பட்டணங்களுக்கும் சொல்லி, அவைகளின் பாழான ஸ்தலங்களை எடுப்பிப்பவர்.*

தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துவார்: ஆனால், நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும், பேசி மற்றும் நீங்கள் விசுவாசிப்பது உங்கள் வாழ்க்கையில் வெளிப்படும் வரை அதைக் கட்டவிழ்க்காமல் இருக்க வேண்டும்.

35. தேவன் தம்முடைய விருப்பத்தின் படி பேசி தமது விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார்.

*ஆதியாகமம்1:3 தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று.*

*ஏசாயா 55:11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

36. தேவன் தம்முடைய வார்த்தையினால் உங்கள் வாயை நிரப்ப விரும்புகிறார்.

*சங்கீதம் 81:10 உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே: உன் வாயை விரிவாய் திற, நான் அதை நிரப்புவேன்.*

*சங்கீதம் 107:2 கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு,*

37. தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது.

*லூக்கா 17:20 தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.*

*21. இதோ, இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படகிறதற்கும் ஏதுவிராது: இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.*

*மத்தேயு 16:19 பரலோக ராஜ்யத்தின் திறவு கோல்களை நான் உனக்குத் தருவேன்: பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்.*

பரலோகத்தில் உள்ள தேவனுடைய ராஜயத்தில் உள்ளவைகளை எல்லாம் உங்களுக்குள் இருக்கும் தேவனுடைய ராஜயம் வெளிப்படுத்துவதற்கான திறமை உங்களுக்குள் இருக்கிறது. உங்களுக்குள் இருக்கும் தேவனுடைய ராஜ்யம் ஆதாம் வாழ்ந்த தோட்டத்தை போல் இருக்கிறது. உங்கள் தேவைகளை எல்லாம் கொடுக்க அதனால் முடியும்: ஆனால், தேவனுடைய வாக்குத்தங்களை பேசி உனக்கு விருப்பமானவைகளை விதைக்க வேண்டும்.

38. விசுவாசிக்காமல் தேவனுடைய வார்த்தையை கேட்பது மட்டும் உங்கள் இருதயத்தில் விசுவாசத்தை தானே இயக்காது.

தேவனுடைய வார்த்தையான விதையை பெற்றுக்கொண்டு, உன் இருதயத்தில் வளர செய்ய வேண்டும்.

அவிசுவாசத்தினாலே சகரியா ஊமையானான்.

*லூக்கா 1:13 தூதன் அவனை நோக்கி: சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.*

*லூக்கா 1:18 அப்பொழுது சகரியா தேவ தூதனை நோக்கி: இதை நான் எதினால் அறிவேன்: நான் கிழவனாயிருக்கிறேன்: என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே என்றான்.*

*19. தேவதூதன் அவனுக்குப் பிரதியுத்திரமாக: நான் தேவ சந்நிதிதானத்தில் நிற்கிற காபிரியேல் என்பவன்: உன்னுடனே பேசவும், உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன்:*

*20. இதோ, தகுந்த காலத்தில் நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால், இவைகள் சம்பவிக்கும் நாள் மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாய் இருப்பாய் என்றான்.*

மரியாள் தேவதூதனை விசுவாசித்து தேவ வார்த்தையை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள்.

*லூக்கா 1:31 இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்: அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக.*

*லூக்கா 1:36 அதற்கு மரியாள் இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின் படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.*

வார்த்தையில் ஆவியின் ஜீவன் இருக்கிறது.

*யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது: நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

தேவனுடைய வார்த்தையின் மேல் செயல்பட உங்கள் ஆவி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்காக தேவன் வைத்திருக்கும் எல்லாம் (மறு பிறப்பு, சுகம், விடுதலை, ஞானம், உதவி மற்றும் அனேகம்) உங்கள் ஆவியில் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வதினால் நடைபெறுகிறது. உங்கள் இருதயத்தில் செயல் பட்டும் உங்கள் நாவுகளால் பேசப்படுகிறவைகளும், ஆவிக்குரிய வல்லமையாகிய தேவனுடைய வல்லமை வெளிப்படுத்துகிறது.

*ரோமர் 10:6 விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும் படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?*

*7.அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும் படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்தில் சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி:*

*8.இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரகாசிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ளுவதற்கு கிறிஸ்துவை மறுபடியும் பூமிக்கு கொண்டுவர அவசியமில்லை. உன்னை மீட்கவும் புதுப்பிக்கவும் செய்யவேண்டிய வேலைகள் நிறைவேறிற்று. உங்களுக்கு வேண்டியதெல்லாம் நீங்கள் உங்கள் இருதயம் உங்களை கவனித்து நீங்கள் சொல்கிறவைகளை விசுவாசிக்க வேண்டும். வார்த்தையானது முதலில் உங்கள் வாயிலும் பின்பு உங்கள் இருதயத்திலும் இருக்கிறது.

39. உங்களை குறித்த எல்லாவற்றையும் உங்கள் ஆவி அறியும்.

*1 கொரிந்தியர் 2:11 மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*

உங்கள் வாழ்க்கைக்கு பொருந்தும் வார்த்தைகளை தேவனுடைய ஆவியினிடத்தில் இருந்து உங்கள் ஆவி பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் பேசி விசுவாசிக்கும் விதைகளை இரவும் பகலும் உங்கள் ஆவி கிரியை செய்து அதை நிறைவேற்றும்.

40. நீங்கள் விருப்பப்படும் அறுவடைக்கு விதை விதையுங்கள் (பேசுங்கள்).

*ஆதியாகமம் 1:11 அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள்*

*ஜாதியினபடியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்ககடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.*

*12. பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின் படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின் படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது: தேவன் அது நல்லது என்று கண்டார்.*

*ஆதியாகமம் 8:22 பூமியிலுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைக்காலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.*

நீங்கள் பேசி விசுவாசிக்கும் போது சிருஷ்டிப்பின் வல்லமை வெளிப்படுகிறது! உங்கள் வாழ்க்கையில் தவறான விளைவை ஏற்ப்படுத்தக்கூடிய தவறான வார்த்தைகளை பேசுவதில் இருந்து விலகிக்கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்! தேவனுடைய திட்டத்தையும் உங்களின் தேவைகளையும் கொண்டுவரக்கூடிய முழு வல்லமையும் அதில் இருக்கிறது.

41.மலையை மாத்திரம் அல்ல, நீங்கள் சொல்லும் எல்லா வார்த்தைகளும் நடக்கும் என்று விசுவாசிக்கும் விசுவாசத்தை வளர்த்துக்கொள்ள கற்றக்கொள்ளுங்கள்.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

விசுவாசம் திறம்பட செயல்படுவதற்கு, விசுவாசத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளையே பேசவேண்டும். விசுவாசத்தை வெளிப்படுத்தாத வார்த்தைகளை பேசுவதை நிறுத்துங்கள். எடுத்துக்காட்டாக, ஒரு சிறிய நாயை பார்த்து “அது உன்மையாகவே பெரிய நாய்” என்று சொல்லும் போது உன் விசுவாசம் வெளிப்படாது. குளிராய் இருக்கும் போது “மிகவும் சூடாய் இருக்கிறது” என்று நீங்கள் சொல்லும் போது

உங்கள் விசுவாசம் வெளிப்படாது. உங்கள் எல்லா வார்த்தைகளிலும் விசுவாசத்தை வெளிப்படுத்தி விசுவாசிக்க பழகிக்கொள்ளுங்கள்.

42. கர்த்தருடைய வார்த்தையின் அறிவை பெற்றுக்கொண்டு உங்கள் வாயில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை வையுங்கள்.

*2 பேதுரு 1:3 தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுககும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி,*

*4.இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

43. சுத்த மனசாட்சியில் விசுவாசத்தின் இரகசியம் இருக்கிறது.

*1 தீமோத்தேயு 3:9 விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும்.*

விசுவாசம் கிரியை செய்கிறதுற்கு உங்களுக்கு சுத்த மனசாட்சி அவசியம். தவறான நோக்கமும் மனப்பான்மையும் விசுவாசம் வளருவதற்கு இடையூறாயிருக்கும்.

44. தேவனுடைய வார்த்தையை சிந்திக்க உங்கள் இருதயத்தில் உள்ள விசுவாசமே உங்கள் ஆவியின் திறமையாகும்

*மாற்கு 4:26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து:*

*27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்கு தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.*

*28. எப்படியென்றால், நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய் கொடுக்கும்.*

உங்கள் இருதயத்தில் விதையை விதைப்பது என்பது கேட்பது, விசுவாசிப்பது மற்றும் தேவனுடைய வார்த்தையை பேசுவதும் அடங்கும்.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

*2 கொரிந்தியர் 9:6 பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.*

*கலாத்தியர் 6:7 மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்: மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.*

உங்கள் ஆவியில் நீங்கள் விசுவாசித்து சிந்திக்கும் முன்பதாக மறுபடியும் மறுபடியும் நீங்கள் ஏதாவது ஒன்றை சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும்.

45. விசுவாச ஜெபத்திற்கும் (விண்ணப்பங்கள்) பரிந்து பேசும் ஜெபத்திற்கும் வித்தியாசம் உண்டு.

தேவனுடைய வார்த்தையின் மேல் உனக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் மேல் விசுவாச ஜெபம் இருக்கும். ஒரு முறை மட்டுமே ஜெபிக்கப்பட்டு, அவைகள் வெளிப்படும் வரை அதில் நிற்பதாகும். தொடர்ந்து துதித்து அதற்கு பதில் வரும் வரை அதற்கு நன்றி செலுத்தப்படும்.

பரிந்து பேசப்படும் ஜெபம் மறுபடியும் மறுபடியும் ஜெபிக்கப்படுவதாகும். எடுத்துக்காட்டாக, உங்கள் பொருளாதாரத்தை தடை செய்கின்ற இருளின் வல்லமைகளை கட்டி அதை வல்லமையற்றதாக மாற்றுதல்.

46. தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்தல் கிரியை செய்யும் தேவனுடைய வார்த்தை வெறுமையாய் திரும்பாது.

*ஏசாயா 55:11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

நீங்கள் தேவனுடைய வார்த்தையை பேசும் போது, வார்த்தையை கேட்கிறீர்கள். வார்த்தையை கேட்பது விசுவாசத்தை வரவைப்பதற்கும் வளருவதற்கும் காரணமாயிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை பேசுவதால் அதை உங்கள் உள்ளான இருதயத்தில் வைக்கறீர்கள்.

*நீதிமொழிகள் 4:20 என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி: என் வசனங்களுக்கு உன் செவியை சாய்.*

*21 அவைகள் உன் கண்களை விட்டுப்பிரியாதிருப்பதாக: அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.*

இல்லாதவைகளை இருக்கிறவைகளாக்குவதற்கு வார்த்தையை பேசுங்கள்.

*1 கொரிந்தியர் 1:26 எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பை பாருங்கள்: மாம்சத்தின் படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அனேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.*

*27 ஞானிகளை வெட்கப்படுத்தும் படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துக்கொண்டார்: பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துக்கொண்டார்.*

*28 உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாயெண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துக்கொண்டார்.*

*2 கொரிந்தியர் 4:13 விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.*

*2 கொரிந்தியர் 4:17 மேலும் காணப்படுகிறவைகளல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமாக நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.*

*18. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு என்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நாமெல்லாருக்கும் தகப்பனான்.*

***Wuest Translation***

*ரோமர் 4:17 … இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

***New American Standard***

*ரோமர் 4:17 (அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன்.*

***Amplified Bible***

*அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, (நம்முடைய பிதாவை ஏற்படுத்தினார்) அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவன் (அவர் முன்னறிவித்து வாக்குப்பன்னியிருக்கிறார்).*

*ரோமர் 12:21 நீ தீமையினால் வெல்லப்படாமல, தீமையை நன்மையினால் வெல்லு.*

தேவனுடைய வாக்குத்தங்ககளை உங்கள் வாழ்க்கையில் வரவழையுங்கள், அவைகள் நீங்கள் விரும்பாதவைகளை பிரயோஜனமற்றதாக மாற்றிவிடும்.

*நீதிமொழிகள் 7:4 இச்சக வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கி காப்பாயாக.*

தேவன் சொன்னவைகளை உறுதிப்படுத்தி, வேதத்தில் சொல்லப்பட்டவைகளை சாட்சியாகவும் சத்தியங்களை வெளிப்படுத்துவதும் அறிக்கையிடுதல் ஆகும். பலனைக் கொடுக்கும் விதைகளை வார்த்தைகள். இயேசு செய்த காரியங்கள் முதலாவது தீர்க்கதரிசிகளால் பேசப்பட்டவைகள் ஆகும். முதலாவது தேவனுடைய வார்த்தை பேசப்படாமல் ஒன்றும் நடக்காது.

<u>அறிக்கை</u>

கர்த்தருடைய வார்த்தையை பேசுவதின் மூலமாக என் வாழ்க்கையில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை துவக்கவும் செயல்ப்படுத்தவும் செய்கிறேன்

## வார்த்தைகளில் வல்லமையும் ஜீவனும்

### பாடம் 6

### <u>தேவனுடைய வார்த்தை</u>

தேவனுடைய மீட்பின் திட்டங்களையும் தம்மை வெளிப்படுத்தும் வழியாகவும் இருப்பது தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தை. அவருடைய வார்த்தை ஒரு போதும் மாறாது. அவைகளோடு ஒன்றும் கூட்டப்படவும் குறைக்கவும் முடியாது. உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு தேவைக்கு பதில்களை கொண்டுள்ளதும் நம்பகமானதும் ஆகும்.

1.தேவனால் பொய் சொல்ல முடியாது. அவர் தம்முடைய வார்த்தையை நன்மையாக்குகிறார். அவர் செய்கிறேன் என்று சொன்னவைகளை செய்வார்!

*எண்ணாகமம் 23:19 பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல: மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல: அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ?*

2.தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதினால் ஆசீர்வாதம் வரும்.

*உபாகமம் 28:1 இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின் படியெல்லாம் நீ கவனமாயிருக்கும் படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்.*

*2.நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் போது, இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன் மேல் வந்து உனக்கு பலிக்கும்.*

3.தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிதல் வெற்றியை கொடுக்கிறது.

*யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனாயிருக்கும் படி, இரவும் பகலும்*

*அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கபன்னுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துக்கொள்வாய்.*

4. தேவனுடைய வார்த்தையை தியானிப்பதினால் ஆவிக்குரிய வாழ்கையில் வளர்ந்து பெலனோடும் இருக்கலாம்.

*சங்கீதம் 1:1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரன் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,*

*2.கர்த்தருடைய வேதத்தில் பிரியமாய் இருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*3.அவன் நீர்கால்கள் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்: அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.*

***Amplified Bible***

*சங்கீதம் 1:1 துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் (அவர்களுடைய ஆலோசனை, அவர்களுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள்), பாவிகளுடைய வழியில் நில்லாமலும் (இணங்குகிற மற்றும் செயற்ற), பரியாசக்காரன் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (ஓய்வு மற்றும் இளைப்பாறுதல்),*

*2.கர்த்தருடைய வேதத்தில் (பிரமாணம், கற்பனைகள், தேவனுடைய போதனைகள்), பிரியமாய் இருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற (ஆராய்ந்து படித்து) மனுஷன் பாக்கியவான் (சந்தோஷம், பாக்கியம், செழிப்பு, பொறமைப்படத்தக்க).*

*3.அவன் நீர்கால்கள் ஓரமாய் நடப்பட்டு (எண்ணப்பட்டு), தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்: அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (முதிர்ச்சியை அடையும்).*

*எரேமியா 17:7 கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*

*8.அவன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மனத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.*

***Amplified Bible***

*எரேமியா 17:7 கர்த்தர் மேல் நம்பிக்கை , சார்ந்து, விசுவாசம் வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் (அதிகமாக) பாக்கியவான்.*

*8.அவன் தண்ணீரண்டையில் நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மனத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.*

5.தேவனுடைய வார்த்தையை மாற்றவோ திருத்தவோ முடியாது.

*சங்கீதம் 89:34 என் உடன்படிக்கையை மீறாமலும், உன் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்.*

6.வார்த்தையான (யோவான 1:1) கர்த்தர், உங்கள் அடைக்கலமும் கோட்டையுமாயிருக்கிறார்.

*சங்கீதம் 91:2 நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.*

7.தேவனுடைய வார்த்தை சுகத்தையும் விடுதலையையும் கொடுக்கிறது.

*சங்கீதம் 107.:20 அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.*

8.தேவனுடைய வார்த்தை சமாதானத்தை கொடுத்து இடறுவதை தடுக்கிறது.

*சங்கீதம் 119:165. உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை.*

| |
|---|
| இடறல |
| தடுக்கி விழ செய்வது |

9. தேவனுடைய வார்த்தைக்கு செவிக்கொடுத்தல் ஜீவனையும் சுகத்தையும் கொடுக்கும்

*நீதிமொழிகள் 4:20 என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி: என் வசனங்களுக்கு செவியை சாய்.*

*21அவைகள் உன் கண்களைவிட்டுப்பிரியாதிருப்பதாக: அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.*

*22. அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.*

| |
|---|
| ஆரோக்கியம் |
| மருந்து |

தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை கவனிக்க பாருங்கள். அவரிடத்தில் இருந்து உங்களை விலக்க செய்யும் காரியங்களை அனுமதிக்காதீர்கள். அவருடைய வார்த்தையை கண்டுகொள்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனாயும் மருந்தாயும் இருக்கிறது.

10.தேவனுடைய வார்த்தையை அவமதித்தல் அழிவைக் கொண்டு வரும்.

*நீதிமொழிகள் 13:13 திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்: கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான*

| |
|---|
| அவமதிப்பு-சரியான கவனம் செலுத்தாமை<br>பயப்படுதல்- பயபக்தியுடன் கனம் பன்னுதல் |

11. தேவனுடைய வார்த்தை என்றென்றைக்கு நிலைத்திருக்கும்.

*ஏசாயா 40:8 புல் உலர்ந்து பூ உதிரும்: நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல்லென்று உரைத்தது.*

12. வார்த்தை மழை மற்றும் பனி போன்றது. அது பூமியை நனையப்பன்னி விளைச்சலை கொடுக்கிறது.

*ஏசாயா 55:10 மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும் படிச்செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ*

*11. அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.*

13. தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குகிறவனை கர்த்தர் பார்க்கிறார்.

*ஏசாயா 66:2 என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித்ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனாலும் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கி பார்ப்பேன்.*

14. தேவன் தம்முடைய வார்த்தை நிறைவேற்ற தீவிரமாயிருக்கிறார் (கவனித்துக்கொண்டிருக்கிறார்).

*எரேமியா 1:12 அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே, என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.*

***Amplified Bible***

*எரேமியா 1:12 அப்பொழுது கர்த்தர் நீ கண்டது சரியே, என் வார்த்தையை நான் எச்சரிக்கையாகவும் சுறுசுறுப்பாகவும் நிறைவேற்றுவேன் என்றார்.*

15. தேவனுடைய வார்த்தை அக்கினியை போலவும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறது.

*எரேமியா 23:29 என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவா? என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

நீங்கள் உறுதியாய் பிடித்துக்கொண்டும் விசுவாசித்துக்கொண்டும் இருப்பவைகளை தேவனுடைய வார்த்தை உடைத்து சுட்டெரித்துவிடும்.

16. அப்பத்தினால் மாத்திரம் அல்ல தேவனுடைய வார்த்தையினால் பிழைக்க முடியும்.

*மத்தேயு 4:4 அவர் பிரதியுத்திரமாக: மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.*

உங்களுக்கு பிரியமான வசனங்களை மட்டும் எடுத்து அதில் வாழாதீர்கள். தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் வாழும் போது ஏராளமான வெற்றி கிடைக்கும். வெற்றியுள்ள விசுவாச வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுக்கு கீழ்படிவது அவசியமாகும்.

17. தேவனுடைய வார்த்தையில் செயல்படுங்கள்.

*மத்தேயு 7:24 ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்.*

*25. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை: ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.*

*26. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்.*

*27. பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து: அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது: விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.*

வார்த்தையை கேட்பவராக மட்டுமல்ல, தேவன் சொன்னவைகளுக்கு கீழ்படிந்து கைக்கொள்கிறவர்களுக்கே உண்மையான வெற்றி உண்டு.

18. தேவனுடைய வார்த்தையை பேசுவதும் விசுவாசிப்பதும் சுகத்தை கொடுக்கும்.

மத்தேயு 8:8 நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல: ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

நூற்றுக்கு அதிபதி மிகப்பெரிய விசுவாசமுடையவனாயிருந்தான். மிகப்பெரிய விசுவாசம் பார்வையிலும் உணர்விலும் சார்ந்தது அல்ல. தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறதோ அதிலேயே முற்றிலும் சார்ந்திருக்கிறது.

19. அறுவடையை பெறுவதற்கு தேவனுடைய வார்த்தையை அறிந்துக்கொள்வது அவசியம்.

மத்தேயு 13:23 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான் என்றார்

ஆவிக்குரிய புரிதல் வரும் வரை தேவனுடைய வார்த்தையை படித்து தியானியுங்கள். விதையானது நிலத்தில் இருப்பது போல தேவனுடைய வார்த்தை உங்கள் இருதயத்தில் உருவானால், அது விளைச்சலை உண்டுபன்னும்.

20.தேவனுடைய வார்த்தை மாறாததும் ஒழிந்துபோகாததுமாயிருக்கிறது.

*மத்தேயு 24:35 வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை.*

மனிதர்களும் சூழ்நிலைகளும் மாறலாம். என்றும் மாறாத தேவனுடைய வார்த்தையின் மேல் நீங்கள் சார்ந்திருக்கலாம்!

21. தேவன் தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துகிறார்.

*மாற்கு 16:20 அவர்கள் புறப்பட்டு போய், எங்கும் பிரசங்கம் பன்னினார்கள். கர்த்தர் அவர்களுடன் கூடக் கிரியை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.*

தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்படியுங்கள். அவருடைய வார்த்தையின் படி அவர் கிரியை செய்து உறுதி படுத்துகிறார். உங்களுக்குள்ள அதிக தேவையிலோ அல்லது உங்கள் உணர்வுகளையோ கவனிக்காமல் தேவனுடைய வார்த்தையின் மேல் கவனமாயிருங்கள்.

22. தேவனுடைய வார்த்தை விதையைப் போன்றது.

*லூக்கா 8: 11 இந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம்*

*மாற்கு 4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.*

*15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துக் போடுகிறான்: இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.*

*16. அப்படியே, வசனத்தைக் கேட்டவுடனே அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டும்,*

*17 தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள: இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்ட்டவர்கள்.*

*18 வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப் போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள்.*

*19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.*

*20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள்: இவர்களோ நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.*

தேவனுடைய வார்த்தையில் இருந்து விலக சாத்தான் பல காரியங்களை செய்வான். தேவனுடைய வார்த்தையை காட்டிலும் மக்கள், சூழ்நிலைகள், வாழ்க்கையின் கவலைகள், மற்றகாரியங்களின் மேல் விருப்பங்கள் ஆகியவைகளின் மேல் அதிக கவனம் வைக்காதீர்கள். நிலத்தில் விதையை விதைக்கிறது போல் உங்கள் இருதயத்தில் வசனத்தை விதையுங்கள். அதை நட்டு, தண்ணீர் பாய்ச்சி, பண்படுத்தி, உங்கள் இருதயங்களில் விசுவாசியுங்கள். அவைகள் சொல்லுகிறவைகளை சொல்லுங்கள். நீங்கள் விசுவாசிக்கிறவைகள் நடக்கும் வரை அவைகளை தொடர்ந்து பேசி விசுவாசியுங்கள்.

23. இயேசு வார்த்தை என்று அழைக்கப்படுகிறார்.

*யோவான் 1:1 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, இந்த வார்த்தை தேவனாயிருந்தது.*

*1 யோவான் 5:7 பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.*

*வெளி 19:13 இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்: அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.*

24. வார்த்தை (இயேசு) மாம்சத்தில் வாழ்ந்தார்.

*யோவான் 1:14 அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பன்னினார்:*

*அவருடைய மகிமையைக் கண்டோம்: அது பிதாவுக்கு ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.*

இயேசு நூறு சதவீதம் மனிதனாககும் நூறு சதவீதம் தேவனாகவும் இருந்தார். திரித்துவத்தின் இரண்டாம் நபராக மாம்சத்தில் வாழ்ந்தார்.

25. தேவனுடைய வார்த்தையில் ஆவியும் ஜீவனும் இருக்கிறது.

*யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது: நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.*

உயிர்ப்பித்தல்- ஜீவனை கொடுத்தல்

26. உண்மையான சீஷர்கள் தேவனுடைய வாத்தையில் நிலைத்திருப்பார்கள்.

*யோவான் 8:31* இயேசு *தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்:*

தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து வாசித்து, படித்து, விசுவாசித்து பேசுங்கள்.

27. தேவனுடைய வார்த்தையின் படி செய்கிறவர்களுக்கு தேவன் செவிக்கொடுக்கிறார்.

தேவனுடைய வார்த்தையே தேவ சித்தம். அவருடைய வார்த்தை செய்ய சொல்லுகிறதை நீங்கள் செய்யும் போது, அவருடைய சித்தத்தை செய்கிறீர்கள். அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து அவரை தொழுதுகொள்கிறவர்களுடைய ஜெபத்தை அவர் கேட்டு பதிலளிக்கிறார்.

*யோவான் 9:31 பாவிகளுக்கு தேவன் செவிசொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்: ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிக்கொடுப்பார்.*

28. வார்த்தைக்கு கீழ்படிதல் மகிழ்ச்சியை கொடுக்கும்.

*யோவான் 3:17 நீங்கள் இவைகளை அறிந்திருக்கிற படியால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.*

29. அப்போஸ்தலர்கள் ஜெபத்திற்கும் வார்த்தைக்கும் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

*அப்போஸ்தலர் 6:4 நாங்களே ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள்.*

30. உங்கள் இருதயங்களில் தொடர்ந்து உங்கள் இருதயங்களில் வைத்திருங்கள்.

*யோவான் 13:17 நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.*

31. சுவிசேஷம் (வார்த்தை) எல்லா விசுவாசிகளுக்கும் தேவனுடைய வல்லமையாகும்.

*ரோமர் 1:16 கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்: முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது.*

இரட்சிப்பில் மறுபிறப்பி, சந்தோஷம், சமாதானம், செழிப்பு, ஜெயம், சுகம், விடுதலை மற்றும் பலவற்றை உள்ளடக்குகிறது.

32. தேவனுடைய வார்த்தை விசுவாசத்தின் வார்த்தை என்று அழைக்கப்படுகிறது. வார்த்தையில் விசுவாசம் இருக்கிறது.

*ரோமர் 10:8 இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.*

தேவனுடைய வார்த்தையை உன் வாயில் பேசி இருதயத்தில் விசுவாசித்தால் விசுவாசம் வளரவும் பெருகவும் செய்கிறது.

33. வார்த்தையை கேட்பது விசுவாசத்தை வரச்செய்கிறது.

*ரோமர் 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.*

விசுவாசம் சத்தமாக கத்துவதினாலோ, கடின உழைப்பினாலோ அல்லது மத சடங்குகளினாலோ வருவதில்லை. தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலேயே வரும்.

34. பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை கேட்டு விசுவாசிப்பவர்களுக்கு வல்லமை உண்டாகிறது.

*1 கொரிந்தியர் 1:18 சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது.*

சிலுவையைப் பற்றி பிரசங்கிப்பதே வார்த்தையை பிரசிங்கிப்பதாகும்.

35. உங்களுக்குள்ளேயே தேவனுடைய வார்த்தையை பேசுவதினால் ஆவியினாலே இடைவிடாமல் நிரம்ப செய்யும்.

*எபேசியர் 5:18 துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து:*

*19.சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி,*

நிரப்பப்படுதல் -கிரேக்க பொருள்- நிரப்பப்படுகிற செயல்

36. வார்த்தை சபையை சுத்தப்படுத்துகிறது.

*எபேசியர் 5:26 தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்,*

பரிசுத்தம் - வேறுபிரித்தெடுத்தல் - உலகத்தில் இருந்து பிரித்தெடுத்தல்

எபேசியர் 5: 26 –ல் “அதை” என்ற வார்த்தை சபையை குறிக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. ஒட்டிக்கொள்ள பிரயாசப்படும் உலகத்தின் கறைகளிருந்து கிறிஸ்தவர்கள் கழுவப்பட்டு

சுத்திகரிக்கப்பட வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதின் மூலம் கழுவப்படுதலும் சுத்திகரிக்கப்படுதலும் நடை பெறும்!

37. வார்த்தையானது பூரணமாக வாசமாயிருக்க வேண்டும்.

*கொலோசேயர் 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரை பக்தியுடன் பாடி:*

38. தேவனுடைய வார்த்தை சத்தியமானது

*1 தெசலோனிக்கேயர் 2:13 ஆகையால், நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்ட போது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்: அது மெய்யாகவே தேவ வசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.*

தேவன் ஆணையும் பெண்ணையும் அவருடைய வார்த்தையை பேச உபயோகிக்கிறார். மனிதனுடைய வார்த்தையாக அல்ல, தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

39. தேவனுடைய வார்த்தையில் ஊழியம் செய்கிறவர்கள் இரட்டிப்பான கனத்தை பெற்றுக்கொள்கிறார்கள்.

*1 தீமோத்தேயு 5:17 நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ண வேண்டும்.*

40. தேவனுடைய வார்த்தையை படியுங்கள்.

*2 தீமோத்தேயு 2:15 நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை*

*தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இரு.*

41. வார்த்தை தேவனால் தேவ ஆவியினால் அருளப்படுகிறது மற்றும் அது பிரயோஜனமுள்ளது.

*2 தீமோத்தேயு 3:16 வேத வாக்கியங்களெல்லம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக,*

*17. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும் சீர்த்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

42. மற்றவர்களுடைய கருத்துக்களையோ, அரசியலையோ, தனிப்பட்டாவர்களின் யோசனைகளையோ பிரங்கிக்காமல் தேவனுடைய வார்த்தையை பிரசங்கியுங்கள்.

*2 தீமோத்தேயு 4:2 சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு: எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துக்கொண்டு, புத்திசொல்லு.*

43. வார்த்தை எல்லாவற்றையும் தாங்குகிறது.

*எபிரேயர் 1:3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொருபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபன்னி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.*

*Amplified Bible*

*எபிரேயர் 1:3 தேவனுடைய மகிமையின் பிரகாசமும் (ஒளியின் வடிவம், வெளிப்படும் ஒளி அல்லது தெய்வீக பிரகாசம்), (தேவனுடைய) சாயலின் பூரணமான சொருபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்திலே*

*தாங்குகிறவராய் நிலைநிறுத்துகிறவராய் காக்கிறவராய் முன்னே நகர்த்துகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களையும் குற்ற உணர்ச்சியின் சுடரொளியையும், உண்டுபன்னி உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்.*

44. வார்த்தை பயன் தருவதற்கு வார்த்தை விசுவாசத்தோடு கலக்கப்படவேண்டும்.

*எபிரேயர் 4:2 ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்பட்டது: கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.*

45. தேவனுடைய வார்த்தை ஜீவன் மற்றும் வல்லமையுள்ளது.

*எபிரேயர் 4:12 தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.*

*Amplified Bible*

*எபிரேயர் 4:12 தேவன் பேசுகிற வார்த்தையானது ஜீவனும் வல்லமை நிறைந்ததாயும் (செயல்படுத்துகிற, பலனை அளிக்கிற, ஆற்றலுடைய மற்றும் தாக்கம் உடைய): இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் (அழிவில்லாத) ஆவியையும், கணுக்களையும் ஊணையும் (நம்முடைய இயற்கையான முக்கியமான பகுதி), இருதயத்தின் நினைவுகளையும் எண்ணங்களையும் நோக்கங்களையும் வெளிப்படுத்தியும் சலித்தும் பகுப்பாய்ந்தும் நியாயப்படுத்தியும் இருக்கிறது.*

46. உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே வடிவமைக்கப்பட்டன.

எபிரேயர் 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

47. தேவனுடைய வார்த்தையை பெற்றுக்கொள்ளுதல் உங்கள் ஆத்துமாவை ( சிந்தை, விருப்பம் மற்றும் உணர்வுகள்) விடுவிக்கும்.

*யாக்கோபு 1:21 ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.*

*22. அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன் படி செய்கிறவர்களாயும் இருங்கள்.*

*23. என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின் படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தை பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்:*

*24. அவன் தன்னைத்தோனே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்.*

*25. சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.*

*Amplified Bible*

*யாக்கோபு 1:21 ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டதும் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற*

*வசனத்தைச் சாந்தமாய் (நற்குணம், தன்னடக்கம்) ஏற்றுக்கொள்ளுங்கள் (உங்கள் இருதயத்தில்)*

48. வார்த்தை ஜீவனுள்ளது.

*1 பேதுரு 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

*Amplified Bible*

*1 பேதுரு 1:23 அழிவுள்ள (விதை, விந்து) வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான நித்திய தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே (புதுப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்).*

49. தேவனுடைய வார்த்தையின் மேல் செயல்ப்படுதல் ஆவிக்குரிய வாழ்கையில் வளர செய்யும்.

*1 பேதுரு 2:2 சகல துர்க்குணத்தையும், சகல வித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு,*

50. தேவனுடைய வாக்குத்தத்தத்தில் (அவருடைய வார்த்தை) பங்குக்கொள்வதினால், அவருடைய தெய்வீக தன்மையில் பங்குள்ளவர்களாகிறீர்கள்.

*2 பேதுரு 1:4 இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

ஏற்கனவே உங்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் சத்தியங்களை ஸ்திரமாய் பிடித்துக்கொள்ள உறுதியாய் இருங்கள். சத்தியம் என்ன என்று ஏற்கனவே அறிந்தவைகளை தொடர்ந்து பிடித்துக்கொள்ளுங்கள்.

51. நிகழ்கால சத்தியத்தில் நிலை உறுதிப்படவேண்டும்.

*2 பேதுரு 1:12 இதினிமித்தம், இவைகளை நீங்கள் அறிந்திரும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில்*

*உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்.*

52. தேவனுடைய வார்த்தையில் செயல் படும்பொழுது தேவனுடைய அன்பு வளர்ந்து பெலன் கொடுக்கும்.

*1 யோவான் 2:5 அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்: நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்.*

பூரணம் - முதிர்ச்சி

53. தேவனுடைய வார்த்தையை கடைப்பிடிப்பது உங்கள் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும்.

*1 யோவான் 3:22 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்.*

54. தேவனுடைய வார்த்தை பேசுவதோ அல்லது சாட்சியிடுவதோ உங்களை மேற்கொள்ள உதவும்.

*வெளி 12:11 மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.*

55. தமது வாயில் இருந்து வெளிப்படும் தேவனுடைய வார்த்தையின் மூலம் அவருடைய சத்துருக்களை அர்மெகதோன் யுத்தத்தில் அழிப்பார்.

*வெளி 19:15 புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது: இருப்புக் கோலால் அவர்களை அரசாளுவார்: அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.*

56. ஜீவனுள்ள வார்த்தையாகிய இயேசுவாகிய கன்மலையின் மேல் தேவன் தம்முடைய சபையை கட்டுகிறார்.

*மத்தேயு 16:18 மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்: பாதாளத்தின் திறவுக் கோள் அதை மேற்கொள்வதில்லை.*

57. சூழ்நிலை எப்படிப்பட்டதாய் இருந்தாலும் வார்த்தையின் மீது செயல்ப்படவேண்டும்.

*லூக்கா 5:5 அதற்குச் சீமோன்: ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை: ஆகிலும் உம்முடைய வார்த்தையின் படியே வலையைப் போடுகிறேன் என்றான்.*

58. வார்த்தை உங்கள் வழிகாட்டடியாகும்.

*யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயகாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கபன்னுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துக்கொள்வாய்.*

**Amplified Bible**

*யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக: இதில் எழுதியிருக்கிறவைகளின் படியெல்லாம் நீ செய்யக் கவனாயிருக்கும் படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயகாக: அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கபன்னுவாய், அப்பொழுது ஞானமாயும் புத்திமானாகவும் நடந்துக்கொள்வாய்.*

*சங்கீதம் 19:11 அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்: அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு.*

*எச்சரிக்கை- நினைப்பூட்டு-ஏவப்படு-போதிக்கப்படு*

*சங்கீதம் 23:3 அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.*

*சங்கீதம் 32:8 நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.*

*சங்கீதம் 37:23 நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின் மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.*

*உத்தரவிட்டார் -வழிநடத்து-நிலைநிறுத்து*

*சங்கீதம் 119:9 வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பன்னுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால் தானே.*

*சங்கீதம் 119:11 நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.*

*சங்கீதம் 119:24 உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமும், என் ஆலோசனைக்காரருமாயிருக்கிறது.*

*சங்கீதம் 119:30 உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்.*

***Amplified Bible***

*சங்கீதம் 119:30 உம்முடைய வசனத்தின் பிரசித்தமும் வெளியேறுதலும் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும் (நிதானத்தல் மற்றும் உணருதல்).*

*நீதிமொழிகள் 6:22 நீ நடக்கும் போது அது உனக்கு வழிகாட்டும்: நீ படுக்கும் போது அது உன்னைக் காப்பாற்றும்: நீ விழிக்கும்போது அது உன்னோடே சம்பாஷிக்கும்.*

*23. கட்டளையே விளக்கு வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவ வழி.*

**New English Bible**

*நீதிமொழிகள் 6:23 கட்டளையே விளக்கும் வெளிச்சத்தை போதிக்கும்: போதகமும் சிட்சையும் ஜீவ வழி.*

**The Old Testament: An American Translation.**

*நீதிமொழிகள் 6:23 கட்டளையே விளக்கு மற்றும் வேதமே வெளிச்சம், ஒழங்குக்குரிய அறிவுரைகளே ஜீவ வழி.*

**Jerusalem Bible**

*நீதிமொழிகள் 6:23 கொள்கைகளே விளக்கு, போதகமே வெளிச்சம்: சிட்சையும் ஒழுங்கும் ஜீவ வழி.*

*ஏசாயா 30:21 நீங்கள் வலதுபுறமாய் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே செல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.*

*லூக்கா 1:79 நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கதினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கறது என்றான்.*

*யோவான் 8:32 சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.*

*2 தீமோத்தேயு 3:16 வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியைஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக,*

*17 அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துக்கொள்ளுதலுக்கும் சீர்திருந்த்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.*

தேவனுடைய வார்த்தை விதை போன்றது. உங்கள் இருதயத்தில் நடுங்கள். விசுவாச செயலினாலும் அறிக்கையினாலும் நீர் பாய்ச்சுங்கள். உங்கள் அறிக்கை எழுத்தப்பட்ட வார்த்தையின்

அடிப்படையில் மாத்திரம் அல்ல ஜீவனுள்ள வார்த்தையாகி கிறிஸ்துவின் மேலும் இருக்க வேண்டும். வாக்குத்தத்தங்கள் உங்கள் வாழ்கையில் நிறைவேறும் வரை தேவனுடைய வார்த்தையை உறுதியாய் பிடித்து உங்கள் விசுவாசத்தை நீங்களே கட்டுகிறவர்களாயிருங்கள்.

<u>அறிக்கை</u>

வேதாகமம் பரிசுத்தமுள்ளதும், எழுதப்பட்ட தேவனுடைய வார்ததையாகவும், விசேஷமானதாகவும் நம்புகிறேன். வேதாகமம், தேவன் என்னுடனே பேசுகிறது ஆகும். என்னுடைய சரீரம் ஆவி மற்றும் ஆத்துமாவிற்கான முழு மீட்பின் திட்டத்ததை அதில் அடக்கியுள்ளது. என் வாழ்கையின் ஒவ்வொரு தேவையையும் சந்திக்க எல்லா பதில்களையும் பெற்றுள்ளது.

## வார்த்தையின் ஜீவனும் வல்லமையும்

### பாடம் 7

### எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல் செய்யுங்கள்

ஒரே நேரத்தில் விசுவாசத்தோடும் முறுமுறுப்போடும் உங்களால் இருக்க முடியாது. முறுமுறுப்பும் குறை சொல்லுதலும் உங்கள் விசுவாசத்தை செயல்ப்படுத்தாதபடிக்கு குறையுள்ளதாகவோ அல்லது நிறுத்தவோ அல்லது இடையூறாகவோ இருக்கலாம். விசுவாசத்தில் வெற்றி பெற வேண்டுமானால் உங்கள் வாழ்கையில் இருந்து முறுமுறுப்பை எடுத்து விடவேண்டும்.

1. எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமல் செய்யுங்கள்.

*பிலிப்பியர் 2:14 எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.*

***Amplified Bible***

*பிலிப்பியர் 2:14 எல்லாவற்றையும் முணுமுணுப்பு மற்றும் குறை கண்டுப்பிடித்தல் மற்றும் குற்றங்கூறுதல் (தேவனுக்கு எதிராக) மற்றும் கேள்விகள் கேட்டு மற்றும் சந்தேகப்படுதல் (உங்களுக்குள்ளேயே) இல்லாமல் செய்யுங்கள்.*

முறுமுறுப்பதும் சினங்குதலும் அவருடைய வார்த்தை வாக்குப்பன்னினதை தேவன் செய்வார் என்ற நம்பிக்கையும் விசுவாசமின்மையும் வெளிப்படுத்தும். முறுமுறுத்தலோடும் குற்றப்படுத்துதலோடும் விசுவாசத்தில் இருக்க முடியாது. நீங்கள் விசுவாசத்தில் இருந்தால், தேவன் அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்றும் அது நிறைவேறும் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

2.முறுமுறுப்பு தோல்விக்கு கதவை திறக்கிறது.

*1 கொரிந்தியர் 10:10 அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்: அது போல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்.*

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏற்பட்ட வாதையின் என்பது சதவீதம் அவர்களுடைய முறுமுறுப்பினாலேய உண்டானது. அவிசுவாசத்தோடு தங்கள் சூழ்நிலைகளைப் பார்த்தார்களே ஒழிய தேவன் சொன்னவைகளை விசுவாசிக்கவில்லை.

| முறுமுறுப்பு | | | |
|---|---|---|---|
| புகார் | குறைக்கூறுதல் | முனகல் | உறுமுதல் |
| புலம்புதல் | உதைத்தல் | அதிருப்தி | எரிச்சல |
| அலறல் அல்லது ஊளையிடு | பலமின்றிக் குறை கூறும் வகையில் சினுங்கு | குறையுள்ள வார்த்தைகளை பேசு | பிடிவாதமாய் இருத்தல் குறிப்பாக வார்த்தையில் |
| குவலை | | | |
| கலக்கமடைதல் | கோபம் | ஆவல் | இணங்காதிருத்தல |
| பொறுமையிழந்த | எரிச்சல் | எரிச்சலூட்டு | குவலை |

*எண்ணாகமம் 14:28 நீ அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.*

*29. இந்த வனாந்திரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்: உங்களில் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்.*

*எண்ணாகமம் 16:41 மறுநாளில் இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து: நீங்கள் கர்த்தரின் ஜனங்களைக் கொன்றுப் போட்டீர்கள் என்றார்கள்.*

*42 சபையார் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடி ஆசரிப்புக் கூடாரத்துக்கு நேரே பார்க்கிற போது, மேகம் அதை மூடினது, கர்த்தரின் மகிமை காணப்பட்டது.*

*43. மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்துக்கு முன்பாக வந்தார்கள்.*

*44. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி:*

*45. இந்தச் சபையாரை விட்டு விலகிப் போங்கள்: ஒரு நிமிஷத்தில் அவர்களைஅதமாக்குவேன் என்றார்: அவர்கள் முகங்குப்புற விழுந்தார்கள்.*

*46. மோசே ஆரோனை நோக்கி: நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின மேல் தூபவர்க்கம் இட்டு: சீக்கிரமாய்ச் சபையினிடத்தில் போய், அவர்களுக்காகப் பாவ நிவர்த்தி செய்: கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது, வாதை தொடங்கிற்று என்றான்.*

*47. மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்: ஜனங்களுக்குள்ளே வாதை தொடங்கியிருந்தது: அவன் தூபவர்க்கம் போட்டு, ஜனங்களுக்காகப் பாவ நிவர்த்தி செய்து,*

*48. செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்: அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.*

*49. கோராகின் காரியத்தினிமித்தம் செத்தவர்கள் தவிர, அந்த வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறு பேர்.*

*எண்ணாகமம் 17:5 அப்பொழுது நான் தெரிந்துக்கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்: இப்படி இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்பை என்னை விட்டு ஒழியப்பன்னுவேன் என்றார்.*

*எண்ணாகமம் 17:10 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: ஆரோனின் கோல் அந்தக் கலகக்காரருக்கு விரோதமான அடையாளமாகும் பொருட்டு, அதைத் திரும்பவும் சாட்சிப் பெட்டிக்கு முன்னே கொண்டு போய் வை: இப்படி எனக்கு விரோதமாய் முறுமுறுப்பதை ஒழியப்பன்னுவாய், அப்பொழுது அவர்கள் சாகமாட்டார்கள் என்றார்.*

நீங்கள் முறுமுறுக்க ஆரம்பித்தால், நிறுத்துங்கள்! மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பை கேளுங்கள் மேலும் தேவனை விசுவாசித்து நம்பத் திரும்புங்கள்.

3.ஆசீர்வதிக்கப்பட விருப்பமும் கீழ்படிதலும் அவசியம்.

*ஏசாயா 1:19 நீங்கள் மனம்பொருந்திச் செவிக்கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.*

சிலர் கீழ்படிகிறார்கள் ஆனால் விருப்பத்துடன் அல்ல. அவர்கள் என்ன செய்ய நினைக்கிறார்களோ அதை செய்கிறார்கள்: ஆனால் அதே சமயத்தில் புலம்பி, எரிச்சல் அடைந்து, குறைக்கூறுகிறார்கள்.

*1 நாளாகமம் 28:9 என் குமாரனாகிய சாலோமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி: கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்: நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கு கைவிடுவார்.*

*2 கொரிந்தியர் 8:12 ஒருவனுக்கு மனவிருப்பம் இருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின் படியே அங்கீகரிக்கப்படும்.*

4.எரிச்சல் அடையாதீர்கள்

*சங்கீதம் 37:1 பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே: நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமைக் கொள்ளாதே.*

*2. அவர்கள் புல்லைப் போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும் பூண்டைப் போல் வாடிப்போவார்கள்.*

*3. கர்த்தரை நம்பி நன்மை செய்: தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துக் கொள்.*

*4. கர்த்தரிடத்தில் மனமகிழ்சியாயிரு: அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.*

துன்மார்க்கர் ஆசீர்வதிக்கப்படுவதை குறித்து ஆச்சரியமும் கலக்கமும் அடையாதீர்கள். அவர்களுடைய ஆசீர்வாதம் முடிவுக்கு வரும். தேவனை நம்பி அவருக்கு கீழ்படிபவர்கள் என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

***Amplified Bible***

பிலிப்பியர் 4:6 நீங்கள் ஒன்றுக்குங் எரிச்சலோ அல்லது கவலைப்படாமல், எல்லா சூழ்நிலையிலும் எல்லவாற்றிலும் ஜெபத்தோடும் விண்ணப்பங்களோடும் (குறிப்பான விண்ணப்பம்), ஸ்தோத்திரத்தோடு உங்கள் தேவைகளை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்.

எரிச்சலடைந்து கவலைப்படுவதை நிறுத்துங்கள். எல்லாவற்றிற்காகவும் தேவனிடத்தில் ஜெபியுங்கள். உங்கள் நன்மைக்கே அவர் கிரியை செய்கிறார் என்பதினால் நன்றி செலுத்துங்கள்.

5. முறுமுறுப்பில்லாமல் உபசரியுங்கள்.

*1பேதுரு 4:9 முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.*

*யாக்கோபு 5:9 சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்: இதோ, நியாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.*

எரிச்சல் -குறை சொல்

6.முறுமுறுப்பு ஆதி திருச்சபையின் முதல் கலவரத்தை உண்டாக்கியது.

*அப்போஸ்தலர் 6:1 அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதைவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்பட வில்லையென்று எபிரேயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.*

எவ்வளவு சரியான காரணமாயிருந்தாலும் கர்த்தர் முறுமுறுப்தற்கான எந்த காரணத்தையும் ஒப்புக்கொள்ளவோ நியாயப்படுத்துவதோ இல்லை. முறுமுறுப்பு எப்பொழுதுமே நியாயந்தீர்க்கப்படத்தக்கதும் சபிக்கப்பட்டதுமாகும்.

7. தேவன் விரோதத்தை வெறுக்கிறார்.

*நீதிமொழிகள் 6:16 ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள்.*

*17. அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை.*

*18.துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால்,*

*19. அபத்தம் பேசும் பொய்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபன்னுதல் அகிய இவைகளே.*

8. உங்கள் கோபத்தை கட்டுப்படுத்துங்கள்.

*நீதிமொழிகள் 16:32 பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்: பட்டணத்தைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.*

***New International Version***

*நீதிமொழிகள் 16:32 யுத்தம்பன்னுகிறவனைப் பார்க்கிலும் சாந்தமுள்ளவன் உத்தமன்: பட்டணத்தைப் பார்க்கிலும் தன் கோபத்தை அடக்குகிறவன் உத்தமன்.*

*1 தெசலோனிக்கேயர் 5:8 பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும்*

*மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கடவோம்.*

***<u>New Internation Version</u>***

*1 தெசலோனிக்கேயர் 5:8 பகலுக்குரியவர்களாகிய நாமோ சுயத்தை அடக்குகிறவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக்கொண்டிருக்கடவோம்.*

9. இயேசு சிலுவையில் அறைப்பட்டதற்கான நோக்கம் காழ்ப்புணர்ச்சி (பொறாமை) ஆகும்.

மத்தேயு 27:18 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து,

10 லோத்துவின் மேய்ப்பர்களிடையில் சண்டை வந்ததால் ஆபிரகாம் லோத்துவிடம் இருந்து பிரிய வேண்டியதாயிற்று.

தேவனுக்கு கீழ்ப்படியும் போது மட்டுமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதம் முழுமையாக உங்களிடத்தில் வரும்.

*ஆதியாகமம் 3:7 ஆபிரகாமுடைய மந்தை மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்திலே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்திலே குடியிருந்தார்கள்.*

*8.ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், உன் மேய்ப்பருக்கும் என் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்: நாம் சகோதரர்.*

*9.இந்த தேசமெல்லாம் உனக்கு முன் இருக்கிறதல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம்: நீ இடதுபுறம் போனால், நான் வலது புறம் போகிறேன்: நீ வலது புறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன் என்றான்.*

*ஆதியாகமம் 13:14 லோத்து ஆபிராமை விட்டுப் பிரிந்த பின்பு, கர்த்தர் ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ*

*இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும், மேற்கேயும் நோக்கிபார்.*

*15.நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும் படி கொடுத்து,*

*16. உன் சந்ததியைப் பூமியின் தூளைப் போலப் பெருகப்பன்னுவேன்: ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்.*

*17. நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்து திரி: உனக்கு அதைத் தருவேன் என்றார்.*

11.எரிச்சல் தீமை செய்ய முனைகிறது.

*சங்கீதம் 37:8 கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு: பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.*

**Amplified Bible**

*சங்கீதம் 37:8 கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு: பொல்லாப்புக் காரியங்களை செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்.*

12. துன்பக்காலங்களில் அமைதியாய் இருங்கள்.

*சங்கீதம் 94:12 கர்த்தாவே, துன்மார்க்கனுக்குக் குழி வெட்டப்படும் வரைக்கும், நீர் தீங்கு நாட்களில் அமர்ந்திருக்கப்பன்னி,*

*13.சிட்சித்து, உம்முடைய வேதத்தைக் கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான்.*

**Amplified Bible**

*சங்கீதம் 94:12 கர்த்தாவே, துன்மார்க்கனுக்கு ஒழுக்கக்கேடுள்ள குழி வெட்டப்படும்வரை (தவிர்க்கமுடியாத), நீர் தீங்கு நாட்களில் அமைதியாக அமர்ந்திருக்க பெலன் கொடுக்கிறீர்.*

*13. சிட்சித்து, உம்முடைய பிரமாணத்தை போதித்து நீர் ஒழுங்குப்படுத்துகிற மனுஷன் பாக்கியவான் (சந்தோஷம், வெற்றி)*

*பிலிப்பியர் 4:11 என் குறைச்சலினால் நான் இப்படி சொல்லுகிறதில்லை: ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன்.*

## Amplified Bible

*பிலிப்பியர் 4:11 என் குறைச்சலினால் நான் இப்படி சொல்லுகிறதில்லை: ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க (மனஉளைச்சல் இல்லாத அல்லது மனஅமைதியாய் இருக்கும் சூழ்நிலையில் திருப்பதி) கற்றுக்கொண்டேன்.*

நீங்கள் எதை உங்கள் வாயில் அறிக்கை செய்கிறீர்களோ உங்கள் இருயங்களில் கிரியை செய்கிறது. தேவன் எதை செய்கிறேன் என்று சொன்னாரோ அதன் மேல் நம்பிக்கையற்ற தன்மையை முறுமுறுப்பும் குறைசொல்லுதலும் வெளிப்படுத்துகிறது. உங்கள் அறிக்கையிடுதலில் அலைக்கடிக்கின்ற தன்மையின் முடிவு என்னவென்றால் தேவனுடைய வாக்குத்தத்தை மறுத்து அவைகள் செயல்படவும் மறுக்கிறீர்கள்.

சரியோ அல்லது தவறோ சிலர் மட்டுமே தங்கள் ஆவியில் அதின் பலனை உணருகிறார்கள். உங்கள் இருதயத்தின் மீதும் உங்கள் சத்துருக்களின் மீதும் பேசப்பட்ட வார்த்தையின் விளைவை நீங்கள் உணரவேண்டும்.

<u>அறிக்கை</u>

என்னுடைய அன்றாட பேச்சில் முறுமுறுப்பும் குறைசொல்லுதலும் ஒரு பகுதி அல்ல. என் உதடுகளினாலோ அல்லது என் சிந்தையிலோ சந்தேகம் மற்றும் பயத்திற்குரிய எண்ணங்களை நான் அனுமதிக்கமாட்டேன். கிறிஸ்துவின் சிந்தையை நான் உடையவனாயிருந்து என் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தையை குறித்தே பேசுவேன்.

## வார்த்தையில் ஜீவனும் வல்லமையும்

பாடம் 8

## தேவனுடைய வார்த்தையை பேசுங்கள்

தேவனுடைய வார்த்தையை தேவனுடைய சித்தம். தேவனுடைய வார்த்தை உங்களுக்காக என்ன சொல்லுகிறதோ அவைகளை உங்களுடையதாக்கி கொள்வது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

*1 யோவான் 5:14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின் படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.*

*15. நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.*

நீங்கள் ஜெபிக்கும் போது, உங்களை குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அவைகளை சத்தமாக சொல்லுங்கள். நீங்கள் சொல்லுகிறவைகள் உங்களுடையது என்று உங்கள் இருதயத்தில் நம்பினால் உங்கள் வாழ்கையில் அவைகள் நிறைவேறும். வார்த்தையை சுறுக்கமாக பேசுங்கள். உங்கள் அனுதின வழக்கமாக தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்வதை பழகிக்கொள்ளுங்கள்.

*மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்ன படியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

*24. ஆதலால் நீங்கள் ஜெபம் பன்னும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

## ***Weymouth Translation***

*மாற்கு 11:24 நீங்கள் ஜெபம் பன்னி கேட்கிறவைகளைெல்லாம் பெற்றுக்கொண்டேன் என்று விசுவாசத்தோடு கேட்டால் அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.*

*மத்தேயு 21:22 விசுவாசத்தோடு நீங்கள் ஜெபத்தில் கேட்கிறவைகளெல்லாவற்றையும் பெற்றுக்கொள்வீர்கள்.*

<u>வேதத்தின் அடிப்படையில் விசுவாசம் நிறைந்த அறிக்கைகள்</u>

1. கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை நிலைநிறுத்துவதற்காக நான் செல்வத்தை சம்பாதிக்க திறமையை எனக்கு அளிக்கிறார். உபாகமம் 8:18
2. நான் தலை, வால் அல்ல நான் மேலே இருக்கிறேன். கீழே அல்ல உபாகமம் 28:13.
3. இந்த பிரச்சனைகளால் எனக்கு பயமோ கலக்கமோ இல்லை. இந்த யுத்தம் என்னுடையதல்ல, தேவனுடையது. 2 நாளாகமம் 20:15,17.
4. கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என்னுடைய பெலன் நெகேமியா 8:10.
5. கர்த்தருடைய வார்த்தையை இரவும் பகலும் தியானிக்கிறேன். நான் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியை தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பேன்: நான் செய்வதெல்லாம் வாய்க்கும். சங்கீதம் 1:2,3
6. கர்த்தர் காருணியம் என்னும் கேடகத்தினால் என்னைச் சூழ்ந்துக்கொள்வார் சங்கீதம் 5:12
7. கர்த்தர் என் கன்மயலயம், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார். சங்கீதம் 18:2
8. கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். அவர் என்னை போஷிக்கிறார், வழிநடத்துகிறார், எந்த குறையும் வராதபடி கேடகமாக இருக்கிறார். சங்கீதம் 23:1
9. நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்: தேவரீர் என்னோடே கூட

இருக்கிறீர்: உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் சங்கீதம் 23:4

10. கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் சங்கீதம் 27:1
11. கர்த்தர் எனக்குப் போதித்து, நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காட்டி: என் மேல் கண்ணை வைத்து எனக்கு ஆலோசனை சொல்லுவார். சங்கீதம் 32:8
12. என்னுடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது: அவரே எனக்குத் துணையும் கேடகமுமானவர். சங்கீதம் 33:20
13. கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்த எனக்கு சூழப் பாளயமிறங்கி என்னை விடுவிக்கிறார். சங்கீதம் 34:7
14. கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்: அவர் என் இருதயத்தின் வேண்டுதல்களை எனக்கு அருள் செய்வார். சங்கீதம் 37:4
15. பொல்லாப்பு எனக்கு நேரிடாது, வாதை என் கூடாரத்தை அனுகாது. என் வழிகளிலெல்லாம் என்னை காக்கும்படி, எனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக கட்டளையிடுவார். சங்கீதம் 91:10,11
16. கர்த்தர் என் அடைக்கலம், என் தேவன் என் கன்மலையுமானவர் சங்கீதம் 94:22.
17. நான் கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்: அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவேன். அவர் என் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, என் நோய்களையெல்லாம் குணமாக்கி, என் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, என்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார். சங்கீதம் 103:2-4.
18. கர்த்தருடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங்கீதம் 119:105.
19. எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் இருந்து எனக்கு ஒத்தாசை வரும். சங்கீதம் 121:1,2.
20. நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்: என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்: உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும். சங்கீதம் 138:7.

21. கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார். சங்கீதம் 138:8.

22. என் சுயபுத்தியின் மேல் சாயாமல், என் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, என் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்வேன்: அப்பொழுது என் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீதிமொழிகள் 3:5-6.

23. கர்த்தர் என் நம்பிக்கையாயிருந்து, என் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார். நீதிமொழிகள் 3:26.

24. நான் கர்த்தரின் வார்த்தைகளைக் கவனித்து அவர் வசனங்களுக்கு என் செவியைச் சாய்க்கிறேன். அவைகள் என் கண்களைவிட்டு பிரியாதிருக்கும்: அவைகளை என் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்வேன். அவைகளைக் கண்டு பிடித்த எனக்கு அவைகள் ஜீவனும் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமாய் இருக்கிறது.நீதிமொழிகள் 4:20-22.

25. கர்த்தருடைய கட்டளையே எனக்கு விளக்கு, அவர் வேதமே எனக்கு வெளிச்சம், போதக சிட்சையே ஜீவ வழி. நீதிமொழிகள் 6:23

26. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வேன். நீதிமொழிகள் 7:5

27. என் பாதையில் ஜீவனுண்டு, நான் நீதியில் நடக்கிறேன். நீதியின் பாதையில் ஜீவன் உண்டு: அந்தப் பாதையில் மரணம் இல்லை. நீதிமொழிகள் 12:28.

28. மனதின் யோசனைகள் மனுஷனுடையது: நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும். என் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவிக்கிறேன். நீதிமொழிகள் 16:1,3.

29. மனதின் திட்டங்கள் மற்றும் ஒழுங்கான எண்ணங்கள் மனிதனுக்கு சொந்தம்: ஆனால் நாவின் ஞானமான பதில் கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது. என் கிரியைகளை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கிறேன். முழுமையாக அவரிடம் அதை ஒப்புக்கொடுக்கிறேன். அவர் தம் சித்தத்திற்கேற்ப என் எண்ணங்களை மாற்றி என் திட்டங்களை நிறைவேற்றுகிறார். நீதிமொழிகள் 16:1,3

30. கர்த்தரின் நாமம் பலத்த துருகம்: நான் நீதிமான், அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பேன் நீதிமொழிகள் 18:10

31. என் பின்னே வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை என் காதுகள் கேட்கும் ஏசாயா 31:21
32. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார் . ஏசாயா 40:29
33. கர்த்தருக்கு காத்திருக்கிற நானோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவேன்: நான் ஓடினாலும் இளைப்படைய மாட்டேன், நடந்தாலும் சோர்ந்து போகமாட்டேன். ஏசாயா 40:39.
34. நான் தண்ணீர்களைக் கடக்கும் போது அவர் என்னோடு இருப்பார்: நான் ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் என் மேல் புரளுவதில்லை: நான் அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பேன்: அக்கினிஜுவாலை என் பேரில் பற்றாது. ஏசாயா 43:2
35. கர்த்தர் புதிய காரியத்தைச் செய்கிறார்: அவர் வனாந்திரத்திலே வழியையும் அவாந்திரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குகிறார் ஏசாயா 43:19.
36. பிரயோஜனமாயிருக்கிறதை எனக்குப் போதித்து, நடக்கவேண்டிய வழியிலே என்னை நடத்துகிறார். ஏசாயா 48:17.
37. என்னோடு வழக்காடுகிறவர்களோடே அவர் வழக்காடி, என்னை இரட்சித்துக்கொள்வார்: ஏசாயா 49:23
38. அவருடைய தழும்புகளால் குணமானேன் ஏசாயா 53:5
39. என் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்: என் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். ஏசாயா 54:13
40. எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் ஏசாயா 54:17.
41. கர்த்தர் எனக்கு ஆரோக்கியம் வரப்பன்னி, என் காயங்களை ஆற்றுவார். எரேமியா 30:17
42. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவேன், நான் அறியாததும் எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை எனக்கு அறிவிப்பார். எரேமியா 33:3

43. நான் கிருபையுண்டாவதாக கிருபையுண்டாவதாக என்று சத்தமிடுவேன், பெரிய பர்வதம் சமபூமி ஆகும். பலத்தினாலும் அல்ல, பாக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும். சகரியா 4:6-7.

44. நான் விசுவாசமள்ளவனாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்கிறேனோ அவைகளையெல்லாம் பெற்றுக்கொள்வேன் . மத்தேயு 21:22

45. விசுவாசிக்கிற எனக்கு எல்லாம் கூடும் மாற்கு 9:23.

46. நான் சொன்னபடியே நடக்கும் என்று என் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் நான் சொன்னபடியே ஆகும் என்று விசுவாசிக்கிறேன். மாற்கு11:23

47. நான் எதற்காக ஜெபித்தேனோ அதை பெற்றுக்கொண்டேன் என்று விசுவாசிக்கிறேன். அது எனக்கு கிடைக்கும் மாற்கு 11:24

48. எனக்கு கர்த்தரின் குரல் தெரியும் அவரை நான் பின் தொடருவேன். அந்நியர்களின் சத்தத்தை நான் அறிவேன் ஆகையால் அவர்களை பின் தொடரமாட்டேன். யோவான் 10:4-5.

49. பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் எனக்கு போதித்து, கர்த்தர் எனக்குச் சொன்ன எல்லாவற்றையும் எனக்கு நினைப்பூட்டுவார். யோவான் 14:26.

50. இவைகள் எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் செயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. ரோமர் 8:3

51. நான் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, என் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுவேன். ரோமர் 12:2

52. எனக்கு கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது. 1 கொரிந்தியர் 2:16.

53. நான் நீணட் காலம் பொறுமையுடன் இருப்பேன், எனக்கு பொறாமை இல்லை மற்றும் நான் பொறாமையில் கொதிக்க மாட்டேன். நான் பெருமைப்பட மாட்டேன், நான் அகந்தையோடு காணப்படுவதில்லை. நான் கர்வம் கொள்ளவில்லை. பெருமிதம் கொள்ள வில்லை அல்லது

பெருமையில் பூரிப்படையவில்லை. நான் முரட்டுத்தனமாகவோ அல்லது பொய்யாகவோ இருக்கிறதில்லை. என்னுடைய சொந் உரிமைகளை அல்லது வழிகளை நான் வலியுறுத்துகிறதில்லை. நான் சுயத்தை தேடுகிறவனோ அதிகமாக ஒட்டிக்கொள்கிறவனோ, பயப்படுகிறவனோ அல்லது சீற்றம் கொண்டவனோ இல்லை. எனக்கு செய்த தீங்கை நான் எண்ணுகிறதில்லை. நான் பட்ட கஷ்டத்தில் கவனம் செலுத்துகிறதில்லை. அநீதியல் மகிழ்ச்சி அடையவில்லை. சரியானதும் உண்மையும் நிறைந்திருக்கும்போது நான் சந்தோஷப்படுகிறேன். என்னில் உள்ள தேவ அன்பு எல்லாத்தையும் சகிக்கவும், எல்லார் இடத்திலேயும் நல்லதை வெளிப்பட வைக்க கூடும் என்பதை விசுவாசிக்கிறது. 1 கொரிந்தியர் 13:4-7.

54. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை: அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நான் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவானாகும் படிக்கு, என் நிமித்தம் தரித்திரரானாரே. 2 கொரிந்தியர் 8:9.

55. எனக்கு எல்லாவற்றிலும் சம்பூரணம் இருக்கிறது. நற்கிரியைகளிலும் பெருகுவேன். 2 கொரிந்தியர் 9:8

56. அவர் கிருபை எனக்கு போதும். 2 கொரிந்தியர் 12:8.

57. நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து கிறிஸ்து என்னை மீட்டுக்கொண்டார். ஆபிரகாமின் ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தினால் எனக்கு இருக்கிறது. கலாத்தியர் 3:12-14

58. நான் கேட்பதைவிடவும், நினைப்பதை விடவும், என் உயர்ந்த ஜெபங்கள், ஆசைகள், எண்ணங்கள், நம்பிக்கைகள அல்லது கனவுகளைவிட தேவன் எனக்கு மிகுதியாய்ச் செய்யத்தக்கவர். தேவனின் வல்லமை எனக்குள் உள்ளது. எபேசியர் 3:20.

59. பிசாசிற்கு சந்தர்ப்பம் அல்லது இடம் கொடுக்க நான் மறுக்கிறேன். எபேசியர் 4:27

60. எந்தவொரு தவறான அல்லது மாசுபடுத்தும் மொழி அல்லது தீய, கெட்ட பேச்சு என் வாயிலிருந்து வெளியே வருவதில்லை. மற்றவர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நல்லது மற்றும் தேவை மற்றும் சந்தர்ப்பத்தில்

பொருத்தமானது போன்ற நல்ல பேச்சு மட்டுமே பேசுவேன். எபேசியர் 4:29.

61. நான் நம்பிக்கையின் கேடயத்தை எடுத்துக் கொண்டு எதிரிகளை எதிர்த்து நிற்கிறேன் எபேசியர் 6:16.
62. என்னில் நற்கிரியைத் தொடங்கினவர் எதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நிச்சயமாக நம்புகிறேன். பிலிப்பியர் 1:6.
63. என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு. பிலிப்பியர் 4:13.
64. என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவிற்குள் மகிமையிலே நிறைவேற்றுவார். பிலிப்பியர் 4:19
65. கிறிஸ்துவின் சமாதானம் நடுவராக செயல்படுவதை நான் அனுமதிக்கிறேன் , என் மனதில் எழும் எல்லா கேள்விகளுக்கும் இறுதி முடிவெடுப்பதற்கும் முடிவு செய்வதற்கும் நான் அனுமதிக்கிறேன்.
66. ஆண்டவர் எனக்கு உதவி செய்கிறார் என்று தைரியமாகச் சொல்கிறேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று நான் பயப்படேன். எபிரேயர் 13:6
67. நானே கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறேன். நான் சாத்தானை எதிர்த்து நிற்கிறேன், அவன் என்னை விட்டு ஓடி விடுகிறான். யாக்கோபு 4:7
68. இயேசுவின் காயங்கள் (தழும்புகளால்), நான் ஏற்கனவே குணமாகிவிட்டேன். 1 பேதுரு 2:24.
69. தேவன் மற்றும் இயேசுவை அறிகிற அறிவினாலே கிருபையும் சமாதானமும் என்னில் பெருகும். 2பேதுரு 1:2.
70. உலகத்தில் உள்ளவனை பார்க்கலும் என்னில் உள்ளவர் பெரியவராக இருப்பதால் நான் மேற்கொள்கிறவனாக இருக்கிறேன் . 1 யோவான் 4:4.
71. 71 நான் ஆட்டுக்குட்டியின் (இயேசு கிறிஸ்து) இரத்தத்தினாலும், என் சாட்சியின் வசனத்தினாலும் எதிரிகளை மேற்கொண்டுவிட்டேன். வெளி 12:11.

அறிக்கை

நான் தினமும் தேவனுடைய வார்த்தையை பேசி அறிவிக்கிறேன். சொல்லப்பட்ட வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை நான் எடுத்து, சத்துருவை மேற்கொள்ள அதை தடுக்கும் ஆயுதமாக பயன்படுத்துவேன்.

# ஒப்புதல் வாக்குமூலம்

(தேவனுடைய வார்த்தையில் இருந்து எடுக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில்)

1.தேவனுடைய வார்த்தையின் உண்மை தன்மையை நீங்கள் அறிக்கையிட்டால் மட்டுமே அவைகள் உண்மையாகும்.

பாவ அறிக்கையை உணருதல் பின்தொடருகிறது.

யோபு 22:28 நீர் ஒரு காரியத்தை நிருணயம்பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும் உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.

உங்களுடைய வாழ்கையில் நீங்கள் விரும்பும் தேவனுடைய வார்த்தையோ அல்லது வாக்குத்தத்தமோ ஆரம்பிப்பது உங்களை பொறுத்ததாகும்.

2.உங்களுடைய வாயினாலே அறிக்கை செய்கிறவைகளே உங்கள் இருதயத்தில் (ஆவியில்) கிரியை செய்யும்.

யாக்கோபு 1:26 உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.

நன்மையானாலும் தீமையானாலும் நீங்கள் அறிக்கையிடுகிறவைகளை உங்கள் ஆவியானது கிரியை செய்து நடப்பிக்கும்.

3. தேவனுடைய வார்த்தையை அறிக்கை செய்து அதன் மேல் செயல்படுங்கள்

யாக்கோபு 2:26 அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

உங்களுடைய விசுவாசத்திற்கு ஏற்ற கிரியை இல்லாவிட்டால் உங்களுடைய விசுவாசம் செத்ததாயிருக்கும்.

வார்த்தை அல்லது கிரியை அல்லது இரண்டிலும் செயல்பாடு இருக்க வேண்டும்.

4. உங்களுடைய அறிக்கையில்லாமல் தேவனிடத்தில் கிரியை இல்லை.

ஏபிரேயர் 3:1 இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்

அறிவிப்பின் ஆதாரமே அறிக்கையாகும். நீங்கள் பேசுகிற மற்றும் அறிவிக்கிற தேவனுடைய வார்த்தைக்கு இயேசுவே பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.

ஏற்கனவே தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிறவைகளுக்காக தேவனிடம் கேட்டு ஜெபிக்காதீர்கள். அவைகள் உங்களுடையது என்பதை அவரோடு கூட அறிக்கையிட்டு ஏற்றுக்கொள்ளுங்கள்.

1 யோவான் 5:14 நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.

15 நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

அவருடைய வார்த்தையில் அது இருந்தால், அது அவருடைய சித்தம் என்று தேவன் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

6. வெற்றிப்பெற்றவர் என்று அறிக்கையிடும் வரை நீங்கள் வெற்றிபெற்றவர் அல்ல.

உங்களுடைய வாயில் பேசு உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கிறவைகளை நீங்கள் பெற்றக்கொள்வீர்கள்

ரோமர் 8:37 எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக்கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.

7. சொந்தமாக்கி கொள்வதற்கு முன்னானது அறிக்கையாகும்.

ரோமர் 10:10 நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

இரட்சிப்பிற்கு முன்பாக அல்லது இரட்சிப்போடு அறிக்கை உண்டாகிறது. சொந்தமாக்கி கொள்வதற்கு முன் அறிக்கை செயல்படுகிறது.

உங்கள் அறிக்கையை விசுவாசம் பின்தொடருகிறது. உங்கள் அறிக்கைக்கு மேலாக விசுவாசம் ஒருபோது எழும்புவதில்லை. உங்கள் விசுவாசம் அல்லது அவநம்பிக்கை ஆகிய இரண்டுமே உங்களுடைய அறிக்கையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

8. உங்கள் விசுவாசம் எடுத்து செல்கிற பாரத்தின் தளத்தை உங்கள் அறிக்கை கட்டுகிறது.

மாற்கு 11:23 எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

நீங்கள் அறிக்கையிடுகிறவைகளையே உங்கள் விசுவாசம் வெளிப்படுத்தும்.

9. தேவன் யார், அவருக்குள் நீங்கள் யாராயிருக்கிறீர்கள், அவர் உங்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பவைகள் எல்லாம் எப்போதும் அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு முன்பதாகும்.

பிலிப்பியர் 4:13 பின்பு அவர் அவர்களை நோக்கி: இந்த உவமையை நீங்கள் அறியவில்லையா? அறியாவிட்டால் மற்ற உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?

தேவன் கிரியை செய்தவற்கு அவருடைய வார்த்தையை நீங்கள் அறிவிக்க உங்களுக்காக காத்திருக்கிறார். உங்கள் உடைமைகளுக்கு முன்னானது அறிக்கையிடுதல் ஆகும்.

10. உங்கள் அறிக்கையிடுதலுக்கு மேலாக நீங்கள் ஒருபோதும் எழும்ப முடியாது.

எபிரோயர் 4:14 வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்.

தேவனுடைய வார்த்தையில் இருந்து நீங்கள் அறிக்கையிடுபவைகள் வெளிப்படுவதை காணும் வரை உறுதியாக பற்றிக்கொள்ளுங்கள்.

11. தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறதும், அவைகளின் பிரகடனத்தை சாட்சிப்படுத்துகிறதும் மற்றும் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை சாட்சியிடுகிறதுமே அறிக்கையாகும்.

தேவனோடு சேர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் வெளிப்படும்வரை அவைகளை மறுபடியும் மறுபடியும் அவர் என்ன சொன்னாரோ அவைகளை சொல்லுங்கள்.

2 கொரிந்தியர் 1:20 எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.

12. சிலருடைய வார்த்தையினால் உண்டாகும் பாதிப்புகளை நன்மை அல்லது நேர்மாறானவைகள் இவையிரண்டையும் தங்களுடைய ஆவியில் உணர்ந்திருக்கிறார்கள்.

நிலையற்ற உங்கள் அறிக்கையினால் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும் அவைகளின் கிரியைகளையும் நீங்கள் மறுதலிக்கிறீர்கள்.4

யாக்கோபு 1:6 ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்ஞ சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்.

7. அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

8. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

13 தோல்வியை மற்றும் தாழ்வு மனப்பான்மையை குறித்து பேசுவது உங்களுடைய ஆரம்பத்தையே பறித்துக்கொள்கிறது.

கிறிஸ்துவிற்குள் நீங்கள் யார் என்பதையும் உங்களுடையது என்ன என்பதையும் அறிக்கை செய்தால் உங்களுக்கு வெற்றி உண்டாகும்.

யோசுவா 1:8 இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.

14. அறிக்கையிடுதல் இல்லாமல் சொந்தமாக்கிக்கொள்ளுதல் இல்லை

எபிரேயர் 10:23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

தேவனுடைய வார்த்தை சொல்லுகிறவைகள் உங்களுக்கு சொந்தமானவைகள் என்று உரத்த சத்தத்தோடு நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். உங்களுக்கு பதிலாக இயேசு அவைகளை பிதாவினிடத்தில் கொண்டு செல்கிறார்

15. தேவனுடைய வார்த்தையை பயன்படுத்தி நீங்களே விசுவாசத்தை கட்டுங்கள். குறைந்த தொனியில் முனுமுனுப்பது தியானம் என்னப்படும். தேவனுடைய வார்த்தையில் உங்கள் வாயினால் முனுமுனுக்கும் போது அதை நீங்கள் கேட்டு விசுவாசத்தை வளர்த்துக்கொள்ளலாம்.

சங்கீதம் 1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

3. அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.

16. ஜீவனுள்ள வார்த்தையின் மேல் உங்கள் அறிக்கை இருக்கிறது.

வெளிப்பாடுகளை நீங்கள் காண்பதற்கு முன்பதாக உங்கள் ஜெபங்களுக்கு பதில்களாக உங்களுடைய உதடுகளை துதியினால் நிரப்புங்கள்.

ரோமர் 4:20 தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,

தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்காக அவைகள் வெளிப்படுவதற்கு முன்பே ஆபிரகாம் அவைகளுக்காக தேவனை துத்தித்து விசுவாசத்தில் வல்லவனானான்.

17. தேவனுடைய வார்த்தையின் உறுதியான தைரியத்தோடு அறிக்கையிடும்போது புதிதான மனஉறுதியை அது கொடுக்கிறது.

சங்கீதம் 91:2 நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

18. பூமியில் உங்கள் தேவைகளை சந்திக்க பரலோகத்தில் இருந்து தேவனுடைய மீட்பின் போக்குவரத்தின் வழியாய் உங்கள் உதடுகள் இருக்கிறது.

சங்கீதம் 119:113 உம்முடைய வாக்கின் நியாயத்தீர்ப்புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன்.

19. இயேசுவின் ஊழியத்தில் வார்த்தையினாலே சுகம்பெற்றவர்கள் அநேகராயிருந்தார்கள்.

மத்தேயு 8:13 பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

உங்களுடைய இருதயத்தில் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து உங்கள் வாயினாலே அறிக்கை செய்யும் போது விசுவாசம் வெளிப்படும்.

20. விசுவாசம் நிறைந்த வார்த்தைகளினாலே தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தார்.

எபிரேயர் 11:3 விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.

21. வார்த்தைகளினாலே லாசரு உயிரோடு எழுப்பப்பட்டான்.

யோவான் 11:43 இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்.

ஜீவனுள்ள வார்த்தைகளை இயேசு பேசி லாசருவை உயிரோடு எழுப்பினார்.

22. உங்களுடைய ஆவியினாலே கிரியை செய்யும் வார்த்தைகளை பயன்படுத்த கற்றுக்கொண்டு வெல்லுங்கள்.

சந்தேகம் மற்றும் பயம் நிறைந்த வார்த்தைகள் உங்கள் வாயில் இருந்து வருவதற்கு அனுமதிக்காதிருங்கள்.

நீதிமொழிகள் 16:23 ஞானியின் இருதயம் அவன் வாய்க்கு அறிவையூட்டும் அவன் உதடுகளுக்கு அது மேன்மேலும் கல்வியைக்கொடுக்கும்.

சாபத்திற்காக அல்ல உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க உங்கள் வாயை பயன்படுத்துங்கள்.

23. நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்களுக்கு விசுவாசம் அல்லது பயம் வருவதற்கு காரணமாயிருக்கலாம்.

விசுவாசம் அல்லது பயத்தை வார்த்தைகள் கடக்கசெய்கிறது.

தேவன் உங்களுக்காக கிரியை செய்யவும் அல்லது உங்களுக்கெதிரா பிசாசுகள் கிரியை செய்யவும் வார்த்தைகள் அதிகாரம் அளிக்கிறது.

நீதிமொழிகள் 18:21 மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.

24. உங்கள் வார்த்தைகள் உங்களை ஆதிக்கம் செலுத்துகிறது.

வார்த்தையின் மேல் கிரியை செய்ய ஜாக்கிரதையாயிருங்கள். சூழ்நிலைகளிலும் உங்கள் உணர்வுகள் என்ன சொல்கிறதென்பதிலும் உங்கள் அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள்.

எபிரேயர் 10:23 அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.

25. உங்கள் கிரியைகளினாலே நீங்கள் ஜெயத்தை பெறலாம் அல்லது ஜெயத்தை பெற்றுக்கொள்தில் தடுக்கப்படலாம்.

மத்தேயு 12:37 ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்.

பேசப்படாத வார்த்தைகள் பிறக்காமலேயே மரித்து போகம். நீங்கள் என்ன சொல்ல வேண்டும் என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமையோடு உங்களுக்கு உண்டு.

26. பெரும்பாடுள்ள ஸ்திரி, "அவருடைய வஸ்திரதொங்கலை நான் தொடுவேனேயாகில், நான் முழுவதும் சுகமாவேன்" என்று சொல்வது மட்டுமல்லாமல் தன் வார்த்தைகளுளோடு கிரியையையும் செய்தாள் . கூட்ட நெருக்கத்தில் அவள் முன்னேறி சென்று இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாள்.

மாற்கு 5:27 இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி

28 ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.

29. உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்.

விசுவாசம் கிரியை செய்யகூடியதாகும். விசுவாசம் கிரியை செய்வதற்கு செயல்படுத்தப்பட வேண்டும்.

27. விசுவாசிப்பதை விட அதிகமாக செயல்படுங்கள். தேவனுடைய வார்த்தையில் செயல்படுங்கள். தேவனுடைய வார்த்தை என்ன செய்ய சொல்கிறதோ அதையே செய்யுங்கள்.

வார்த்தைகள் மற்றும் கிரியைகள் இல்லாமல் விசுவாசம் இல்லை அல்லது அந்த விசுவாசம் செத்ததாயும் கனியற்றதுமாயும் இருக்கிறது.

யாக்கோபு 2:17 அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.

28. மற்றவர்களுடைய விசுவாசத்தில் இருந்தோ அல்லது மனதின் நிலையில் இருந்தோ செயல்பட வேண்டாம்.

மாமிச சிந்தையில் இருந்து வேதாகம விசுவாசம் வெளிப்படாமல், இருதயத்தில் இருந்து வெளிப்பட வேண்டும்.

29. தேவனுடைய வார்த்தையை கேட்பதினாலே விசுவாசம் வரும்.

ரோமர் 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

தேவனுடைய வார்த்தையை நீங்களே சொல்லி கேட்பதே உங்களுடைய விசுவாசம் பெலப்படுவதற்கு சிறந்த முறையாகும்.

30. விசுவாசம் வெளிப்படுவதற்கு தேவனுடைய வல்லமையினாலே செயல்ப்படுத்தப்பட வேண்டும்.

லூக்கா 17:12 அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, குஷ்டரோகமுள்ள மனுஷர் பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்திலே நின்று:
13. இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள்.
14. அவர்களை அவர் பார்த்து: நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

31. உங்கள் விசுவாசம் உங்கள் அறிக்கைக்கு அப்பாற்பட்டு வளராது.

உங்களிடம் பணம் வருவதற்கு முன்னதாகவே உங்களிடத்தில் பணம் உள்ளது என்று விசுவாசம் அறிக்கை செய்யும்.

சரீரத்தில் வலி இருக்கும் போதே பூரண சுகத்தை விசுவாசம் அறிக்கை பன்னும்.

நீங்கள் விடுவிக்கப்படாமல் இருக்கும் போதே விசுவாசம் ஜெயத்தை அறிக்கை செய்யும்.

உங்களுடைய ஐந்து இயற்கையான உணர்வுகளினால் அல்ல, விசுவாசக் கண்களினாலேயே நீங்கள் காரியங்களை பார்க்கிறீர்கள்.

ரோமர் 4:17 அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல்

அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்.

32. உங்களுடைய வார்த்தைகள் உங்கள விசுவாசத்தை தீர்மானிக்கிறது.

மத்தேயு 8:8 நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.

உங்களுடைய வாயினாலே அறிக்கை செய்து உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கும் போது உங்கள் விசுவாசம் பேசுகிறதாயிருக்கிறது.

அறிக்கை

என்னுடைய தியானமும் என் வாயின் வார்த்தைகளும் தேவனுடைய வாத்தையின் கொள்கை மற்றம் பிரமாணத்தின் அடிப்படையில் வழிடத்தப்படுகிறது.

மாற்கு 9:23 இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்.